ஆரம்பக்கல்வி

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JAN 1960
MADRAS

ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 20	டிசம்பர் 1959	இதழ் 12

தரம் தாழ்ந்தது ஏன்?

நம் நாட்டின் கல்வித் துறையைப் பற்றிச் சென்ற சில ஆண்டுகளாகவே பெரியதோர் குறை கூறப்பட்டு வருகிறது. கல்லூரிக் கல்வியைப்பற்றியும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியைப்பற்றியும் மட்டுமல்ல, ஆரம்பப் பள்ளிக் கல்வியைப் பற்றியும் இந்தக் குறை தெரிவிக்கப்பட்டு வருகிறது. நாடாள வந்துள்ள அமைச்சர்களும இந்தக் குறையைக் கூறுகிறார்கள். பத்திரிகைகள் பலவற்றின் ஆசிரியர்களாகத் திகழ்பவர்களும் இந்தக் குறையைக் கூறுகிறார்கள். அரசியல் உலகத்தில் தலைவர்களாக விளங்குபவர்களும் இந்தக் குறை கூறும் பணியில் இறங்குகிறார்கள். பெற்றோர்கள் உலகத்திலும் பலர் இந்தப் பணியில் ஈடுபாடு கொண்டவர்களாக இலங்குகிறார்கள். பட்டமளிப்பு விழாக்களில் சிறப்புச் சொற்பொழிவாற்ற வருகிற பெருந்தகைகளிற்கூடச் சிலர் இந்தத் திருப் பல்லாண்டைப் பாடும் திருப்பணியில் மூழ்கிவிட்ட திருவாளர்களாகக் காட்சியளிக்கிறார்கள். “இந்தக் காலத்திலே தரப்படுகிறதே கல்வி, இதுவும் ஒரு

கல்வியா? நாங்களெல்லாம் சிறு பிள்ளைகளாக இருந்தபோது தரப்பட்டதே அது அல்லவா கல்வி! கல்வி என்றால் அப்படி அல்லவா இருத்தல் வேண்டும்" என்று தங்கள் காலத்துக் கல்வியின் தனிப் பெருஞ் சிறப்பை எடுத்துக் காட்டி எக்காளமிட்டுவிட்டு, அதே மூச்சில் இந்தக் காலத்துக் கல்வியின் வீழ்ச்சியைப்பற்றி வேதனைக் கீதம் பாடுபவர்கள் ஏராளமாகத்தான் இருக்கிறார்கள் இன்றையதினம்.

ஆனால் ஒன்று! கல்வியின் தரம் சிதைந்துவிட்டது—குறைந்துவிட்டது என்று பேசுபவர்களும் ஏசுபவர்களும் ஏராளமாக இருக்கிறார்களே தவிர, கல்வியின் தரம் குறைந்தது ஏன் என்பதைப்பற்றி ஆராய்ந்தறிய ஆசைப்படுபவர்களும், குறைந்த தரத்தை உயர்த்துவது எப்படி என்பதைப்பற்றி எண்ணிப் பார்த்து முடிவெடுக்க முனைபவர்களும், எடுத்த முடிவுகளைச் செயற்படுத்துவதில் ஈடுபடுபவர்களும் மிக மிகச் சிலராகத்தான் இருக்கின்றனர். நோய் இன்னது என்பதை மட்டும் கண்டறிந்து, நோய் இருக்கிறது—நோய் இருக்கிறது என்று மட்டும் சொல்லிக்கொண்டே இருந்தால் போதுமா? நோயின் காரணத்தைக் கண்டு, அக்காரணத்தை நீக்கும் முறை கண்டு, அந்த முறையைச் செயல் துறைக்குக் கொண்டுவர வேண்டாமா? ஆனால் ஏனோ தெரியவில்லை, பெரும்பாலோர், குறை கூறும் படலத்தோடு தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று கருதி அந்த அளவில் நின்று விடுகிறார்களே தவிர குறை நீக்கும் படலத்தில் ஈடுபட முன்னால் வருவதில்லை.

இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் தரப்பட்ட கல்வியின் தரத்தைவிட இக்காலத்தில் அளிக்கப்படும் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் கல்வியின் தரம் குறைந்ததற்குரிய தலையாய காரணம், இன்றைய கல்வித் திட்டத்தையே பிரமுகர்கள் என்போர் குறை கூறிக்கொண்டிருப்பதுதான் ஆகும். இக் காலக் கல்வி பயனற்றது என்றும், இத்தகைய கல்வித் திட்டத்தால் நாட்டுக்கு எத்தகைய நன்மையும் விளையாது என்றும், வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தால் அடிமைப் புத்தியை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட உதவாக்கறைக் கல்வி இது என்றும், வெறும் குமாஸ்தாக்களை மட்டுமே உற்பத்தி செய்கிற இயந்திரம் இந்தக் கல்வி முறை என்றும் மிகப் பெரியவர்கள் என்போர் அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறார்கள். சிறப்பாகவும் குறிப்பாகவும் அமைச்சர் பெருமக்களாக அமைந்துள்ள பலர் இந்தப் பல்லவியைப் பாடுவதில் பெருமகிழ்ச்சி காண்கிறார்கள். இப்போது அளிக்கப்படுகிற கல்வியின் அடிப்படையே தவறானது என்றும், இதனால் பயனே இல்லை என்றும் பொறுப்பும் சிறப்பும் மிக்க பதவிகளில் வீற்றிருப்பவர்கள் ஓயாது பேசிக்கொண்டிருப்பதைக் காணும் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் அவர்கள் அளிக்கும் கல்வியில் நம்பிக்கை

குறைந்து போகிறது. நம்பிக்கை குறைந்த நிலையில் அவர்கள் புகட்டும் கல்வி எப்படி உயர்ந்த தரத்ததாக இருத்தல் இயலும்? கல்லூரிகளையும் உயர்நிலைப் பள்ளிகளையும் பொறுத்த வரையில், மாணவர்களிடையேயும் இந்த நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் அம்மாணவர்களின் உள்ளத்தில் இக் காலக் கல்வி பயனற்றது என்று பேசப்படும் பேச்சு படிந்து படிந்து, இத்தகைய பயனற்ற படிப்பில் நாம் ஏன் பேரார்வம் காட்டவேண்டும் என்கிற எண்ணம் தோன்றிவிட்டிருக்கிறது.

கல்வியின் தரம் குறைந்ததற்கான மற்றொரு காரணம், கல்வித் திட்டங்களில் மாறுதல் அடிக்கடி உருவாக்கப்படுவதாகும். கல்வியமைச்சர் மாறும்போதெல்லாம் கல்வித் துறையில் எண்ணற்ற மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இந்த மாற்றங்கள் பெரும்பாலும் ஆய்ந்து ஓய்ந்து பார்த்துச் செய்யப்படாமல் அவசரக் கோலம் அள்ளித் தெளித்தது என்கிற முறையிலேயே செய்யப்படுகின்றன. மக்களாட்சிக் கோட்பாடு நடைமுறையில் உள்ள எந்த நாட்டிலும் கல்வியமைச்சர்களும், அமைச்சரவைகளும், ஆளும் கட்சிகளும் மாறிக்கொண்டிருப்பது இயற்கை. ஆனால் அம் மாறுதல்கள் நிகழும் போதெல்லாம் கல்வித் துறையிலும் மாறுதல்கள் நிகழுமானால், கல்வித்துறை குழப்பத் துறையாகவே மாறிவிடும். அப்படித்தான் மாறி இருக்கிறது இந்த நாட்டில்.

கல்வித் துறையில் அடிக்கடி மாறுதல்கள் செய்யப்படுகின்றன என்பது மட்டுமல்ல, அந்த மாறுதல்களில் பெரும்பாலானவை கல்வித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களைக் கலந்து ஆலோசிக்காமலும், அவர்களுடைய ஒப்புதலைப் பெறாமலுமே செய்யப்படுகின்றன. வெள்ளைக்காரர்களுடைய ஆட்சி இந்நாட்டில் இருந்தவரையில் கல்வித் துறையில் சிறியதோர் மாறுதல் செய்யப்படுவதாக இருந்தாலும் அந்தத் துறையில் ஈடுபட்டவர்களுடைய ஆய்வுரையைக் கேட்டு அறிந்து அதன் பிறகு செய்யப்பட்டு வந்தது. ஆனால் இப்போதோ நம் ஆட்சியாளர்கள் அந்தப் பொருத்தமான முறையை ஒரு சில நேரங்களில் தவிர ஏனைய நேரங்களிலெல்லாம் கைவிட்டுவிட்டார்கள். தரம் குறைவதற்கான மற்றோர் காரணம் இது.

அளிக்கப்படுகின்ற கல்வியின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டுமானால் கல்வியை அளிக்கின்ற ஆசிரியப் பெருமக்களுக்குச் சமுதாயத்தில் சிறந்ததோர் நிலையும் உயர்ந்ததோர் செல்வாக்கும் இருந்தாக வேண்டும். மக்கட் சமுதாயம் இன்றைய தினம் அமைந்துள்ள நிலையில் ஒரு மனிதனுடைய செல்வாக்கு அந்த மனிதனுடைய ஊதிய அளவைப் பொறுத்ததாகத்தான் இருக்கிறது. ஒரு மனிதனுடைய ஊதியம் உயர உயர அவனுக்குச் செல்வாக்கு உயர்

வ்வதும். அவனுடைய ஊதியம் குறையக் குறைய அவனுக்குச் செல்வாக்குக் குறைவதும் சர்வ சாதாரணமாக நாம் காணும் நிகழ்ச்சிகளாகும். இந்த அடிப்படை உண்மையை நன்கினிது அறிந்த காரணத்தால்தான் அமெரிக்கா, பிரிட்டன், இரஷ்யா போன்ற பிற நாடுகளில் ஆசிரியப் பெருமக்கட்கு உயர்தரமான ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இங்கோ? "அரசாங்கச் சேவகர்களுக்கு (பியூன்களுக்கு) அளிக்கப்படுகிற ஊதியத்தை விட ஆரம்ப ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிற ஊதியம் குறைவாக இருப்பதைக் காணும்போதெல்லாம் நான் மிகுந்த வெட்கமடைகிறேன்" என்று இந்தியாவின் முதலமைச்சர் பண்டித நேரு சில மாதங்களுக்கு முன்னால்தான் சோகத்தோடு தெரிவித்திருக்கிறார். ஆரம்பப் பள்ளி—உயர்நிலைப் பள்ளி—கல்லூரி ஆகிய மூவகைக் கல்வி நிலையங்களில் பணியாற்றும் ஆசிரியர்களும், அவரவர்களுடைய கல்வித் தகுதியை நினைவில் நிறுத்திப் பார்த்தால், அதே அளவு கல்வித் தகுதியுடையவர்கள் பிற பல துறைகளில் பெறுகிற ஊதியத்தை விட மிக மிகக் குறைவாகத்தான் பெற்று வருகிறார்கள். "இவ்வளவு குறைந்த ஊதியம் பெறுபவர்கள்தானா இந்த ஆசிரியர்கள்" என்று உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயில்கிற மாணவர்களிற் பலர் எண்ணமிடுவதும், அந்த எண்ணத்தின் விளைவாக ஆசிரியப் பெருந்தகையினர்க்கு மாணவர்கள் அளிக்கும் மதிப்பும் மரியாதையும் குறைவுபடுவதும், அந்தக் குறைவின் விளைவாக அத்தகையவர்களால் புகட்டப்படும் கல்விப் பொருளின் அருமை பெருமையை மாணவர்கள் குறைத்து மதிப்பிடுவதும், இந்த எண்ணங்களின் காரணமாகக் கல்வியின் தரம் குறைவதும் அனைவரும் அறிந்த உண்மைகள்.

கல்லூரி ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் தரப்படும் ஊதியம், அவர்களுடைய கல்வித் தகுதியை முன்வைத்துப் பார்க்கும்போது மிக மிகக் குறைவானதே என்றாலும், அந்த ஊதியத்தைக் கொண்டு அவர்கள் தங்களுடைய குடும்பங்களை, முழு வசதியோடு இல்லாவிட்டாலும், ஏதோ ஒரு வகையாக நடத்திச் செல்ல முடியும். ஆனால் ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தரப்படும் ஊதியமோ மிக மிகக் குறைவானதாக இருப்பதால், அவர்களுடைய குடும்பங்கள், வறுமைப் புயலில் சிக்குண்டு தத்தளிக்கும் பரிதாபப் படகுகளாக மாறிவிடுகின்றன. தங்கள் மனைவி மக்களுக்குத் தேவையான மிகக் குறைந்த வசதிகளைக் கூடச் செய்து தர முடியாத தங்களுடைய வேதனைமிகு நிலைமையை எண்ணி எண்ணி வாடித் துடிக்கும் ஆரம்ப ஆசிரியர்கள் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடம் புகட்டுவதில் தங்களுடைய கவனம் முழுவதையும் எப்படிச் செலுத்த முடியும்? "உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்றார் தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். ஆரம்ப

ஆசிரியர்களின் உள்ளத்திலோ இன்ப ஒளியை எழுப்ப விடவில்லை வறுமை இருள். இந்த நிலையில் அவர்களுடைய வாக்கினிலே சிறந்த ஒளி எப்படி உருவாக முடியும்? இந்நிலையில் கல்வியின் தரம் குறைகிறதே என்றால், குறையாமல் எப்படி இருக்கும்?

அரசாங்கம் அளிக்கின்ற மிகக் குறைந்த ஊதியத்தைக் கொண்டு மிக அதிகமாக உயர்ந்துவிட்ட விலைவாசிகளை எட்டிப் பிடிக்க முடியாமல் ஆசிரியப் பெருமக்கள் தத்தளிப்பதுபோலவே, அரசாங்கத்தார் தருகின்ற மிகக் குறைந்த உதவித் தொகையைக் கொண்டு பள்ளிக்கூடச் செலவுகளைச் சரிக்கட்டுவது எப்படி என்று புரியாமல் திண்டாடுகின்றனர் ஆரம்பப் பள்ளிக்கூட நிர்வாகிகள். தமிழ்நாட்டு அரசாங்கத்தார் பிறப்பித்த பல்வேறு உத்தரவுகள் காரணமாகச் சென்ற ஏழெட்டு ஆண்டுகளாகவே ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளுக்குக் கிடைத்துவந்த உதவித் தொகை மடமட வென்று குறைந்து கொண்டே வந்து, இதுபோது, ஆசிரியர்களின் அடிப்படை ஊதியத்தில் 15 சத விகிதம் என்கிற மிகச் சுருங்கிய அளவுக்குக் குறுகி விட்டது. வாழ்நாள் முழுவதும் அரும்பாடு பட்டு வளர்த்து உருவாக்கிய பள்ளிக்கூடத்தைத் திடீரென்று எப்படி மூடிவிடுவது என்கிற பாச உணர்ச்சி காரணமாகவே உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகள் பலவற்றை அவற்றின் நிர்வாகிகள் தொடர்ந்து நடத்தி வருகிறார்களே தவிர அவற்றை நடத்துவதற்குத் தேவையான பணமின்றி அவர்களிற் பலர் துடிதுடித்துக் கொண்டிருப்பது நாடறிந்த உண்மை. ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்துள்ள அரசாங்க உத்தரவுகள், பள்ளி நிர்வாகிகளுக்குக் கல்வித் துறையில் இருந்து வந்த அளவற்ற ஆர்வத்தையும் ஊக்கத்தையும் அழித்து ஒழித்து விட்டன என்றே கூறவேண்டும். இது உண்மை. வெறும் இகழ்ச்சியுரை அன்று. கல்வித்துறையில் பள்ளிக்கூட நிர்வாகிகட்கு ஆர்வம் குறைந்த பிறகு கல்வியின் தரம் எப்படி உயர்நிலையில் இருத்தல் இயலும்?

"போதாத குறைக்குப் பொன்னியம்மன் குறை" என்பது போல, மிகக் குறைந்த உதவித்தொகை காரணமாக ஊக்கமிழந்து கிடக்கும் பள்ளி நிர்வாகிகளின் ஆர்வத்தை மேலும் குறைத்து விட்டது "ஆசிரியர்கட்கு நேர்முக ஊதியம்" என்கிற ஏற்பாடு. ஆரம்ப ஆசிரியர்கட்கு அரசாங்கத்தாரே நேரடியாகப் பணம் அனுப்புகின்ற ஏற்பாட்டின் விளைவாக நிர்வாகிகட்கும் ஆசிரியர்கட்கும் இருந்துவந்த நல்ல உறவு சீர்குலைந்து, இரு சாராருக்குமிடையே ஒத்துழைப்பும் கூட்டுறவும் இல்லாத விசித்திரமான நிலைமை உருவாகியிருக்கிறது. இதன் விளைவாகவும் பள்ளிக்கூடத்தில் கட்டுப்பாடு சிதைந்து, கல்வியின் தரம் குறைந்திருக்கிறது.

இந்தக் காலத்தில் கல்வியின் தரம் குறைந்ததற்கான மற்றொரு காரணம், ஒவ்வொரு மாணவன்மீதும் தனிக் கவனம் செலுத்த முடியாத இக்கட்டான நிலையில் ஆசிரியர்கள் நிறுத்தப்பட்டிருப்பதாகும். ஆரம்பப் பள்ளிகளில் 20 மாணவர்கட்கு ஓர் ஆசிரியர் என்று இருந்த நிலையை மாற்றி 35 மாணவர்கட்கு ஓர் ஆசிரியர் என்கிற புது நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் இம் மாநில ஆட்சியாளர்கள். இத்தகைய தாக்கீதுகளின் விளைவாகக் கல்வியின் தரம் குறையாமல் உயரவா செய்யும்? ஓர் ஆசிரியரால் பாடம் புகட்டப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை வளர வளர ஒவ்வோர் மாணவன்மீதும் அவர் தனித்தனியே செலுத்தக்கூடிய கவனம் குறைவது, தவிர்க்க முடியாத விளைவே அல்லவா? கல்லூரி வகுப்புகளில், ஒரே ஆசிரியர், வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்த 200 அல்லது 300 மாணவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டிய நிலையில் உள்ளார். ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை வாரத்தில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் மட்டுமே அவரால் சந்திக்க முடிகிறது. இந்த நிலையில், தன் வகுப்பு மாணவர்களில் மிகப் பலரைத் தனித் தனியே அவரால் நினைவில்கூட நிறுத்திவைக்க முடிவதில்லை என்றால் அதிலென்ன வியப்பிருக்க முடியும்?

பள்ளி மாணவர்களின் பெற்றோர்களிடத்திலும் ஒரு குறை இருக்கின்றது. பெரும்பாலான பெற்றோர்கள், பள்ளிக்கூடத்தில் தங்கள் பிள்ளைகளைச் சேர்த்ததோடு தங்கள் கடமை முடிந்து விட்டது என்று கருதுகிறார்கள். காலை மாலை நூலை ஓது என்கிற கருத்தைப் பிள்ளைகளிடம் வற்புறுத்துவது, அன்றன்றுடப் பாடங்களைப் பிள்ளைகள் அன்றன்றுடம் படிக்கிறார்களா என்பதைக் கண்காணிப்பது, வீட்டுக் கணக்குகளையும் பாடங்களையும் பிள்ளைகள் சரிவர நிறைவேற்றுகின்றார்களா என்பதைக் கவனிப்பது, அவ்வப்போது பள்ளிக்கூடத்திற்கு வந்து தம் பிள்ளைகளின் முன்னேற்றத்தைப் பற்றி விசாரித்து அறிவது, பள்ளிக்கூடத்திற்குத் தேவையான வசதிகள் உள்ளனவா என்பதை ஆய்ந்தறிந்து போதுமான வசதிகள் இல்லையென்றால் பிற பெற்றோர்களுடன் இணைந்து நின்று அவற்றைப் பெருக்குவதற்குரிய திட்டங்கள் தீட்டுவது முதலிய கடமைகளை ஆற்றும் பெற்றோர் மிகச் சிலரே. மிக அதிக மாணவர்கள் உள்ள காரணத்தால் பள்ளிக்கூடத்தில்தான் ஆசிரியரால் ஒவ்வொரு மாணவன்மீதும் தனிக் கவனம் செலுத்த முடியவில்லை. வீட்டிலாவது பெற்றோர்கள் தம் பிள்ளைகள்மீது தனிக் கவனம் செலுத்த வேண்டாமா? பல ஊர்களில் பெற்றோர் சங்கங்கள் என்கிற பெயர் படைத்த அமைப்புகள் பல உள்ளன என்றாலும் அவை பெயரளவில்தான் இருக்கின்றனவே தவிர தக்க பணியாற்றுகின்றன என்று கூறமுடியாது. ஆண்டுதோறும் ஒரே ஒரு நாள் மட்டும் திடீரென்று விழித்தெழுந்து ஆண்டு விழா

ஷைக் கொண்டாடிவிட்டு ஏனைய நாட்களிலெல்லாம் ஆழ்ந்த உறக்கத்தில் வீழ்ந்து விடுவதே பெரும்பாலான பெற்ரேர் சங்கங்களின் வாழ்க்கை வரலாருக அமைந்திருக்கிறது. ஆசிரியர்கள் அடைகிற ஊதியமும், நிர்வாகிகள் பெறுகிற உதவித் தொகையும் மிகக் குறைவாக உள்ளன என்பதையும், இத்தகைய நிலை இருக்கும் வரையில் கல்வியின் தரம் குறைந்த அளவில்தான் இருக்கும் என்பதையும், ஆகவே ஆசிரியர்களின் ஊதியத்தையும் நிர்வாகிகளின் உதவித் தொகையையும் உயர்த்தும்படி அரசாங்கத்தை வற்புறுத்துவது தங்கள் கடமை என்பதையும் எண்ணிப் பார்த்து அரசாங்கத்துக்கு விண்ணப்பம் அனுப்பிய பெற்ரேர் சங்கங்கள் இரண்டொன்றுகூட இல்லை என்றே சொல்ல வேண்டும்.

இதுகாறும் நாம் கூறியவற்ருல்,

1. இக் காலக் கல்வியைக் குமாஸ்தாக் கல்வி என்று இழித்தும் பழித்தும் பேசுவது.

2. ஆசிரியப் பெருந்தகையினர்க்குச் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தையும், வாழ்க்கையில் தகுந்த ஊதியத்தையும் தராமலிருப்பது.

3. கல்வித் துறையில் அரசாங்கத்தார் அடிக்கடி தலையிட்டுத் திடீர் மாற்றங்களை உருவாக்குவதன் விளைவாகக் குழப்பம் ஏற்படுவது.

4. அந்த மாறுதல்களை உருவாக்கும்போது கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களையும் நிர்வாகிகளையும் கலந்து ஆலோசித்து முடிவெடுக்காதது.

5. நிர்வாகிகளுக்குக் கல்வித் துறையில் உள்ள ஆர்வத்தை அழிக்கும் தன்மை படைத்த உத்தரவுகளைப் பிறப்பிப்பது.

6. ஆசிரியர்களால் மாணவர்களைத் தனித்தனியே கவனிக்க முடியாத அளவுக்கு மாணவர்களின் எண்ணிக்கை மிகுந்திருப்பது.

7. ஆசிரியர்கட்கும் நிர்வாகிகட்கும் இடையே இருந்த நல்லுறவைக் குலைக்கும் வகையில் அமைந்த அரசாங்க உத்தரவுகள் பிறந்திருப்பது.

8. தங்கள் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திலும் பள்ளிக்கூடங்களின் நல்வளர்ச்சியிலும் பெற்ரேர்கள் போதுமான அக்கறை செலுத்தாதிருப்பது.

ஆகிய இந்த எட்டுக் காரணங்களாலேயே கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அரசாங்கத்திற்கும் பள்ளி நிர்வாகிகட்கும் உள்ள தொடர்பு, பள்ளி நிர்வாகிகட்கும் ஆசிரியர்கட்கும் உள்ள தொடர்பு, ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் உள்ள தொடர்பு, மாணவர்கட்கும் பெற்றோர்கட்கும் உள்ள தொடர்பு, பெற்றோர்கட்கும் அரசாங்கத்திற்கும் உள்ள தொடர்பு ஆகிய ஐந்துவகைத் தொடர்புகளுமே சீர்கேடுற்றுக் கிடக்கின்றன. இந்த ஐவகைத் தொடர்புகளும் தகுந்த முறையில் திருத்தி அமைக்கப்பட்டு, நாம் மேலே குறிப்பிட்ட எண்வகைக் குறைபாடுகளும் போக்கப்பட்டால்தான் கல்வியின் தரம் உயரும்.

இவ்வளவையும் செய்து முடிப்பது என்பது மிகவும் கடினமான வேலைதான். என்றாலும் அந்த வேலையைச் செய்துதான் ஆக வேண்டும்—செய்தால்தான் கல்வித் துறை வளமடையும்; நாடும் வீடும் செழித்து ஓங்கும்.

அரசாங்கத்தார்—நிர்வாகிகள்—ஆசிரியர்கள்—மாணவர்கள்—பெற்றோர்கள் ஆகிய ஐந்து சாராரும் செய்ய வேண்டிய கடமைகளைக் கொண்ட ஒரு சங்கிலித் தொடர்போன்றது இந்தக் கல்வித் தர உயர்வுப் பணி—ஆனால் இந்தச் சங்கிலித் தொடரின் உயிர் நாடி அரசாங்கத்தினர்தான். அவர்கள், ஆற்றவேண்டிய முறைப்படி ஆற்ற வேண்டிய நேரத்தில் ஆற்றவேண்டிய கடமையை ஆற்றுவார்களானால் பிற சாராரையும் அவரவர்களின் கடமையைச் செய்யவைப்பது எளிது.

ஆன்றோர் அமுத மொழிகள்

அயல்மொழிப் பயிற்சியினை எவ்வளவுதான் இங்கே பரவவைத்தாலும் அதன் உதவிகொண்டு நம் தமிழ் மக்களைச் சிறிதும் முன்னேற்றல் இயலாது. தமிழ் மக்களை முன்னேற்றுதல், தமிழ் ஒன்றினாலேயே கைகூடும்.

— மறைமலை யடிகள்

நிகரென்று கொட்டு முரசே — இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்!
தகரென்று கொட்டு முரசே — பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்!

— கவிஞர் பாரதியார்

ஒரு பகலை அதன் இரவில் பாராட்டுவதுதான் முறை. ஒரு வாழ்க்கையை அதன் முடிவில் எடைபோடுவதுதான் நியாயம்.

— ஜார்ஜ் ஹெர்பர்ட்

நற்றமிழ் வளர்த்த நாவலர்

[மா. இளஞ்செழியன் எம். ஏ]

தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் தகைசான்ற வழி காட்டி வந்த கண்கள் மறைந்துவிட்டன. சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்த எழுத்தோவியங்கள் பலவற்றைத்தீட்டி முத்தமிழுக்குப் புது எழிலைச் சேர்த்து வந்த கைகள் மறைந்துவிட்டன. தமிழருக்கோர் தீமை எனில் விரைந்தோடி வந்து அந்தத் தீமையைத் தூள் தூளாக்கிய கால்கள் மறைந்துவிட்டன. எந்த மகாத்மா எப்படிக் கூறினும் சரி, என் உள்ளத்திற்கு எது உண்மையென்று தோன்றுகிறதோ அதைத்தான் நான் கூறுவேன் என்று வீர முழக்கம் செய்து வந்த தீரத் திருவுருவம் மறைந்துவிட்டது. "சொலல் வல்லன்—சோர்விலன்—அஞ்சான்—அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது" என்னும் திருக்குறட் பொன் மொழியின் மாட்சிக்கோர் ஒப்பற்ற சாட்சியாகத் திகழ்ந்த நாவீறு படைத்த நல்லறிஞர் மறைந்துவிட்டார். **பேராசிரியர்-டாக்டர்-பெரு நாவலர்—கணக்காயர் சோமசுந்தர பாரதியார்** இறந்துவிட்டார்.

இருபதாம் நூற்றூண்டில் தமிழகம் பெற்றிருந்த இணையற்ற புலவர்கள் இருவர். ஒருவர், பேரறிஞர் மறைமலையடிகளார். மற்றவர், பேராசிரியர் சோமசுந்தர பாரதியார். தமிழகம் பெற்ற பெறற்கரிய கருவூலமாகிய மறைமலையடிகளாரை இருபதாம் நூற்றூண்டின் திருவள்ளுவர் என்று இயம்பினால், அஞ்சாத நெஞ்சு படைத்த அடலேறாகிய சோமசுந்தர பாரதியாரை இந்தக் காலத்து நக்கீரனார் என்று மொழிதல் வேண்டும். திருவள்ளுவரையும் நக்கீரரையும் ஒரே காலத்தில் பெற்று மகிழும் பெரும்பேறு சங்க காலத் தமிழகத்திற்குக் கிடைத்ததோ இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனால் தமிழ்க் கடல் மறைமலையடிகளாரையும் செஞ்சொற் புலவர் சோமசுந்தர பாரதியாரையும் ஒரே காலத்தில் கண்டு மகிழும் பெறற்கரிய பேறு இருபதாம் நூற்றூண்டுத் தமிழகத்திற்குக் கிடைத்திருந்தது. ஆனால் அந்த அரிய பேற்றைத் தமிழகம் இருபதாம் நூற்றூண்டு முழுவதும் பெற்று மகிழ முடியவில்லை. மறைமலை அடிகளாரைச் சில ஆண்டுகளுக்கு முன்னரே இழந்துவிட்டது தமிழ்நாடு. நாவலர் பாரதியாரையோ இதுபோது பறி கொடுத்துத் தவிக்கிறது. அடிகளாரை இழந்ததால் தமிழகத்தின் இதயத்தில் ஏற்பட்ட புண்ணே இன்னமும் ஆறவில்லை. இதற்குள்ளாகப் பேராசிரியர் பாரதியாரையும் பறி கொடுத்து விடுவது என்றால், இந்தத் துயரத்தைத் தமிழகத்தால் எப்படித்தான் தாங்க முடியும்—எவ்வாறுதான் பொறுத்துக்கொள்ள

முடியும்—என்னதான் இதற்குப் பரிகாரம் என்பதே நமக்குப் புரியவில்லை. இரண்டு கண்களில் ஒன்றை இழந்துவிட்டாலே துயரம் தாங்கொண்ணாததாக இருக்கும் எனின், கண்கள் இரண்டையுமே இழந்துவிடுவது என்கிற நிலை எவ்வளவு வேதனை மிகுந்ததாக இருக்கும் என்பதை இயம்பவா வேண்டும்?

உயரமான உருவம்—அடலேறு போன்ற தோற்றம்—வீரத்தைப் பொழியும் கண்கள்—முறுக்கிவிட்ட மீசை—எதற்கும் எவருக்கும் அஞ்சாமல் வந்து விழுகின்ற செஞ்சொற்கள்—சங்க நூற் புலமையில் மூழ்கித் திளைக்கும் உள்ளம்—இத்தனையும் படைத்தவர்தான் தித்திக்கும் தமிழின் புத்தம் புது உருவமெனத் திகழ்ந்த வித்தகர் பாரதியார்.

சொற்பொழிவாற்றுந் திறமையில் பாரதியாருக்கு இணை பாரதியாரே என்றுதான் கூறவேண்டும். "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச் சொல்லை வெல்லும்சொல் இன்மை அறிந்து" என்கிற சொற்போர் இலக்கணத்திற்கு உரிய ஒப்பற்ற இலக்கியமாகத் திகழ்ந்தது அவருடைய சொற்பொழிவு. நற்றமிழ் வல்ல அந்த நாவலர் பெருந்தகை மேடைமீது ஏறி நின்று, எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றிய தன் கருத்துக்களைத் தொடுக்கத் தொடங்கிவிட்டால் அமர்ந்துள்ள அத்தனைப் பேருடைய உள்ளங்களும் அவருடைய சொற்பொழிவின் பின்னாலேயே சென்று அந்தச் சொற் போர் முடிந்த பிறகுதான் தத்தம் உரிமையாளர்களிடம் திரும்பிவரும். கேட்பாரைப் பிணிக்கும் முறையிலேயும், கேளாரை வேட்க வைக்கும் வகையிலேயும் அவர் ஆற்றுகின்ற சொற்பொழிவைக் கேட்போரெல்லாம் தமிழ்க் காதல் தலைக்கேறிய இளைய சிட்டுக் குருவிகளாக மாறிவிடுவர்—வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்! என்று வீரவுரை எழுப்புவர்—தமிழ் வாழத் தாம் வாழும் தனிப் பெருஞ் சிறப்பினராக மாறிவிடுவர்.

முன்னமே முறுக்கி விட்ட தம் மீசையை மேலும் முறுக்கிக் கொண்டே, மணியோசை போன்ற தெளிந்த குரலில், தீஞ்சுவை மிக்க அழகிய சொற்களை, அருமையான முறையில் தொடுத்து அவர் பேசும்போது, அடடா, இன்றைக்கெல்லாம் அதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம் என்றுதான் நம் நெஞ்சு சொல்லும். இந்தச் சனியன் இருக்கிறதே இதைத்தான் சொல்லுகிறேன் என்று அவர் சொல்லும்போதுதான் ஆகட்டும்; இதென்ன இன்னாருடைய கிறுக்கா என்று அவர் நாக்கைத் தட்டிக்கொண்டே கேட்கும்போதுதான் ஆகட்டும்; ஆனதாலேள—ஆகையாலேள—ஆதலாலேள என்று இச் சொற்களை இன்னிசை அளபெடை இட்டு, பேச்சின் நடுநடுவே அவற்றை இடைச் செருகல்களாய்ச் செருகிவைத்து சுவைபடப்

பேசும்போதுதான் ஆகட்டும், கேட்கிறவர்கள் அத்தனைப் பேருக்கும் தமிழுணர்ச்சி வந்துதான் தீரும்.

இன்றைய தினம் தமிழ் நாட்டின் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டுள்ள மாபெரும் மறுமலர்ச்சிக்குரிய மூலகாரணமாகத் திகழ்ந்து, 1937—முதல் 1940 வரை தமிழகத்தையே ஒரு குலுக்குக் குலுக்கிவிட்ட இந்தி எதிர்ப்பு இயக்கமே என்பதை அனைவரும் அறிவர். அந்த மாபெரும் இயக்கத்தின் மாண்பு மிக்க தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் பாரதியார். தமிழ் நாட்டின் உயர்நிலைப் பள்ளிகளிலெல்லாம் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக அமைக்கப் போகிறேன் என்று அந்நாள் முதலமைச்சர் அன்பர் இராசகோபால ஆச்சாரியார் அறிவித்தபோது சிங்க ஏறு போல் சீறியெழுந்து, ஆகாது இந்த அக்கிரமம் என்று இடியோசை எழுப்பியவர் பாரதியார். அந்த மூன்றாண்டுகளிலும் அந்தப் பேரறிஞர் தமிழ்நாடு முழுவதும் சுற்றிச் சுழன்று, எண்ணற்ற பொதுக் கூட்டங்களிலும் எத்தனையோ மாநாடுகளிலும் வீரவுரையாற்றி உறங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டியெழுப்பி அறப்போர்க் களத்தில் கொண்டுவந்து நிறுத்திய அரிய காட்சியைத் தமிழகம் என்றென்றும் மறவாது—மறக்க இயலாது. எத்தனையோ புலவர்கள் நாட்டைப் பற்றித் துளியும் கவலையின்றி வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த அக் காலத்தில், பாரதியார், சங்க ஏட்டைப் பற்றிய ஆராய்ச்சியைப் பின்னர் பார்த்துக் கொள்வோம்—செந்தமிழ்ப் பாதுகாப்புப் போராட்டத்தில் இப்போது இறங்குவோம் என்று துணிச்சலுடன் முன் வந்த பேராண்மை, அந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் வெற்றிக்குப் பெரியதோர் காரணமாக அமைந்தது என்பதை யார் மறுக்க முடியும்?

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு அவர் கலந்து கொண்ட பொதுக் கூட்டங்கள் எண்ணற்றவை என்றாலும் அவற்றில் ஒரு கூட்டம் சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். 4-10-1937 அன்று சென்னை கோகலே மன்றத்தில் நடைபெற்ற அந்த அரிய கூட்டத்தில் முதுபெரும் புலவர் மறைமலை அடிகளார் தலைமையில் பேராசிரியர் பாரதியார் கட்டாய இந்தி கட்டாயம் கூடாது என்பதற்கான ஏராளமான காரணங்களை எடுத்து விளக்கிப் பேசிய சொற்பொழிவு சென்னை நகரத்தையே போர்க்கோலம் பூணவைத்துவிட்டது. அன்றைய தினம் மறைமலை அடிகளார் தலைமையில் பாரதியார் பேசியது திருவள்ளுவர் தலைமையில் நக்கீரர் பேசினால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது. தமிழ்த் தென்றலும் கோடை இடியும் ஒன்று கலந்து ஓரிடத்தில் கூடினாற்போல இருந்தது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது மட்டுமல்ல, எந்தெந்தச் சமயங்களில் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்க

ளுக்கும் இடையூறுகள் ஏற்பட்டனவோ அந்த நேரங்களிலெல்லாம் துளியும் தயங்காமல் அவர் ஓடோடி வந்து அந்த இடையூறுகளை விரட்டியடிப்பதில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கிறார்.

இணையற்ற தமிழுணர்ச்சி மட்டுமல்ல ஈடற்ற தமிழ்ப் புலமையும் வாய்க்கப்பெற்றவர் நாவலர் பாரதியார். ஒல்காப் புகழ் மிக்க தொல்காப்பியத்திலும், பத்துப் பாட்டு எட்டுத் தொகை ஆகிய சங்க இலக்கியங்களிலும், உலகெலாம் புகழும் உயர் தனிக் கருவூலமாம் திருக்குறளிலும், ஏனைய தமிழ் நூல்களிலும் செம்மை சான்ற புலமை பெற்றிருந்தார் அப் பேராசிரியர். பண்டைப் பெரு நூலாகிய தொல்காப்பியத்தின் ஒரு பகுதிக்கு அன்னார் எழுதியுள்ள விரிவுரை, அவருடைய ஆராய்ச்சித் திறத்திற்கும் அரும்பெரும் புலமைக்கும் தலைசிறந்ததோர் சான்றாகத் திகழ்கின்றது.

"தசரதன் குறையும் கைகேயி நிறையும்" என்பது, அந்தப் பேரறிஞரால் தீட்டப்பட்ட அற்புதமானதோர் ஆராய்ச்சி ஏடு மட்டுமன்று, செந்தமிழ் நாட்டுக்கு அந்தப் பெருந்தகையாரால் அளிக்கப்பட்ட அழியாத நன்கொடையும் ஆகும். அந்த அறிவின் செல்வர் ஆற்றியுள்ள ஏனைய தொண்டுகளையெல்லாம் அறவே ஆற்றாமல் இருந்து இந்தப் புத்தறிவுக் கருவூலம் ஒன்றை மட்டுமே தந்திருந்தால் கூட தமிழகம் அவரை என்றென்றும் தன் இருதய கமலத்தில் இடம் பெறச் செய்திருக்கும் என்பது உறுதியினும் உறுதியாகும். இந்த ஆராய்ச்சிச் சுவடியைப் படித்துப் பார்க்கும் பேறு பெற்றவர் எவரும் பாரதியாரின் நுண்மாண் நுழை புலத்தையும், ஆராய்ந்து அறியும் திறமையையும், எவருக்கும் அஞ்சாமல் தன் உள்ளத்தில் பட்டதைப் பட்டாங்கு தெரிவிக்கும் பெற்றியையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இராமனின் தந்தையாம் தசரதன் உயர்ந்த பண்புகளின் உறைவிடம் அனையவன் என்பதும் சிறிதும் பழுதுகூற முடியாத சீலம் மிகு வாழ்வினன் என்பதும் பன்னெடுங்காலமாக மக்களிடம் வேரூன்றிப் போயிருக்கும் கருத்து. அது போலவே பரதனின் அன்னையாம் கைகேயி, இராமபிரானைக் காட்டுக்குத் துரத்திய கன்னெஞ்சுக்காரி என்பதும் தன் கணவனின் இறப்புக்குக் காரணமாக இருந்த கொடுமைக்காரிஎன்பதும் பெரும்பாலோரின் நீண்டகால நம்பிக்கை. ஆனால் பேரறிஞர் பாரதியார், வான்மீகி இராமாயணத்தையும் கம்ப இராமாயணத்தையும் நுண்மையாக ஆராய்ந்து கண்டறிந்த உண்மைகளோ இந்த இரு பெரும் நம்பிக்கைகளுக்கு நேர் மாறானவையாக இருந்தன. என்றாலும் அது குறித்துச் சிறிதும் அஞ்சாமல் தன்

ஆராய்ச்சி முடிவுகளை இந்நூலில் அழகுபட விளக்கியிருக்கின்றார் அறிஞரேறு பாரதியார்.

இலக்கிய மணங் கமழும் இனிய பல உரை நடை ஏடுகளை மட்டுமல்ல, **'மாரி வாயில்'** என்னும் அரியதோர் கவிதைச் சுவடியையும் அவருடைய எழுதுகோல் தமிழ்நாட்டுக்குத் தந்துள்ளது. 1909-ஆம் ஆண்டில் கோடை விடுமுறைக் காலத்தைக் கழிப்பதற்காகப் பாரதியார் கன்னியாகுமரியில் தங்கியிருந்த காலத்தில் அவரைப் போலவே அங்கு வந்திருந்த மராட்டிய மங்கையர் சிலருடன் உரையாடிக்கொண்டிருக்க நேர்ந்ததாம். அவ்வமயம் அந்த மங்கைநல்லார், தங்கள் மராட்டிய மொழியில் புதிய புதிய காவியங்களும் நாவல்களும் ஏராளமாக இயற்றப்பட்டு வருவதாகவும், மராட்டிய மொழியின் வளரும் தன்மையை இது நன்கினிது புலப்படுத்துவதாகவும், தமிழ் மொழியிலோ பழம் பெரும் நூல்கள் பல உள்ளனவே தவிர புதுப் புது நூல்கள் பிறக்கக் காணோம் என்றும், தமிழ் மொழியில் புதிய காவியங்களும் நாவல்களும் இயற்றுவதற்குரிய வளமும் தெளிவும் இல்லை என்பதையே இந்நிலை மெய்ப்பிக்கிறது என்றும் எள்ளி நகையாடினராம். அவர்களுடைய அந்த நையாண்டியைப் புதிய காவியம் எழுதிக் காட்டுவதன் மூலம் மறுக்க வேண்டுமே தவிர வெறும் பேச்சளவில் மறுத்துவிடுவதால் பயனேதும் இராது என்பதை நன்குணர்ந்த பாரதியார், மறுநாள் காலையிலேயே தாம் ஒரு புதிய காவியத்தை எழுதத் தொடங்குவதாகவும், ஒவ்வொரு நாளும் காலையில் எழுதிய பகுதியை அன்றைய மாலையிலேயே அவர்களுக்குப் படித்துக்காட்டி விளக்கிவிடுவதாகவும் ஒப்புக்கொண்டு அவ்வாறே செய்தும் வந்தாராம். இந்த வகையில் மராட்டிய மங்கையர் சிலருக்குச் செந்தமிழின் வளரும் சக்தியை எடுத்துக் காட்டுவதற்காக உடனடியாக இயற்றப்பட்ட உயரிய காவியமே "மாரி வாயில்" என்பதாகும்.

பேராசிரியர் பாரதியார், 1879-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 27-ஆம் நாள் எட்டையபுரத்தில் பிறந்தவர். அதே ஊரில் பிறந்த தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாருடன் இளமைப் பருவத்தில் மிக நெருங்கிப் பழகியவர். கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனாரும் நாவலர் பாரதியாரின் கெழுதகை நண்பராவார்.

எம். ஏ., பி. எல். பட்டம் பெற்று வழக்கறிஞராக அமர்ந்து, தூத்துக்குடி—மதுரை ஆகிய இடங்களில் தொழில் புரிந்து வந்த அவர், அந்தக் காலத்திலேயே, தன் ஓய்வு நேரத்திலெல்லாம் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார். அவருடைய "தசரதன் குறையும் கைகேயி நிறையும்" என்கிற புகழ்மிக்க ஏடு, அவர் வழக்கறிஞராக இருந்த காலத்திலேயே வெளியிடப்பட்டதுதான். வழக்

கறிஞர் தொழிலில் வெற்றிமேல் வெற்றி பெற்று ஏராளமான பொருள் ஈட்டி வந்தார் பாரதியார் என்றாலும், சில பல ஆண்டுகளுக்குப் பின்னர், தன் நேரம் முழுவதையும் தமிழ்ப் பணியிலேயே செலவிடவேண்டும் என்கிற ஆர்வம் அவருடைய உள்ளத்தை விழுங்கலாயிற்று. அந்தத் தமிழ் ஆர்வத்தின் விளைவாக உயர்ந்த வருவாய் உள்ள வழக்கறிஞர் தொழிலை விட்டு விட்டுக் குறைந்த ஊதியமுள்ள. தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றத் தொடங்கினார் பாரதியார்.

தன்னிகரற்ற சொற்பொழிவாளராகிய அவருக்கு **நாவலர்** என்னும் மிகப் பொருத்தமான பட்டத்தை 1944-ல் யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம் வழங்கிற்று. இலக்கிய ஆராய்ச்சியில் தலைசிறந்த புலமை வாய்ந்தவர் என்னும் பொருள்படும் **கணக்காயர்** என்ற பட்டம் மதுரைத் திருக்குறள் கழக விழாவில் 1954-ல் அவருக்கு அளிக்கப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அதனுடைய வெள்ளிவிழாவைக் கொண்டாடிய நேரத்தில் கணக்காயர் என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லாகிய **டாக்டர்** என்னும் பட்டத்தை அவருக்குச் சூட்டி, அதன் வாயிலாக அன்னாரின் தமிழ்ப் புலமைக்குத் தன் அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டது.

இக் காலத் தமிழகம் சங்க காலத் தமிழகத்தின் வலிவையும் பொலிவையும் எழிலையும் ஏற்றத்தையும் அடைய வேண்டுமானால் தமிழ் மக்கள் அனைவரும் வள்ளுவப் பெருந்தகை வகுத்துள்ள வழிப்படி நடந்தாக வேண்டும் என்பது பேராசிரியர் பாரதியாரின் அழுத்தந்திருத்தமான கருத்தாகும். "தமிழர்களுடைய சிறந்த பண்புகள் பழக்க வழக்கங்கள், கொள்கை கோட்பாடுகள், சால்பு சிறப்புகள் ஆகியவற்றை—தமிழரின் பழம் பெரும் நெறியின் விளக்கங்களை அழகுறத் தொகுத்துத் தந்துள்ள அரிய இலக்கியம் திருக்குறள்" என்பது பாரதியாரின் பொன்மொழி.

1949-ல் சென்னைமாநகரத்தில் **திருக்குறள் மாநாடு** மிகச் சிறப்பாக நடைபெற்ற நேரத்தில், அம் மாநாட்டைத் தொடங்கி வைத்த நாவலர் பாரதியார் அவர்கள், "திருக்குறளைப் படிப்பவர் யாராயினும் அவர், திருக்குறளைப் படிக்குமுன்னர், ஆரிய நாகரிகம் கலவாத தமிழ் நாகரிகம் ஒன்று தமிழகத்தில் தலை நிமிர்ந்து ஓங்கித் தழைத்திருந்தது என்பதையும், திருக்குறள் அந்தத் தனித் தமிழ் நாகரிகத்தின் வழிவந்த உயர் தனிச் சிறப்பு நூல் என்பதையும் உணர்ந்து ஆகவேண்டும். இவற்றை உணராதார் திருக்குறளைப் படித்துப் பயன் இல்லை" என்று திட்டவட்டமாகத் தெரிவித்த கருத்து, பொன்னேபோற் போற்றத் தக்கதாகும்.

சிறந்த பேச்சாளராய், உயர்ந்த எழுத்தாளராய், அருமைமிக்க ஆராய்ச்சியாளராய், இணையற்ற தமிழ்ப் புலவராய், ஈடில்லாத தமிழ்த் தொண்டராய், அஞ்சாமைப் பண்பாட்டின் அரும் பெரும் விளைநிலமாய், பெரும்புகழ் பெற்றுத் திகழ்ந்த பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் அவர்களின் உடல், தன்னுடைய 81-வது வயதில், 14-12-59 அன்று மறைந்து விட்டது என்பது உண்மைதான். ஆனால் அவருடைய பெயர், அந்தப் பெயரின் புகழ், அந்தப் பெயராலும் புகழாலும் செந்தமிழுக்கு ஏற்படும் ஏற்றம் — இவை என்றென்றும் மறையமாட்டா.

செந்தமிழ்த் திருநாட்டின் சீர்மிகு உள்ளம் — அங்கே நாவலர் பாரதியார் என்றென்றும் வீற்றிருப்பார் என்பதில் துளியும் ஐயமில்லை.

ஆன்றோர் அமுத மொழிகள்

"துன்பமே! வணக்கம்! சென்றிடு!" என்று சொல்லிவிட்டு நெடுந்தொலைவு வந்துவிட்டேன். இப்போது திரும்பிப் பார்க்கிறேன். அவள் என் பின்னாலேயே வந்துகொண்டிருக்கிறாள்! அவளுக்குத் தான் என்மீது எத்துணை ஆசை — எவ்வளவு நிலையான பற்று!

— கீட்ஸ்

எந்த மத நம்பிக்கை சிறந்தது — இதைப்பற்றி ஆவேசக்காரர்கள் போராடிக்கொண்டிருக்கட்டும். எனக்குக் கவலையில்லை. என் கவலையெல்லாம் என் வாழ்க்கை எப்போதும் நேரான பாதையில் செல்ல வேண்டுமே என்பதுதான்.

— அலெக்ஸாண்டர் போப்

எந்த நாட்டிலே செல்வம் குவிந்து அதே நேரத்தில் மனிதர்கள் வாடி வதைகிறார்களோ அந்த நாடு, வேதனைகளுக்கு ஆளாகி விரைவில் அழிந்துவிடும்.

— கோல்டு சிமித்

நிதானத்தை இழக்காமல் நிமிர்ந்து நிற்பது எப்படி? பெருந்தன்மையிலிருந்து பிறழாமல் பணிந்து கொடுப்பது எப்படி? இந்த இரண்டையும் அறிந்து, அறிந்தபடி பின்பற்றுவது எது — அதுவே சிறந்த அரசாங்கம்.

— ஜார்ஜ் கிரன்வில்

சென்னைக்குப் புது மேயராகத் தி. மு. க. உறுப்பினர் அப்துல் காதர் தேர்வு

உதவி மேயராகவும் தி. மு. க. வெற்றி

சென்னை நகர மேயராக திரு. எம். எஸ். அப்துல் காதரும் (தி. மு. க.) துணை மேயராக திரு. என். எஸ். தேவராஜனும் (தி. மு. க.) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

30-11-59 பிற்பகல் நடைபெற்ற நகரசபை உறுப்பினர்களது பூர்வாங்கக் கூட்டத்தில் நடைபெற்ற ஓட்டெடுப்பில் திரு. எம். எஸ். அப்துல் காதர் (தி. மு. க.) 52 ஓட்டுகளும் திரு. கே. சுல்தான் மொகைதின் (காங்கிரஸ்) 43 ஓட்டுகளும் பெற்றனர்.

பூர்வாங்கக் கூட்டத்திற்குப் பிறகு நடைபெற்ற சாதாரண உறுப்பினர் கூட்டத்தில் நகர சபைச் சம்பிரதாயப்படி திரு. எம்.எஸ். அப்துல்காதர் போட்டியின்றி மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது பெயரை மேயர் பதவிக்கு திரு. என். ஜீவரத்தினம் (தி. மு. க.) பிரேரணை செய்தார். டாக்டர் பி. சீனுவாசன் (காங்) ஆதரித்தார்.

திரு. அப்துல்காதரை நகர சபை தி. மு. க. தலைவரும் எதிர்க் கட்சித் தலைவரும் அழைத்துச் சென்று மேயர் ஆசனத்தில் அமரும்படி செய்தனர்.

இதன் பின் நடைபெற்ற துணை மேயர் தேர்தலுக்கு திரு. என். எஸ். தேவராசனும் (தி. மு. க.) திரு. ஜி. ராஜரத்தினமும் (நகர நல முன்னணி) போட்டியிட்டதில் திரு. என். எஸ். தேவராசனுக்கு 52 ஓட்டுகளும் திரு. ஜி. ராஜரத்தினத்திற்கு 44 ஓட்டுகளும் கிடைத்தன.

புதிய மேயர் திரு. எம் எஸ். அப்துல்காதர் தமது பதவிக் காலத்தில் சேரி அபிவிருத்தியில் தீவிரக் கவனம் செலுத்தப்போவதாகத் தெரிவித்தார்.

மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. எம். எஸ். அப்துல் காதர் நகரசபை தி. மு. கழகத்தில் உள்ள ஒரே ஒரு பட்டதாரி; பிரசிடென்சிக் கல்லூரியில் பி. எஸ். ஸி. பட்டம் பெற்றவர். 28 வயதில் மேயரான முதல் இளைஞரும் இவர்தான். கல்லூரி நாட்கள் முதல் தி. மு. கழகத்திலிருந்து பணியாற்றியவர். சென்னை நகர வீட்டு அடமான பாங்கியின் துணைத் தலைவர். பல்வேறு சமூக நலப் பணியிலும் ஈடுபட்டு வருபவர். 1957-ல் நேருவின் சென்னை வருகையின் போது சில நாள் காவலில் இருந்தவர். 68-வது வட்டம் புதுப்பேட்டை உறுப்பினர்.

துணை மேயரான திரு. என். எஸ். தேவராஜன் 51-வது வட்டம் ஷெணய் நகரிலிருந்து நகர சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். வயது 36. நீண்ட நாளாகத் தி. மு. க. உறுப்பினர்.

தேயிலை ஏகாதிபத்தியம்

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை எம். ஏ. எல். டி.

'தேநீர் விருந்து'களில் இப்போதெல்லாம் 'தேநீர்' கிடையாது. 'தேநீர்' சாப்பிடுகிறீர்களா என்ற கேள்வியுடன் காப்பிதான் கோப்பைகளில் பரிமாறப்படும். தே நீர், என்பதற்குரிய ஆங்கிலச் சொல் (டீ) அப்படியே தான் வழங்கப்படுகிறது. ஆனால் 'நீர்' ஆங்கில நீரல்ல! அமெரிக்க நீர் தான் அந்தக் காப்பி! ஆங்கில மொழி இப்போது அமெரிக்க (ஆங்கில) மொழியில் இயங்குவது போல, ஆங்கில மொழித் தேநீரும் இப்போது அமெரிக்க மொழித் தே நீராய்க் காப்பியையே சுட்டத் தொடங்கி விட்டது.

அமெரிக்கக் குருதி தேநீரை விரும்புவதில்லை—தே நீரை, தேயிலையை எதிர்த்தே அது விடுதலையுரிமை பெற்றது.

டாலர் பெருமகனையும், அசோகச் சக்கரப் பெருமகனையும் கைபற்றி, காப்பியும் கோதுமையும் ஏகாதிபத்ய ராணிகள் ஆகிவிடாத காலம் அது. வாடி வதங்கிய பழங்குடிச் செல்வி அரிசியின் மென்மலர்ப் பாதங்களில் 'பழைய பூட்ஸ்' 'புதிய பூட்ஸ்' கால்களால் மிதித்துத் துவைத்து ஒருவருக்கொருவர் கண்ணடித்துக் கொண்டே இருவரும் சேர்ந்து ஒன்றுபட்டு அவள் மென்னியை அன்று நெரிக்கத் தொடங்கி விடவில்லை.

அந்தக் காலத்தில், இருநூறு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா இன்றைய தமிழகத்தின் நிலையில் இருந்தது. அமெரிக்கத் துறைமுகமான '**பாஸ்டன்**' இன்றைய சென்னையின் நிலையில் இருந்தது.

அங்கே, ஆங்கிலத் தேநீர் ஏகாதிபத்தியத்தின் பெயரால் ஆட்சி செய்த கட்சி 'தேநீர்க் கட்சி'யே. அதுவே அடிமை ஆட்சியைக் கைப்பற்றிய கட்சியாகவும், சட்டத்தின் துணையும் ஆதரவும் பெற்ற கட்சியாகவும் இருந்தது. அதன் பிரதிநிதியாய் இயங்கியவர் ஆளுநர் (கவர்னர்). அவரிடம் 'காவல் துறை' (போலீஸ்) இருந்தது. துப்பாக்கிக் குண்டுகள் இருந்தன. இவை சட்டத்திற்கு வலிமை தரப் போதாவென்றால் படையிருந்தது. அதுவும் போதாத காலங்களில் ஏகாதிபத்தியக் கரத்தின் தொலை ஆயுதங்கள்—போர்க் கப்பல்கள்—புது வலிமை காட்டி அச்சுறுத்தின.

'தேநீர்' அன்று அமெரிக்கர் விரும்பி உட்கொண்ட பானம். அமிதக் குடியை ஒன்றுமே விரும்பாதவர்கள் அமெரிக்கர். ஆகவே அவர்களுக்குத் 'தேநீர்' இன்றியமையாதது ஆயிற்று.

கீழ்த் திசையில் சீனா, சப்பான், அசாம், திராவிடம், இலங்கை ஆகிய நாடுகளெங்கும் தேயிலை உற்பத்தியாயிற்று. கிழக்கு இந்

தியக் கம்பெனி அதை இங்கிலாந்துக்குத் தருவித்துக் கப்பல் கப்பலாக அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தது. அமெரிக்கர் அதன் மணம் நுகர்ந்தனர். கிழக்கு இந்தியக் கம்பெனியார் — அக்கால டாடா, பிர்லாக்கள்—அதனால் பெருத்த 'கொள்ளை' ஆதாயம் பெற்றனர். அந்தக் கம்பெனியின் வாணிபமே தேநீர் ஏகாதிபத்திய மான இங்கிலாந்தின் கருவூலத்தைக் கனமாக்கிற்று.

இது அன்றைய நிலை-18-ம் நூற்றாண்டின் நிலை!

அடிமை வாழ்வு வாழ்ந்த அமெரிக்க மக்களிடையே எங்கிருந்தோ உரிமைக் குரல் மெல்ல எழுந்தது.

உரிமை இன்றேல் கடமை இல்லை; தன்னாட்சியின் வரியும் இல்லை! ஆட்சியிலும் ஆட்சியின் ஆதாயத்திலும் சரிசம உரிமைப் பங்கு—பிரதிநிதித்துவம்-இல்லாவிட்டால் வரிக்கடமை செலுத்த மாட்டோம் என்று மக்களிடையே குரல்கள் கிளர்ந்தெழத் தொடங்கின. உரிமைக் கிளர்ச்சி பொதுவாக வரி மறுப்பு உருவில் தொடங்கி, தேயிலை வரி மறுப்பாக, தேநீர் எதிர்ப்புக் கட்சியாக உருவெடுத்தது.

தேநீரைப் பருகிக் கொண்டே தேயிலை எதிர்ப்பு முழக்கம் செய்தனர், தேநீர் எதிர்ப்புக் கழகத்தவர்.

"இன்று தேயிலை வரி உரிமையை விட்டுக் கொடுத்தால், நாளை எல்லா வரி உரிமையையும் தான் விட்டுக் கொடுக்க நேரிடும். வரி உரிமை போய்விட்டால், ஆட்சியுரிமையும் 'நம்மை விட்டு மக்களிடமல்லவா—அதுவும் அமெரிக்க மக்களிடமல்லவா போய்விடும்!" என்று வாதித்தது தேநீர் ஏகாதிபத்தியம்! மக்கள்—ஆங்கில நாட்டு மக்கள்—மிகப் பெரும்பாலோர் இதை உணர்ந்தனர். ஆதரித்தனர். இதுவே மக்கள் நீதி என்றனர்.

ஆளுநர் 'ஆம்' என்றார். தேநீர் ஏகாதிபத்திய தாசர்கள் 'உம்' போட்டனர்.

"வரி கொடுப்பது அமெரிக்கரல்ல, கிழக்கிந்தியக் கம்பெனி! கொடுப்பது அமெரிக்காவில் அல்ல—ஆங்கில நாட்டில்—லண்டனில்! அதன் பின்னும் தேயிலைச் சிப்பங்கள், அமெரிக்காவில் வந்து 'மலிவோ மலிவு' என்று விற்கின்றன. அதை வாங்கிப் பேசாமல் குடித்து மகிழ்வதற்கென்ன கேடு இந்த அமெரிக்கர்களுக்கு" என்று, இறுமாப்புடன் பேசினர், தேநீர் ஏகாதிபத்திய வாதிகள்.

தேநீர் எதிர்ப்புக் கழகம் மக்களிடையே வளர்ந்தது. அவ்வளர்ச்சியினிடையே பிளவுகளும் தென்பட்டன. சிலர் மிதவாதம் பேசினர். வேறு சிலர் தீவிர வாதிகளாயினர். சிலர் உள்ளூரப் புகைந்து கனன்று புரட்சிக்காரராய் மறை செயலில் ஈடுபடும் புதை குழிக்(அண்டர் கிரவுண்டு) கட்சியினராய் மாறினர். ஆனால் பொதுவாகத் தீவிர வாதிகளின்

வளர்ச்சி மிதவாதிகள் கைக்கு வலுவைத் தந்தது.

குடியாட்சிப் பசப்புத் தேர்தல் உரிமை வழங்கப்பட்ட சில்லறை ஆட்சிப் பகுதிகளை எல்லாம் மித வாதிகள் கைப்பற்றினர்.

தேசீர்க் கட்சிக்கு ('டோரி'களுக்கு) ஏகாதிபத்தியத்தால் நியமனம் பெற்ற ஆளுநர் பிரதி என்றால், தேசீர் எதிர்ப்புக் கட்சியின் வலுவை ஓரளவு பயன் படுத்திய மிதவாதிகள் பிரதிநிதியாகப் 'பாஸ்டன்' நகர சபைத் தலைவர் விளங்கினர். நகரசபை மட்டுமின்றித் துறைமுக ஆட்சிக் குழுவும் அவர் கட்சியின் கையிலிருந்தது.

மிதவாதிகளினிடையே, மிதவாதப் போர்வையிலிருந்து கொண்டே தேசீர்க் கட்சியாளரான ஏகாதிபத்திய தாசர் ஒரு சிலரும், அதே போர்வையைப் போர்த்திக் கொண்ட தீவிர வாதிகள் பலரும், நகரசபைத் தலைவர் செல்வாக்கை இரு வேறு வகைகளில் பயன்படுத்திக் கொள்ள முனைந்தனர்.

தீவிர வாதிகள் பக்கம், மிதவாதிகள் விழாமலிருக்கும்படி தேசீர்க் கட்சியினர் அரும்பாடு பட்டனர். அவர்களுக்குத் தனித் தனி சலுகைகள் வழங்கினர். ஆயினும் பொதுவாக, மக்களிடையே தீவிரவாதிகள் செல்வாக்குப் பெருகப் பெருக, மிதவாதிகளும், தீவிர வாதிகள் பக்கமே சாய்ந்து வந்தனர்.

'ஆளுநர்', ஏகாதிபத்தியத்தின் குறிக்கோளை ஏற்பதாக உறுதி கூறினர். அவர் பணி அவ்வுறுதியையே சார்ந்திருந்தது. ஏகாதிபத்தியக் கொள்கையையும் அவர் ஆதரித்தார். அது அவருக்கு ஆதாயமே தந்தது. ஆனால் வகைமுறையை மாற்றியாக வேண்டுமென்று அவர் சொல்ல எத்தனித்தார். உரிமை நம்மிடம் இருக்கட்டும், மக்கள் சுமையைக் குறையுங்கள் — இல்லையென்றால், தீவிர வாதிகள் கை வலுத்து விடும் என்று முறையிட்டார். இதை ஏகாதிபத்தியம் ஏற்றது. கழுதைச் சுமை கட்டெறும்புச் சுமையாக—சிற்றெறும்புச் சுமையாகக் குறைக்கப்பட்டது.

அருமையான தேயிலை, நீலகிரித் தேயிலை, அசாம் தேயிலை—ஒரு பொன்னுக்கு ஒரு காசு தான் வரி—இதைக் கூட அமெரிக்கர் கொடுக்கப்படாதா என்று வாதம் செய்தார் அவர்.

சாகடிக்கும் நஞ்சுவரம் வேண்டுமென்று கேட்டதாம் அரணை! அந்தப் பழைய பரமசிவம் அதைக் கொடுத்துவிட்டு, அது பலிக்காமலிருக்க நஞ்சைப் பயன்படுத்த மறந்துவிடும் மறதியையும் சேர்த்துக் கொடுத்தாராம்.

கதை என்னவோ பழங்கதை, பொழுது போக்குக் கதைதான்! ஆனல் இது அரணைகளுக்கு மட்டுமல்ல. ஏகாதிபத்தியங்களுக்கும் பொருந்தும். ஏகாதிபத்தியங்களுக்கெல்லாம் வாங்

கொடுத்த இறைவன் குடியாட்சியிலும் கொஞ்சம் கடைக்கண் வைத்து, காலந் தவறியே சலுகையளிக்கும் புத்தியையும் அவர்களுக்கு அளித்திருக்க வேண்டும்.

சுமை எவ்வளவேதான் குறைந்துவிட்டது—ஆனால், மக்கள், சுமைக் குறைப்புக் கோரிக்கையைவிட்டு நெடுநாளாயிற்று. அவர்கள் கேட்பது உரிமை. மிதவாதிகள் கூட இவர்களது சலுகையை ஏற்க முன்வரவில்லை.

பாஸ்டன் துறைமுகம் நோக்கி அப்போது மூன்று கப்பல்கள் வந்தன—டார்ட்மௌத், எலியனூர், பிவர் என்ற மூன்றும் துறைமுகத்தை இலக்காகக் கொண்டு விரைந்துகொண்டிருந்தன. மூன்றிலும் பல்வேறு சரக்குகள் இருந்தன. ஆனால் அவற்றுடனே குறைந்த பிரிக்கப்பட்ட தேயிலைச் சிப்பங்கள் வந்தன இது பாஸ்டன் நகரின் அரசியல் சூழலில் ஒரு பெரும் கொந்தளிப்பை உண்டு பண்ணிற்று—அதுவே அமெரிக்கா எங்கும் சுதந்தரப் புரட்சித் தீயைப் பொங்கியெழுப்பும் ஒரு பெரும் பொறியாய், ஒரு வெடிக்கும் வெடி மருந்துச் சுரங்கமாயிற்று.

மிதவாதிகள், தீவிரவாதிகள், புரட்சிக்காரர்கள்—இவை இச்சமயம் வெறும் பெயர் வேற்றுமைகள், சந்தர்ப்ப சமயோசித உறுப்புக்களாய்விட்டன. பெரும் பிரச்சினை ஒன்று — திசைகள் இரண்டாகவே மக்கள் கண்களில் தோன்றிற்று.

'நீ தேநீர் ஏகாதிபத்தியத்தை விரும்பும் அடிமையா? போ! நீ அமெரிக்காவின் பகைவன்! நீ தேநீர் ஏகாதிபத்திய எதிரியா? வா, நீ அமெரிக்காவின் நண்பன்' இதுவே அடிப்படைப் பிரச்சினையாயிற்று!

பேச்சில், வாதத்தில், வகைமுறையில், செயலில், செயல்முறையில், போர் முறையில் வேற்றுமைகள் இருக்கலாம், இருந்தன. ஆனால், போரில் எப்போதும் இரண்டு கட்சிகள் தான் இருக்க முடியும்—இரு திசைகளாக பாஸ்டன் பிரிந்தது. உண்மையில் தோற்றங்கள் பலவானாலும், ஒரு திசை, ஆட்சியாளர் நோக்கிய திசை. அத்திசையில் அவர்கள்கூட தொடை நடுங்கிக்கொண்டே, சட்டம், ஏகாதிபத்தியக் காம் ஆகியவற்றை எதிர்பார்த்தவண்ணமே தான் நோக்கினார்கள். மற்றத் திசை - நேராகவும் சாய்த்தும், வெளிப்படையாகவும் மறைத்தும் எல்லாரும் நோக்கிய திசை ஏகாதிபத்திய எதிர்ப்புத் திசையே!

எங்கும் கப்பல் வருகைபற்றியே பேச்சு—எங்கும் அதே பரபரப்பு!

வெளிப்படையாக ஆங்கிலத்தில் சிலர்—மறைவாக அமெரிக்க மொழியில், குறிப்பு வாசகங்களில் பலர்—எல்லாரும் கப்பல் பற்றியே பேசினர்.

கப்பல்கள் ஒவ்வொன்றாகத் துறைமுகத்தில் வந்து இறங்கின.

முதலில் டார்ட்மௌத் என்ற கப்பல் வந்தது. சில நாட்களுக் குப் பிறகு மற்ற இரு கப்பல் களும் வந்தன..

"கடவு"ளின் விசித்திரப் படைப்புகளில் சட்டம் ஒன்று! அது உண்மையில் ஏகாதிபத்தியங் களால், ஏகாதிபத்தியங்களுக்கா கவே படைக்கப்பட்டதுதான். அந்தக் காலத்து அமெரிக்காவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நடந்து கொண்ட முறை, இந்த உண்மை யைத் தெள்ளத் தெளிவாக விளக் கிக் காட்டிற்று.

எந்தச் சிப்பங்களை வேண்டு மானாலும் இறக்கு—தேயிலைச் சிப்பங்களை மட்டும் இறக்காதே என்று, மிதவாதியான நகரசபைத் தலைவர், அந்தக் கப்பல்களுக்கு உத்தரவிட்டார். அந்த உத்தரவு வெறும் காகிதக் கட்டளையாக மட்டும் இருக்கவில்லை. அந்த உத்தரவை நிறைவேற்றுவதற் காகப் பல அதிகாரிகளும், நகரக் காவல் படையினரும், கப்பல்களி லிருந்து சரக்குகள் இறங்குவதற் குரிய துறையிலும், கப்பலிலும், இரவு பகலாகக் காவல் இருந்த னர். கட்டளையைக் கப்பல் மீகாமரிடம் காட்டினர்.

ஏகாதிபத்தியத்தின் எதிர்ப் பாளர்கள் இவ்வாறு முனைந்து நின்று பணியாற்றும் நேரத்தில், அதன் ஆதரவாளரான ஆளுநர் மட்டும் சும்மா இருக்கமுடியுமா? அவரும் கட்டளை பிறப்பித்தார். தேயிலைச் சிப்பங்களை இறக்காமல் எந்தக் கப்பலும் வெளியே செல லக் கூடாது என்பது, அவர் பிறப்பித்த கட்டளை. அந்தக் கட்டளையும் வெறும் கட்டளை யல்ல. அந்த உத்தரவை நிறை வேற்ற வேற்று நாட்டுக் காவல் துறையினரும், படைத் துறை யினரும் அந்தக் கப்பல்களிலேயே வந்திருந்தனர். தங்களிடமிருந்த கட்டளையை அவர்களும் மீகாமரி டம் காட்டினர். இது மட்டுமா? அலைகடல் ஆண்ட பிரிட்டனின் நீண்ட ஏகாதிபத்தியக்கரம் ஆளு நரின் கட்டளையைக் காப்பாற்று வதற்காக, இரண்டு கப்பல்கள் வடிவில், காசில் என்னும் தீவில் வந்து இறங்கியிருந்தன.

•

சில நாகரிகமற்ற நாடுகளில்—நம் நாட்டில் கூட!—இரண்டு பெண்டாட்டிகளுக்கு ஒருவன் எப்படியோ கணவனாய் இருந்து தொலைக்கமுடியும். ஆனால்—மகாபாரத காலப் பாரதநாடு நீங்க லாக வேறு எந்த நாட்டிலும், இரண்டு கணவன்மாருக்கு ஒருத்தி எப்படிப் பெண்டாட்டி யாய் இருக்கமுடியும்? இரண்டு தொழிலாளிகள் முதலாளிக்குக் கட்டுப்பட முடியலாம். ஆனால், இரண்டு முதலாளிக்கு ஒரு தொழிலாளி கட்டுப்படுவது எப் படி? நிச்சயம் முடியாது என்று தான் எவரும் கூறுவார்கள். ஆனால் 'போஸ்டன்' துறைமுகத் தில் இறங்கிய மூன்று கப்பல் களின் மீகாமர்களுடைய நிலை இத்தகையதாகத்தான் இருந்தது.

தேயிலைச் சட்டங்களை இறக் காதே! இது சட்டப்படியான

ஒரு கட்டளை. தேயிலைச் சிப்பங்களை இறக்காமல் வெளியேறுதே! இதுவும் சட்டப்படியான ஒரு கட்டளை! இது என்ன பைத்தியக்கார உலகம் என்று அங்கலாய்த்தனர் மீகாமர்.

மூன்றாவதாக ஒரு சட்டமும் இருந்தது. அது, மிதவாதிகளுக்குச் சாதகமானது. இருபது நாட்களுக்குள் கப்பலிலிருந்து இறக்கப்படாத சரக்குகளைத் துறைமுக ஆட்சிக்குழு ஏலமிட்டு விடலாம் என்பதே அச் சட்டம். ஆனால் இத்தகைய நிலை ஏற்படுவதை மீகாமர்கள் விரும்பவில்லை.

நகர மக்களிடையே இப்போது தீவிரவாதிகளின் கை மேலோங்கி வந்தது. சட்டத்துக்கு உட்பட்ட கிளர்ச்சிகளில் நம்பிக்கை குறைந்து வந்தது. எப்படியாவது கப்பல்களிலிருந்து தேயிலைச் சிப்பங்கள் இறங்க நேர்ந்தால், அமெரிக்காவின் மானமே பறிபோய்விடுமென்றுதான் மிகப்பலர் நினைத்தனர். கட்டு மீறிய செயல்கள் எங்கும் வெளிப்படையாகத் தலைகாட்டவில்லை என்பது உண்மையே. என்றாலும் பரபரப்பு விரைந்து வளர்ந்து வந்தது. எந்த நேரத்தில் என்ன நேருமோ என்ற கிலி எங்கும் பரவிற்று.

அந்தக் காலத்தில், போஸ்டன் நகரத்தில், பார்வையாளர் கழகம் என்ற பெயருடன் ஒரு மிதவாதக் கழகம், தீவிரவாதிகள் பக்கம் சாய்ந்தபடி பணியாற்றி வந்தது. அது, உண்மையில் தீவிரவாதிகளின் கழகங்களைவிட இரகசியமானது. அதே சமயம், மிதவாதிகளின் கழகங்களைவிட கட்டுப்பாடும் அமைதியும் நிறைந்தது. அதன் உறுப்பினர்கள் 28 பேர்தான். ஆனால் அந்த 28 பேருக்கும், 28 பேர் பெயரும் மனப்பாடமாகத் தெரியும். எனவே உறுப்பினர் பட்டியலைத் தனியே எழுதி வைக்கவில்லை. அந்தக் கழகத்துக்கு நிலையான அலுவலகம் எதுவும் கிடையாது. உறுப்பினர்கள் கூடிப் பேசும் இடம் மட்டும் ஒன்று உண்டு. அது ஒரு பெரிய பழங்கால வீட்டு மாடியின் பின் அறை. உறுப்பினர் கூட்டத்திற்கு உரிய முன் அறிவிப்புகூட வெளிப்படையாகச் செய்யப்படுவதில்லை. ஓர் உறுப்பினர், ஏனைய உறுப்பினர்களைத் தனித்தனியே கண்டு, "பத்திரிகைக்கு இவ்வளவு வெள்ளி பாக்கி" என்று மட்டும் கூறுவார். எத்தனை மணிக்குக் கூட்டம் கூட வேண்டுமோ அந்த மணியின் எண்ணிக்கையே வெள்ளியின் எண்ணிக்கையாக இருக்கும். கழகப் பேச்சுகளில் தீவிரம் இருக்கும். ஆனால் கூட்டத்தின் இறுதியில் முடிவு எதுவும் செய்யப்பட மாட்டாது. ஏனெனில் கழகத்தில் தீவிர உறுப்பினரும் உண்டு. மிதவாத உறுப்பினரும் உண்டு.

கழகத்திற்கு நுழைவுத் தொகை, சந்தா—எந்தக் கட்டணமும் கிடையாது. உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தி, அவர்களுக்

குக் கவர்ச்சியளித்துவந்த முக்கிய மான இனம் இது! கழகச் செலவு களேயெல்லாம், ஹாங்கார் என் னும் செல்வச் சீமான் ஒருவர் தாங்கிவந்தார். கழகக் கூட்டத் தின் முடிவு, இறுதியில், அவ ருடைய முடிவுதான்!

முதற் கப்பல் வந்தவுடனே, அந்தக் கழக உறுப்பினர்கள், தேயிலைப் பிரச்சினையில் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். மித வாதப் போக்குடைய உறுப்பினர் கள், "துறைமுகத்தில் கப்பல்கள் இருப்பதற்கு உரிய 20 நாட்கள் கழியும் முன்னரே அவை இங்கி லாந்துக்குத் திருப்பி அனுப்பப் பட வேண்டும் என்பதாக ஆளு நரை வேண்டிக் கொள்வது" என்று தீர்மானம் நிறைவேற்ற விரும்பினர். ஆனால், தீவிரவாதி கள், கப்பல்களில் மறைவாகப் புகுந்து, தேயிலைச் சிப்பங்களை உடைத்துக் கடலில் எறிந்து விடு வதே சிறந்த முறை என்றனர். இந்த இரு சார்பாருடனும் தொடர்பு கொண்டவர் - இரு சாராரையும்விட ஒரு பிரச்சினை யின் சாதக பாதகங்கள் இரண் டையுமே அலசி ஆராயும் இயல்பு படைத்தவர் "சாம் ஆடம்ஸ்" என்பவர். அவர், இரு தீர்மா னங்களையும் ஒரு தீர்மானம் ஆக்கினர்.

"ஆளுநரிடம் வேண்டிக் கொள்வது பயனற்றதானாலும், அப்படி வேண்டிக் கொள்வதன் மூலமே நம் புரட்சிச் செயலுக்கு ஆன்மீக பலமும், மக்கள் மன்றத் தின் ஒருமித்த ஆதரவும் கிடைக் கும். அத்துடன், கப்பல்களுக்கு 20 நாள் வரை சரக்குகளை இறக் கும் உரிமை இருப்பதால், அதற் கிடையே இறக்கினாலும், புரட் சியை நாம் தொடங்கலாம். இறக் காமல் இருந்தாலும், 20 நாட் களும் நாம் மக்களிடையே, ஆளு நரிடம் வேண்டிக் கொள்வது பற் றிப் பேசிப் பிரச்சாரம் செய்ய லாம். ஆகவே, இறுதி நாள் புரட்சிக்கு ஆயத்தமாய் இருப்ப தற்குரிய திட்டம் ஒன்று; அது வரை ஆளுநரிடம் மீண்டும் மீண் டும் வற்புறுத்தி வேண்டிக் கொள்ளும் திட்டம் ஒன்று; இடையே பிரசாரம் செய்யும் திட் டம் ஒன்று—ஆகிய மூவகைத் திட்டத்தைத் தீட்டும் தீர்மானம் செய்வதே இன்றைய நிலைக்கு ஏற்ற நல்வழியாகும்" என்று இயம்பினர் சாம் ஆடம்ஸ். அவரு டைய இந்த முடிவு கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆளுநரிடம் வேண்டிக்கொள் ளும் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை, ஆடம்ஸ், தானே ஏற்றுக்கொண்டார். ஏனைய இரண்டு திட்டங்களை நிறை வேற்றுவதற்குரிய பொறுப்பும் வெவ்வேறு உறுப்பினர்களிடம் பகிர்ந்து அளிக்கப்பட்டது.

மூன்று திட்டங்களில் புரட்சித் திட்டமே முக்கியமான திட்ட மாதலால், அதில்தான் கழகம் முழு அக்கறையெடுத்தது. அதில் ஈடுபட்டவர்கள், பெரும்பாலும் இளைஞர்கள்; எவரிடமும் எத் தகவலும் கூறாது இரகசியம் காக் கும் உண்மை உடையவர்கள்.

அத்தகைய தன்மையும் தகுதியும் படைத்த முப்பது பேர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்றுவிக்கும் பொறுப்பு, கழக உறுப்பினர்களில் மூவரிடம் விடப்பட்டது. அந்த மூவரே, அந்த முப்பது பேரை மூன்று தொகுதிகளாகப் பிரித்துத் தொகுதித் தலைவர்களாக இருக்கவேண்டும் என்றும், கடைசிநாள் வரையில் அந்த முப்பது பேரும்கூட ஒருவரை ஒருவர் அறியாமல் இருக்கவேண்டும் என்றும், இறுதி நாளன்று அவர்கள் கூலிக்காரர்களான நீகிரோக்கள்—சிகப்பு இந்தியர்கள் வேடங்களில் வரவேண்டுமென்றும், அனைவரும் அன்று கழகக் கட்டிடத்தில் கூடிப் பின் தனித்தனியே மூன்று கப்பல்களிலும் புகுந்து பணியாற்ற வேண்டுமென்றும், திட்டம் தீட்டப்பட்டது. தொகுதித் தலைவர்களும், தோழர்களும், ஒருவரை ஒருவர் அறிவதற்குரிய இரகசியக் குறிச் சொல்லும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இருபது நாளும், ஆளுநர், கப்பல்களைத் திருப்பி அழைக்க மறுத்தே வந்தார். எனவே, இறுதி நாளன்று, மேற்படி புரட்சிக் குழுவினர் கப்பல்களுக்குள் நுழைந்தனர். ஆனால் அன்று முப்பது பேருக்குப் பதில் முந்நூறு பேராக நுழைந்தனர். ஏனெனில், புரட்சிக் குழுவில் ஈடுபட்ட ஒவ்வொருவரும், தானாக ஒரு கழகம் அமைத்துக் கொண்டு மேலும் பல புரட்சிக்காரர்களைத் தயாரித்திருந்தனர். திருட்டுத்தனமாகத்தான் உள்ளே போகவேண்டுமென்று புரட்சிக்காரர்கள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் கள்ளத்தனமாக நுழைய வேண்டிய நெருக்கடியே அன்று ஏற்படவில்லை. கப்பல் மீகாமர்கள், அவர்கள் உள்ளே நுழைவதைத் தடுப்பதற்குத் துளியும் முயலவில்லை. கப்பல் பணியாளர்கள் பலர், புரட்சிக்காரர்களை அழைத்துச் சென்று, தேயிலைச் சிப்பங்கள் இருக்கும் இடங்களைக் கூடக் காட்டி உதவினர். புரட்சியாளர்களிடம் அழிந்த மழுங்கிப் போன கோடரிகளுக்குப் பதில் நல்ல கோடரிகளைக்கூட அளித்துத் துணை புரிந்தனர் சில பணியாளர்கள்!

சிப்பங்கள் சிதைந்ததால் கப்பல்களில் காணப்பட்ட குப்பை கூளங்களை, “அப்படியே கிடக்கட்டுமே அவை—நமக்கென்ன வந்தது!” என்று எண்ணி, விட்டுச் செல்லவில்லை புரட்சி வீரர்கள். அவற்றையெல்லாம் தாங்களே துப்புரவு செய்துவிட்டுப் போகவேண்டுமென்று பிடிவாதம் செய்தனராம். இந்தப் பொறுப்புணர்ச்சியும் கடமைப் பற்றும், ஆங்கிலேயர்களாகிய கப்பல் மீகாமன்களைக்கூட அமெரிக்கப் புரட்சியின் நண்பர்களாக்கிவிட்டன.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் சரிந்து வரும் இந்நாளில், அதற்குக் கைகொடுத்து உதவும் புதிய ஏகாதிபத்யமாக அமெரிக்கா மாறிவிட்டது என்பது உண்மைதான்.

(40-ம் பக்கம் பார்க்க)

சென்ற இதழ் தொடர்ச்சி :

வெண்ணிலா

[தாமரைக் கண்ணன்]

நிலவினிலே......................!

பணமலை	...	ஜமீன்தார்
மலையழகர்	...	ஆசிரியர்
சோடா	...	வேலைக்காரன்
வெண்ணிலா	...	ஜமீன்தார் மகள் (வயது 12)
வான் மதி	...	வெண்ணிலாவின் தோழி (வயது 11)
வடிவேலன்	...	ஜமீன்தார் மகன் (வயது 13)
மது, **பொய்யப்பன்**	...	வடிவேலன் நண்பர்கள் (வயது 14)
111, **144**	...	போலீஸ்காரர்கள்
சப் – இன்ஸ்பெக்டர்		
முத்து	...	காரோட்டி.

முதலியோர்.

கதிர் 6

பணமலையின் பங்களா

மலைவாயில் மாலைக் கதிரவன்.

(அமர்ந்திருக்கும் பணமலையை அலங்கரித்துக்கொண்டிருக்கிறன், சோடா! ஆசிரியர் மலையழகர் வருகிறார்.)

பணமலை :—வாங்க, வாங்க வாத்தியார் சார்! உட்காருங்க–ம்... ஆண்டு விழாவெல்லாம் ரொம்பவும் தடபுடலா இருக்குபோலிருக்கு...

மலையழகர் :—ஆமாங்க, போன வருஷத்தை விட சிறப்பா செய்ய ரோம் ; ஏழு மணிக்குப் பொதுக் கூட்டம் ஆரம்பம். இன்னும் ஒன்றரை மணி நேரம் இருக்கிறது. நீங்க தலைமை வகிக் கணுமே...அதை ஞாபகப்படுத்திப் போக வந்தேன்.

பணமலை :—ஓ...அதற்கென்ன...நான்தான் ஒரு மணி நேரமா தயார் செய்துகொண்டிருக்கிறேனுங்களே.

சோடா :—எசமான்! பள்ளிக்கூடத்திற்கு நன்கொடை தர்றேன்னு சொன்னீங்களே...

பணமலை :—ஆமாண்டா, ஆமாம்...ஆமாம்! அதுக்கப்புறம் மறந்தே போயிட்டேன்.

சோடா :—இப்பவே கொடுத்துடுங்க எசமான்! நீங்கதான் மற்றவர் களுக்கு ஏதாவது கொடுக்கிறதா வாக்களிச்சீங்கன்னு அதை அடிக்கடி மறந்துடறீங்களே. ஞாபகம் இருக்கும்போதே கொடுத்துட்டா நல்லது—இல்லீங்களா !

பணமலை :—கொடுக்கலாம்...கொடுக்கலாம்! நல்ல விஷயத்துக்கு தானே கொடுக்கப் போறோம்; நாமே கொடுக்கலேன்னு வேறு யார் கொடுப்பாங்க (ஆசிரியரைப் பார்த்து) இன்னும் கொஞ்ச நாள் போகட்டுங்க. நான் எவ்வளவு தர்றேன்னு யோசித்து சொல்றேன்.

மலையழகர் :—(புன்முறுவலுடன்) நீங்க சொன்ன பிறகு நானும் எட்டு தடவை வந்துவிட்டேன்.

சோடா :—சனீஸ்வரன் கோவிலுக்குப் போனு ஒன்பது தடவை சுத்தணும்னு பெரியவங்க சொல்வாங்க. நீங்க இதோடு எட்டு தடவைதானே வந்திருக்கீங்க. எதுக்கும் இன்னொரு தடவை வந்து எசமானைப் பாருங்க, வாத்தியாரய்யா!

பணமலை :—டேய் சோடா! அதெல்லாம் நான் பேசிக்கிறேன். நீ சும்மா இருடா! அப்போ, நீங்க செய்யுங்க, சார்! நான் பொதுக் கூட்டம் ஆரம்பிக்கறதுக்கு முன்னால் வந்துடறேன்.

(ஆசிரியர் ‘ வணக்கம் ’ சொல்லிவிட்டுப் போகிறார். சோடா கொட்டாவி விடு கிறான்.)

பணமலை :—டேய், தூங்குமூஞ்சி! மாலை மங்கல. அதுக்குள்ள கொட்டாவி என்னடா—பலமாயிருக்கு ?

சோடா :—எங்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லே, ஏசமான். படுத்த படுக்கையா கிடக்கிறுங்க. இராத்திரியெல்லாம் கண் முழிச்சு அவங்களுக்குத் தண்ணீர் சுடவச்சு கொடுத்தேன். அது தானுங்க கொஞ்சம் கண்ணே அறுவுது.

பணமலே :—(கோபத்துடன்) 'அறுவும்'டா.....அறுவும்! அறிவு கெட்டவனே! சாயங்காலம் தண்டல் பணம் வசூல் செய்து வர போனுயே—வந்து கணக்கு சொன்னுயா, மடையா! வாத்தியார் உலகநாதன் எவ்வளவுடா கொடுத்தாரு?

சோடா :—இருபது ரூபாயுங்க. பாக்கி வட்டி முப்பது ரூபாயும் அடுத்த மாச சம்பளத்திலே தர்ரேன்னுருங்க.

பணமலே :—ம்...இந்த வாத்தியாருங்களுக்கே கடன் கொடுத்தா முன்னுக்கு வர முடியாது போலிருக்கே...

சோடா :—ஆமாம், எசமான்! வாத்தியாருங்களுக்குக் கடன் கொடுத்தா நாமும் முன்னுக்கு வர முடியாது; நம்ம கிட்ட கடன் வாங்கற வாத்தியாருங்களும் முன்னுக்கு வரமுடியா துங்க!

பணமலே :—என்னடாது கேலிக் கூத்தா இருக்குது. ஏய்! என் அனுபவத்திலே சொல்றேன். அந்த மனுஷன் அம்பது ரூபா வாங்கி ஒரு வருஷம் ஆச்சே...முப்பது ரூபா வட்டி கொடுத்தா போதுமா? ஒரு வருஷம்டா ஒரு வருஷம்...

சோடா :—பன்னெண்டு மாசமுங்க.

பணமலே :—(அழுத்தி)பன்னெண்டு மாசத்துக்கு முப்பது ரூபா தான வட்டி? ஒரு நாளைக்கு கேவலம் நாலணு காசாவது வட்டி கொடுக்கவேணுமா?

சோடா :—அய்யோ, என்னங்க இது, வாங்கின ரூபாயே அம்பது. நீங்க சொல்ற கணக்குப்படி பார்த்தா வட்டியே தொண்ணூறு ரூபா ஆகுதுங்களே!

பணமலே :—சோடா! இனிமே வருஷ வட்டி மாச வட்டியெல்லாம் கிடையாதுடா.

சோடா :—அதுதாங்க நல்லது. வட்டிக்கில்லாம பணம் கடன் கொடுத்தா ஏழைங்க பொழைச்சிக்கிடுவாங்க, எசமான்! ரொம்ப புண்ணியமுங்க.

பணமலே :—அப்படிச் சொல்ரு என் கர்ணன் தம்பீண்ணும்! தடிக் கழுத! புண்ணியமா வட்டியில்லாம பணம் கடன் கொடுக்

கிறது? அதோட எனக்கும் என் பணத்துக்கும் புண்ணியாதகனம் செய்துடவேண்டியதுதான். இனிமே, நாள் வட்டி வாங்கப் போறண்டா நாள் வட்டி! நீ என்னடா சொல்றே...?

(சோடா கொட்டாவி விடுகிறான்.)

சோடா :—இன்னும் கொஞ்சம் நாள் போனா மணி வட்டி, நிமிஷ வட்டி கூட வந்துடும் போலிருக்கே. என்ன இருந்தாலும் இது ரொம்ப அக்கிரமுங்க!

பணமலை :—என்ன...என்ன...என்ன சொன்னே...?

சோடா :—பின்ன என்ன, எசமான்! நம்ம பணத்தை கொடுத்துட்டு நாமே வாங்கப் போகலாமா? வாங்கினவங்களே தேடிவந்து நம்ம கையிலே கும்பிட்டுட்டு கொடுக்க வேணுமுங்களா?

பணமலை :—இன்னிக்கு தேதி என்னடா...?

சோடா :—ஒண்ணுங்க, எசமான்! (தலையை சொரிந்துகொண்டே) எசமான்! இன்னிக்கு சம்பளம் கொடுக்கிறதா சொன்னீங்களே...

பணமலை :—சொன்னேன். ஆனா, இனிமே இருபதாந் தேதிக்கு மேலே உனக்கு சம்பளம் கொடுக்கிறதா முடிவு செஞ்சிருக்கேன். அடிக்கடி கேட்டு என்னை தொந்தரவு செய்யாதே.

சோடா :—மூணு மாசமா...

பணமலை :—சம்பளம் தாணும். யாரு இல்லேன்னுங்க. எல்லா(ம்) கவனம் இருக்குதுடா.

சோடா :—(சிரித்துக்கொண்டே) உங்களுக்குக் 'கவனம்' இருந்து என்னங்க பிரயோசனம். எங்க வயிறு 'கவளம்' இல்லேன்னு சும்மா இருக்க மாட்டேங்குதே.

பணமலை :—டேய், இங்கே 'வளவள'ன்னு பேசாதே. உனக்கு இஷ்டமிருந்தா இங்கே இரு. இல்லேன்னா ஓடிப் போ.

சோடா :—அதற்கில்லேங்க. வீட்டிலே அம்மாவுக்கு உடம்பு சரியில்லே. சாப்பாட்டுக்கும் ரொம்ப கஷ்டம். இரண்டு ரூபாயாவது...

பணமலை :...(துள்ளி) அய்யோ! ரெண்டு ரூபாயா? அடப் பாவி! ரெண்டு ரூபாயின்னு அனுவசியமா சொல்லிட்டியே. முள்ளங்கி பெத்தை மாதிரி முப்பத்தி ரெண்டு அணுடா முப்பத்தி ரெண்டு அணு...!

(வெண்ணிலா அலங்காரத்துடன் வரு கிருள்.)

வெண்ணிலா :—(வந்துகொண்டே) இருநூறு நயா பைசா அப்பா!

பணமலே :—ம்...இருநூறு நயா பைசாடா, மடையா! என் குழந்தை சின்ன பொண்ணு இருந்தாலும் அதுக்கு இருக்கிற அறிவுகூட உனக்கு இல்லேடா.

(வெண்ணிலாவை அன்புடன் அணைத்துக்கொள்கிருர்.)

வெண்ணிலா :—அப்பா! ஒரு நாளைக்கு நாலணு வட்டி வாங்கணும்னு சொன்னீங்களே...

பணமலே :—ஆமாம்...

வெண்ணிலா :—அதே மாதிரி நாம இன்னொருத்தர் பணத்தை வச்சிருந்தாலும் கொடுக்கணுமா, அப்பா?

பணமலே :—நம்மிடம் ஏதும்மா பிறத்தியார் பணம்?

வெண்ணிலா :—அதற்கில்லேயப்பா! இருந்தால் கொடுக்கணும்... இல்லையா...?

பணமலே :—ஆமாம்னுதா(ன்) வச்சிக்கோயேன்.

வெண்ணிலா :—அப்போ, நம்ம சோடாவுக்கு மூன்று மாத சம்பளம் கொடுக்கணுமே.....அந்த சம்பளத்தோடு எவ்வளவு அப்பா சேர்த்து கொடுக்கப்போறீங்க.

பணமலே :—(பதறி) வெண்ணிலா!

வெண்ணிலா :—ஏம்பா எறிஞ்சி விழறீங்க. நாம் வாங்கும்போது, பிறருக்கும் கொடுக்கவேண்டும் அல்லவா? ஏழையாக இருந்தால் என்ன? பணக்காரராக இருந்தால் என்ன? நியாயம் என்ருல் எல்லோருக்கும் பொதுதானே அப்பா!

பணமலே :—(கோபமாக) வெண்ணிலா! உனக்கு உலக விஷயம் தெரியாது. வாயை மூடிக்கொண்டு பேசாமல் போ.

சோடா :—(பணிவுடன், குத்தலாக) குழந்தை சின்ன பொண்ணு இருந்தாலும் அதுக்கு இருக்கிற அறிவுகூட நமக்கு இல்லீங்க, எசமான்!

பணமலே :—டேய்...டேய்! அறிவு கெட்டவனே! குழந்தை தெரியாத் தனமா ஏதோ சொல்லிட்டுது. மேலும் மேலும் தூபம்

போட்டு அது(ம்) மனசை இன்னும் கெடுக்கிறான், போடா உள்ளே !

வெண்ணிலா :—பதற வேண்டாம், அப்பா ! ஏழைகளை மோசம் செய்து சேர்த்த பணத்துக்கு நாள் வட்டி வாங்கவேண்டும் என்று கணக்குப் போட்டீர்களே. இவன் பாவம் ! அறுபது நாழிகையும் நாம் இடும் வேலையை மாடு போல் செய்துவிட்டு அன்புத் தாயைக் கண்ணால்கூட பார்க்க முடியாத பாவியாக இங்கேயே படுத்துக்கொள்கிறானே—இவனுக்குக் கூலி கொடுக்கக் கூட உங்கள் மனம் ஒப்பவில்லையே ஏனப்பா...ஏன் ?

(சோடா கொட்டாவி விடுகிறான்.)

பணமலை :—பேசாதே. மந்திரத்தைப் போன்ற தந்தை சொல்லை மீறிப் பேசாதே.

வெண்ணிலா :—நான் யந்திரமல்ல, அப்பா ! "ஒன்றே குலம்" என்று சொல்லுங்கள் ; மீறிப் பேச மாட்டேன் ! "ஒப்பற்றவனே கடவுள்" என்று சொல்லுங்கள்; மீறிப் பேசமாட்டேன்! 'அன்பே வாழ்வு' என்று சொல்லுங்கள் மீறிப் பேசமாட்டேன். ஆனால், தந்தையே தவறான வழியில் சென்றால் மீறித்தான் பேசுவேன். நல்வழியிலும் நாலடியாரிலும் நான் படித்த நீதிகளை எடுத்துச் சொல்வேன். எனக்குத் தெரிந்த அத்தனையும் பேசுவேன்.

(சோடா சத்தத்துடன் கொட்டாவி விடுகிறான்.)

பணமலை :—பேசு, கர்வம் பிடிச்சவளே, பேசு ! ஏன் நிறுத்திட்டே! அந்தப் பையன்தான் படிக்காமலேயே தறுதலையாகி கெட்டுப் போனா(ன்). நீ ஒழுங்கா பள்ளிக்கூடத்துக்குப் போறேன்னு பார்த்தா நீ அவனை விட மோசமா பேச கத்துகிட்டே.

வெண்ணிலா :—சரி...சரி...! நீங்க பள்ளிக்கூடத்திலே நடக்கப் போற ஆண்டு விழாவுக்குத் தலைமை வகிக்கணுமே...வரப் போகிறீர்களா...இல்லையா...?

பணமலை :—எனக்கு ஆண்டு விழாவும் வேணும்...பூண்டு விழாவும் வேணும். நீ போ.

(வெண்ணிலா போகிறாள்.)

சோடா :—எசமான் ! நீங்கதான் விழாவுக்குப் போகலே...நம்ம குழந்தை 'டான்ஸ்' எல்லாம் ஆடப் போகிறதாமே...நானாவது போய், பார்த்துட்டு வரட்டுங்களா...?

பணமலே :—ம்ஹூம்...அப்படிங்களா? போய் டிரைவரைக் கூப்பிட்டு காரை எடுத்து வாச் சொல்லுடா. கழுதை!

(சோடா போகிறான்.)

ம்...வாழை கீழ்க்கண்ணு வரும்போதே தலேவாழையின் உயிருக்கு உலே வைச்சிடுமாம். அந்த மாதிரி நம்ம வயித்திலே பிறந்ததே நமக்கு வேர்ப்பூச்சா இருக்குதே, சேச்சே! இந்தக் காலத்து படிப்பே சுத்த மோசம். குழந்தைங்க பள்ளிக்கூடத்திலே கால் வைச்சதுமே 'ஜாதி' இல்லேன்னு சொல்லி எல்லோரையும் சமமா உட்கார வைச்சுடறாங்க. அப்புறம் 'ஏழை பணக்காரன்' என்கிற வித்தியாசம் இல்லாம எல்லோரும் சமத்துவமா வாழணும்னு போதிக்கிறாங்க. 'அறம் செய விரும்பு—தருமம் தலே காக்கும்'னு சொல்லிக் கொடுத்து குழந்தைகள் மனசைக் கெடுத்துடறாங்க. அடக் கடவுளே! இந்த அநியாயம் எந்த உலகத்திலே நடக்கும்? அந்த சோடாப் பய மாடு போல உழைச்சுட்டு சும்மா கிடப்பான். இப்ப அவனும் பேச கத்துகிட்டானே. அவனுக்கு இதெல்லாம் புரிஞ்சு போனு அப்புறம் இதை விட மோசமாயில்ல பேச ஆரம்பிச்சுடுவான். என் அனுபவத்திலே சொல்றேன். இந்தக் காலத்திலே எழுத்து வாசனை தெரியறதே பெரிய தப்பு! உலகத்தில் படிப்பு இல்லேன்னு என்னைப் போல ஆசாமிகளுக்குக் கவலேயே இல்லே...சுகமா வாழலாம், ஆண்டவனே! தாண்டவமூர்த்தி! கருணாகரா! அவனவன் சொல்றதுக்கு ஏற்ற மாதிரி நீயும் இதையெல்லாம் பார்த்துவிட்டு எதையும் காதிலே போட்டுக்காம 'கடவுளே' இன்னு இருக்க ஆரம்பிச்சுட்டியே! இனிமே என்னைப் போல சுகபோகமா வாழ்ந்தவங்க கதி என்னதான் ஆகிறது? ஆபத்பாந்தவா! அனாதை ரட்சகா! இந்த அநியாயங்களே யெல்லாம் பார்த்துவிட்டு சும்மாதானே இருக்கே! ஏழையாயிருக்கிறவனெல்லாம் படிக்காம இருக்கிறதுக்கு ஒரு வழி செய்யமாட்டியா? பணக்காரன் வயிற்றிலே பிறக்கிற குழந்தைகள் 'சமத்துவம்—சகோதரத்துவம்'னு பேசாம இருக்கிறதுக்கு ஒரு ஏற்பாடு பண்ண மாட்டியா? அப்பனே! ஆலவாயப்பா!

(சோடா வருகிறான்)

சோடா :—யார் கூட எசமான் பேசிக் கிட்டிருக்கீங்க?

பணமலே :—ம்... உங்கப்பன் கூட! கார் வந்தாச்சாடா.

சோடா :—தயாரா இருக்குதுங்க.

பணமலை :—வீட்டிலே பத்திரமாயிரு. தூங்கி கீங்கி தொலைச்சு டாதே. ஊரிலே திருடன் 'காபரு' அதிகமாக இருக்குது, நான் ஆண்டுவிழாவுக்குப் போய்விட்டு வர்றேன்.

சோடா :—சரிங்க!

(பணமலை போகிறார். சோடா சற்று உலவி விட்டு கொட்டாவி விட்டுக் கொண்டே உட்கார்ந்து முழங்கால்களுக் கிடையே தலைவைத்துக் கொண்டு உறங்கி விடுகிறான். வடிவேலன் மெல்ல உள்ளே புகுந்து பணப்பெட்டியிலுள்ள பணத்தை எடுத்து எண்ணுகிறான்.)

வடிவேலன் :—(அச்சத்துடன் எண்ணுகிறான்) பத்து...... இருபது...... முப்பது...... நாற்பது...... ஐம்பது...... எழுபது...... எண்பது...... நூறு! இதுவரைக்கும் போதும்!

(சோடா விழித்துக் கொள்கிறான்.)

சோடா :—ஆ...... தம்பி! ......தம்பி!!

(வடிவேலன் ஓடி விடுகிறான்.)

ஆண்டு விழாவுக்குப் போன மனுஷன் திரும்பி வந்தா நம்ம உயிரையில்ல எடுத்துடுவாரு. ஊரை மோசம் பண்ணி அவரு சொத்து சேர்த்துவைக்கறாரு. முளைச்சு மூணு இலை விடல, அதுக்குள்ள இந்தப் புள்ள அந்தப் பணத்தை கரையா கரைக்குது ம்...... ஓட்டப்பம் வீட்டைச் சுட்டா, தன்வினை தன்னைச் சுடுது......

(கொட்டாவி விட்டுக்கொண்டே அமர் கிறான்.)

— **திரை** —

கதிர் 7

பள்ளியில்......
ஆண்டு விழா நடக்கிறது
பிள்ளைகள் ஆடுகின்றனர்.

(பொது மக்கள் குழுமியுள்ளனர். மேடைமீது பணமலையும் ஆசிரியர்களும் ஊர்ப் பிரமுகர் இருவரும் இருக்கின்ற னர்.)

பணமலை :—(எழுந்து) இப்போது பள்ளியின் ஆண்டு விழாவின் சார்பாக மாணவர்களின் கலா நிகழ்ச்சி நடைபெறும்.

(மாணவிகளும் மாணவர்களும் இணைந்தும் பிரிந்தும் பாடுகின்றனர், நடிக்கின்றனர், ஆடுகின்றனர். ஆடலும் பாடலும் கல்வியின் வளத்தையும் வளர்ச்சியையும், மக்களின் ஒற்றுமையையும் எடுத்துக் காட்டுகின்றன. பணமலை எழுந்து பின்னுரை ஆற்றுகின்றார்.)

பணமலை :—உங்கள் எல்லோருக்கும் என் வணக்கம். இப்போது நம் பள்ளியில் படிக்கும் மாணவர்களும் மாணவிகளும் ஆடிய ஆடல்களும் பாடிய பாடல்களும் மிகவும் சிறந்தவை. ஒவ்வொருவரும் படித்துப் பெரிய மனிதர்களாக வேண்டும் என்று அவர்கள் ஆடிக் காட்டினர். என் அபிப்பிராயமும் அது தான்! பள்ளியில் இலவசமாகப் படிப்பு சொல்லிக்கொடுக்கிறார்கள். ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவும் அளிக்கிறார்கள். ஆகவே நாம் நம் குழந்தைகளைத் தவறாமல் பள்ளிக்கு அனுப்பவேண்டும். நான் என் அனுபவத்திலே சொல்கிறேன். சில சமயங்களில் என்னுடைய வீட்டிலே நான் தனியாக இருக்கும் போது, 'கடவுளே! நம் நாட்டிலே ரொம்பப் பேர் படிக்கத் தெரியாதவங்களா இருக்காங்களே... நூற்றுக்கு நூறுபேர் படித்தவங்களா ஆக மாட்டாங்களா... ஏழை எளியவர்களெல்லாம் நல்ல முன்னேற்றம் அடைய மாட்டாங்களா' என்று ஆண்டவனைக் கும்பிடுவது வழக்கம். நீங்களும் என்னைப் போல கடவுளைக் கும்பிடுங்க, எங்கப்பன் எம்பெருமான் எல்லோரையும் படிச்சவங்களா ஆக்குவான், என்று கூறிக்கொண்டு என்னுடைய பின்னுரையை முடித்துக் கொள்கிறேன். (அமர்ந்து மீண்டும் எழுந்து) அடுத்தபடியாக, நன்றி கூறல்.

மலையழகர் :—(எழுந்து) தலைவர் அவர்களே! தகைமை சான்ற பெரியோர்களே! வணக்கம். எழுத்தறிவும் எண்ணறிவும் இல்லாதவர் முகத்தில் இருப்பது புண் என்றும், படித்தவர்களின் கண்களே கண்கள் என்றும் நம் திருவள்ளுவர் கூறுகின்றார். நாம்தான் நிலைகெட்டு வாழ்கிறோமே நமது குழந்தைகளாவது நல்ல சமத்துவ உலகில் வாழவேண்டும் என்ற பொன் போன்ற எண்ணம் நமக்கு இருக்கவேண்டும். உங்கள் குழந்தைகள் பிற்காலத்தில் அறிஞர்களாகவும், கவிஞர்களாகவும் வாழ வேண்டும் என்றால், நாவலர்களாகவும், பாவலர்களாகவும் வாழவேண்டும் என்றால், நாட்டைக் கட்டி ஆளும் திறமை

உள்ளவர்களாக வாழ வேண்டும் என்ருல், உங்கள் குழந்தைகள் சீர்திருத்த உலகத்திலே சிந்துபாடும் பெரியார்களாக வாழ வேண்டும் என்ருல் நல்ல அனுபவ அறிவும் படிப்பறிவும் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய உலக அறிவைப் பெற நீங்கள் உங்கள் குழந்தைகளைத் தவருமல் பள்ளிக்கு அனுப்புங்கள். நாங்கள் அவர்களைத் தன்மானமும் பகுத்தறிவும் உள்ள வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் ஆக்கி நாட்டின் நல்ல குடிமக்களாகத் திருப்பி அளிக்கிறோம். நல்லவற்றை எண்ணுங்கள், எண்ணியதைப் பேசுங்கள், பேசியதையே செய்யுங்கள்.

தலைமை வகித்த கனம் பணமலை அவர்கட்கும் விழா வெற்றிகரமாக நடக்க உதவியவர்களுக்கும், நீங்கள் அனைவரும் வந்திருந்து பெருமைதந்து எங்களைச் சிறப்பித்தமைக்கும், பள்ளியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம் !

பணமலை :—(எழுந்து) தாய்மொழி வாழ்த்து.

மாணவர்கள் :—(ஒருங்கே நின்று)

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே !
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே !
ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே !
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே !
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே !
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே !
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே !
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே !

(கூட்டம் கலைகிறது.)

— **திரை** —

(தொடரும்)

பிணி விதைக்கும் ஈ

[டாக்டர் ஸி. ஆர். ஆண்டர்சன், எம். டி.]

நீங்கள் நம்பினாலும் சரி, நம்பா விட்டாலும் சரி, ஒரு பெண் ஈ ஐந்து மாதத்தில் 100,000,000,000,000,000,000,000,000 சந்ததிகளை உற்பத்தி செய்ய முடியும்! ஆனால் மானிட சாதியின் அதிருஷ்டம், அவற்றில் பெரும் பாலானவை வளர்ந்து ஆளாகும் முன்பே மடிந்து போகின்றன.

துருவ மண்டலம் தவிர, உலகம் எங்கும் ஈக்களைக் காணலாம். சில சமயங்களில் அங்கேயும் கூடப் பிரயாணிகளோடு சேர்ந்து கொண்டு, அவை போய்விடுகின்றன.

ஈ நமக்குத் தொந்தரவையும் மரண நோய்களையும் உண்டு பண்ணுகின்றது. அதன் உடம்பு முழுவதும் இருக்கும் நுண்மையான ரோமங்களிலும், அதன் கால்களிலும் பாதங்களிலும் அது எண்ணித் தொலையாத கிருமிகளைத் தூக்கிச் செல்கின்றது. இக் கிருமிகளே நோய்களை விளைப்பவை.

ஒரு ஈயினால் எத்தனை கிருமிகளைத் தூக்கிச் செல்ல முடியும் என்று அறிவதற்கு, சில ஆண்டுகளுக்கு முன் ஒரு பரிசோதனை நடத்தினார்கள். எட்டு ஈக்களின் உடலில் பற்பல விதமான கிருமிகளைத் தொற்ற வைத்து, பின்பு அவைகளைச் சுத்தமான உணவில் மேயவிட்டார்கள். பதினைந்து நிமிஷங்களுக்குப் பின் 900 கிருமிகள் காணப்பட்டன; அரை மணி நேரத்திற்குப் பிறகு ஐந்து லட்சத்துக்கு மேல்; ஐந்து மணி நேரத்தில் அந்த உணவில் 3,500,000 கிருமிகள் இருந்தன! சாதாரண வீட்டு ஈக்கள் இத்தனை எளிதில் கிருமிகளைப் பெருக்கி, உணவை மாசுபடுத்தக் கூடுமானால், மக்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுவது வியப்பு அல்லவே!

அழுக்குத் தான் ஈக்களின் பிரதான உணவு. அவை குப்பைக் குழியிலாவது எருக்களத்திலாவது போய், வயிறார உண்டு விட்டு, சிறிது நேரம் ஆறுதலாக உட்கார, நல்ல இடம் தேடி அலைகின்றன. கடைசியாக உங்கள் சமையல் அறையிலோ, சாப்பாட்டு அறையிலோ இருக்கும் பாத்திரங்களில் இடம் கண்டு பிடிக்கின்றன. அங்கே அவை உட்கார்ந்து, களைப்பாறி, உண்ட உணவை ஜீரணிக்கின்றன. இவ்வாறு அவை அழையா விருந்தாக உங்கள் வீடுகளில் நுழைந்து, உங்களுக்குத் தெரியாமல், லட்சக் கணக்கான கிருமிகளை உங்கள் உணவில் கலந்து விடுகின்றன. ஈ இருக்கும் இடம் எல்லாம் மலத்தையும் கிருமிகளையும் வைத்து விட்டுச் செல்கிறது.

சாதாரணமாக ஈக்கள் டைபாயிட், காலரா, சீதபேதி, சிவப்புக்

காய்ச்சல், டிப்தீரியா முதலிய நோய்களின் கிருமிகளையும், குடல் புழுக்களையும் கடத்துகின்றன. சில சமயங்களில் இளம் பிள்ளை வாதத்தின் நச்சிளையையும் (Virus) கடத்தலாம்.

வெயில் காலத்தில் சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி வயிற்றுப் போக்கு ஏற்படுவதுண்டு. அதற்குக் காரணம் ஈக்கள் குழந்தைகளின் உணவில் டையரீயாக் கிருமிகளைக் கலந்து விடுவது தான்.

ஈக்கள் வெளிப் பார்வைக்குப் பயங்கரமாகத் தோன்றுவிடினும், அவை மனித குல சத்துருக்கள் என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள எட்டு ஈக்கள் ஒவ்வொன்றின் உடலிலும் சுமார் 75,000,000 கிருமிகள் இருந்தன என்று அந்த ஆராய்ச்சிக் குழுவினர் கண்டு பிடித்தார்கள். ஒவ்வொரு கிருமியும் லட்சக் கணக்காகச் சந்தான விருத்தி செய்யக் கூடியது.

ஆண்டுதோறும் பல்லாயிர மக்கள் ஈக்கள் கடத்தும் நோய்களால் மாண்டு போகிறார்கள். அவைகளால் நலம் கெட்டு, வலுகுன்றி, நடைப்பிணங்களாய் வாழுவோர் அனந்தம். எனவே ஈக்களை அசட்டை பண்ணக் கூடாது. அவைகளை ஒழிக்கப் பொது மக்களும் சுகாதார அதிகாரிகளும் தீவிர முயற்சி செய்ய வேண்டும்.

ஏற்கெனவே சொன்னது போல, ஈக்கள் மிகப் பெரிய அளவில் இனப் பெருக்கம் செய்கின்றன. பெண் ஈ சில வாரங்கள் தான் உயிரோடு இருக்கும் என்றாலும், அந்த சொற்ப காலத்திற்குள், அது ஆயிரம் முதல் இரண்டாயிரம் வரை முட்டை இடலாம். பெண் ஈ ஆண் ஈயை விடச் சற்றுப் பெரிதாக இருக்கும். குதிரை லத்தி, மாட்டுச் சாணம் முதலிய மலங்களிலும், அழுகும் பொருட்களிலும், எச்சில் துப்பல்களிலுமே சாதாரணமாக அவை முட்டை இடும். வெயில் காலத்தில் ஒரு நாளிலேயே குஞ்சு பொரித்துவிடலாம். குஞ்சுகள் பத்து, பன்னிரண்டு நாட்களுக்குள் வளர்ந்து, அவைகளும் வர்க்க விருத்தி செய்ய ஆரம்பிக்கின்றன.

ஈக்களால் ஏற்படும் தீங்கை நீக்குவதற்கு மிகச் சிறந்த உபாயம் அவைகள் விருத்தியாவதைத் தடுப்பதுதான். அவை வளர்ந்த பின் அழிப்பதைவிட வளர வொட்டாமல் தடுப்பது சுலபம். எனவே ஒவ்வொருவரும் தங்கள் வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். சாணம், மலம், குப்பை கூளங்கள் முதலியவற்றை மூடி விட வேண்டும், அல்லது அப்புறப்படுத்தி விட வேண்டும். குப்பைத் தொட்டிகளையும், மலஜலத் தொட்டிகளையும் நன்றாக மூடி வைக்கவேண்டும். அண்டை வீட்டாரையும் இப்படிச் செய்யத் தூண்ட வேண்டும்.

நகர வாசிகளுக்கு நகராண்மைக் கழகம் கக்கூஸ், குப்பைத் தொட்டி முதலிய வசதிகளைச் செய்து கொடுக்கிறது. கிராம மக்கள் கூடி, இவைகளைத் தாங்களே அமைத்துக்கொள்ளுவது அவசியம். அவைகளைச் சுத்தமாகவும் ஈ நுழையாமலும் வைத்துக் கொள்ளவும் வேண்டும். மலஜலத்தின் மீது தினமும் வெள்ளை வெண்காரப் பொடி (Borax) தூவ வேண்டும்.

உரத்தைப் புதைத்து வைப்பது நல்லது. அல்லது மூடியாவது வைக்க வேண்டும். நாள்தோறும் அதை வயலில் விரித்துவிடுவது பின்னும் நல்லது. வெயில், வெப்பக் காற்று, இரவின் குளிர் இவை ஈ முட்டைகளையும் புழுக்களையும் விரைவில் அழித்துவிடும். உரத்தைச் சேமித்து வைக்க விரும்புவோர் தினமும் அதில் வெண்காரம் தெளித்து வர வேண்டும். பதினொரு அவுன்ஸ் வெண்காரத்தை ஐந்து காலன் தண்ணீரில் கலந்தால், எட்டு புஷல் உரத்திற்குப் போதுமானது.

மாட்டுத் தொழுவங்களுக்குக் காரைத் தளம் போடுவது நல்லது. நாள்தோறும் கழுவிவிடுவதற்கு அது சௌகரியமாக இருக்கும்.

இக் காலத்தில் பல நல்ல ஈ மருந்துகள் இருக்கின்றன. டிடிடி அவைகளில் முதன்மையானது. வீட்டுச் சுவர்களின் மீதும், ஈக்கள் இருக்கும், மற்ற இடங்களிலும் அதை அடித்தால், சில வாரங்களுக்கு ஈத் தொல்லை இராது. மருந்தின் ஆவியைச் சுவாசிக்கக் கூடாது. அது விஷம். ஈயைக் கொல்லக் கூடிய எந்த மருந்தும் உங்களுக்கும் கொஞ்சமாவது தீங்கு செய்யலாம்.

பார்மலினையும் உபயோகிக்கலாம். அதிலே மூன்று மேசைக் கரண்டி அளவு எடுத்து, ஒரு பைந்து தண்ணீரில் கலக்கி, அத்துடன் சிறிதளவு வெல்லப் பொடியும் கரைத்துக் கொள்ள வேண்டும். அப்புறம் ஒரு கண்ணாடித் தம்ளரில் இந்தக் கலவை மருந்தில் கொஞ்சம் விட்டு, அதன் வாயில் ஒரு மை ஒற்றுத்தாளும் ஒரு தட்டும் வைத்து மூடி, அதைத் தலை கீழாகத் திருப்பி வைத்து, தம்ளருக்குக் கீழே ஒரு தீக்குச்சியைச் செருகுங்கள். ஒற்றுத்தாள் வழியாக மருந்து வெளியே வரும். ஈக்களைக் கவர்ந்து கொல்லுவதற்கு இது இலகுவான வழி. பார்மலின் நஞ்சு, ஆதலால் குழந்தைகளுக்கும் வளர்ப்புப் பிராணிகளுக்கும் எட்டாத இடத்திலே அதை வைக்க வேண்டும்.

பண வசதி படைத்தவர்கள் வீட்டுச் சன்னல்களுக்கும் கதவுகளுக்கும் கம்பி வலை போடலாம். ஒரு பனிப்பெட்டி இருப்பது நல்லது. உணவுப் பொருட்களைக் கெட்டுப் போகாமலும், ஈ மொய்க்காமலும் பாதுகாப்பதற்கு அதை விடச் சிறந்த வழி இல்லை.

நீங்கள் எப்பொழுதேனும் ஹோட்டலில் சாப்பிடப் போனால், அங்கே ஈக்கள் மொய்ப்பதைப் பார்த்தால், தைரியமாக அதை ஹோட்டல்காரரிடம் காட்டி, அதை ஒழிக்கச் சொல்லுங்கள். இப்படிப் பல வாடிக்கைக்காரர்கள் செய்தால்தான் அவர்கள் உணவு விடுதிகளைச் சுத்தமாக வைத்திருப்பார்கள்.

தாய்மாரே, உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களின் ஆரோக்கியத்தை நீங்கள்தான் பாதுகாக்க வேண்டும். நீங்கள் கடையிலிருந்து நல்ல பொருட்களை வாங்கிக்கொண்டு வரலாம்; அவற்றைச் சுவையாகச் சமைக்கலாம். ஆனால் அது போதாது. அவற்றை ஈக்களும் கரப்பான் பூச்சி முதலியவைகளும் மேயாதபடியும், அவற்றில் தூசி படியாதபடியும் பத்திரமாக மூடி வைக்க வேண்டும். நீங்களும் ஈ யெச்ச உணவு சாப்பிடக் கூடாது; குழந்தைகளுக்கும் கொடுக்கக் கூடாது. வீட்டை ஒருபோதும் தூசி பறக்கப் பெருக்கக் கூடாது. காலி டப்பாக்களிலும் வாளிகளிலும் நெடு நாள் தண்ணீர் இருந்தால், அதில் மலேரியாக் கொசுக்கள் விருத்தியாகும். தண்ணீரை உடன் உடன் கொட்டிவிட வேண்டும். பிறந்த குழந்தையின் வாயிலும் கண்களிலும் ஈ இருக்க விடாதேயுங்கள். ஈப் புலிகளாய் விளங்குங்கள்.

‘ நல்வழி ’’

“ ஆரம்பக்கல்வி ”
ஆபீஸ்.

94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை–1,

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3–50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1–25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் *பாரங்களை அனுப்ப தபால் செலவு :*

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

பயனுள்ள வளர்ச்சி

[டாக்டர் மு. வரதராசனார்]

அந்தந்த வயதுக்கு ஏற்றவைகளைக் கற்பிக்க வேண்டும்: அப்படியே வாழ்வுக்கு வேண்டியவைகளை எல்லாம் கற்பிக்க வேண்டும் அதுதான் நல்ல கல்விமுறை ஆகும்.

எடுத்துக்காட்டாக, ஐந்து வயது உள்ள சிறுவனுக்குக் குடும்பம், தோட்டம், ஊர், சுற்றுப்புறம் முதலியவைகளைக் கற்பிக்கலாம். பத்துவயது உள்ள சிறுவனுக்கு மாவட்டம், நாடு முதலியவற்றைப் பற்றி விரிவாகவும் உலகத்தைப் பற்றிப் பொதுவாகவும் கற்பிக்கலாம். பதினைந்து வயது உள்ள மாணவனுக்குத் தன் நாட்டைப் பற்றி மிக விரிவாகவும் மற்ற நாடுகளைப் பற்றிச் சுருக்கமாகவும் கற்பிக்கலாம். இருபது வயது உள்ள மாணவனுக்கு எல்லா நாடுகளைப் பற்றியும் பல விளக்கங்களைச் சொல்லி அவற்றை எந்த நூல்களின் வாயிலாக எப்படி எப்படிக் கற்க வேண்டும் என்று வழிகாட்டலாம். அவ்வாறு அல்லாமல், பத்து வயது உள்ள சிறுவனுக்கு நைல் நதியின் நீளம், அகலம் முதலியவற்றை வற்புறுத்தித் திணிப்பதும், பதினைந்து வயது உள்ள மாணவனுக்கு வட அமெரிக்காவில் உலகத்தில் பெரியதாக உள்ள ஓர் ஏரியின் (Lake Superior) பரப்பு 31810 சதுரமைல் என்றும் அதற்கடுத்து, ஆப்ரிக்காவில் உள்ள ஓர் ஏரியின் (Lake Victoria) பரப்பு 26000 சதுர மைல் என்றும் வற்புறுத்திக் கூறுவதும் பயனற்ற முறைகளாகும். இருபது வயதுள்ள மாணவனைப் பார்த்து, "இவற்றின் நீளம் அகலம் பரப்பு முதலியவை பரீட்சையில் கேட்கப்படும். ஆகவே மறக்கக் கூடாது" என்று அறிவுறுத்துவதும் பயனற்ற முறையே ஆகும். பொதுவான அறிவுக்கு அடிப்படை அமைத்துத் தந்த பிறகு, இந்த ஆறு ஏரி முதலியவற்றைப் பற்றிய குறிப்புக்களை இன்ன இன்ன நூல்களில் இன்ன முறைப்படித் தேடிக் காணவேண்டும் என்று வழி காட்டினால் அது போதும். அந்த மாணவன் வளர்ந்த பிறகு, எப்போதேனும் அந்த ஆறு ஏரி முதலியவற்றைப் பற்றி விளக்கமாக அறிய நேர்ந்தால், நூல் நிலையத்துக்குச் சென்று உரிய புத்தகங்களைத் தேடி அந்தக் குறிப்புக்களை அறிந்து பயன் பெறுவான். அவ்வாறு தேடவும் அறியவும் அவனுக்கு வழி காட்டினால் போதும். அவ்வாறே, வரலாறு, இலக்கியம், இலக்கணம் முதலிய எல்லாப் பாடங்களும் கற்பிக்கப் படவேண்டும்.

மாணவனுடைய மூளையில்

அவற்றைப் பற்றிய பொதுவான தெளிவும் தேவையான விளக்கமும் பதிந்தால் போதும். குறிப்புக்கள் எல்லாம் அவனுடைய மூளையில் நீங்காமல் நிற்குமாறு—நினைவில் பதிந்திருக்குமாறு—முயற்சி செய்யக்கூடாது. முயற்சி செய்தாலும் பயன் இல்லை; அவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு நினைவை விட்டு ஓடி விடுகின்றன. 'நெல் கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ் சுவரே' என்று கதையில் நிற்கும் சுவர்போல், அந்தக் குறிப்புக்கள் தேர்வு முடியும் வரைக்கும் மூளையில் நின்று பிறகு மறைந்து போகின்றன. அவை நிற்கும் காலம் வரையில் மாணவனுடைய மூளைக்குச் சுமையே ஆகும்; நிற்கச் செய்வதற்காக மாணவன் மேற்கொள்ளும் முயற்சியும் துன்பமே ஆகும்.

விஞ்ஞானப் பாடங்களை இன்று நம் நாட்டில் படித்துள்ள இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள். ஆயினும் விஞ்ஞான ஆர்வத்தோடு அறிஞர்களாய் விளங்கி அந்தத் துறையில் புது முயற்சிகளை மேற்கொள்கின்றவர்கள் நூறு இருநூறு பேரும் இல்லை. காரணம் என்ன? அவர்கள் பட்டப் படிப்புக்காகப் படிக்கும்போது பல குறிப்புக்களை மனப்பாடம் செய்து நினைவில் நிற்கச் செய்வதிலேயே முயற்சியைச் செலவிடுகின்றார்கள். அறிவில் தெளிவும் விளக்கமும் பெற்று ஆர்வத்தோடு முன்னேறுவது இல்லை. மருத்துவத் துறை, பொறியியல் துறை முதலியவற்றில் பட்டம் பெற்றவர்கள் மட்டும் விஞ்ஞானத்தில் சிறிது ஆர்வம் உடையவர்களாய் விளங்குகிறார்கள். அவர்களிலும் ஆர்வத்தை வளர்த்துப் பயன் விளைப்பவர்கள் மிகக் குறைவே. கற்ற கல்வியை ஒட்டியே மருத்துவம், பொறியியல் முதலிய துறைகளில் தொழில் ஏற்றுக் கொள்வதால், அந்தக் கல்வியை மறக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

அந்த மாணவர்களும் படித்த குறிப்புக்கள் பலப் பல; அவற்றை நினைவில் வைத்துத் தேர்வு எழுதுவதற்காகச் செய்த முயற்சி மிகப் பெரிது: இறுதியில் தொழிலில் புகும்போது, குறிப்புக்களில் முக்காலே மூன்று வீசம் பங்கு மறந்துவிட்டு, ஒரு வீசம் (1/16) பங்கு மட்டுமே நினைவில் கொண்டு மருத்துவம் முதலிய தொழில்களைச் செய்கிறார்கள். அந்தத் தொழில்களுக்குத் தேவையான குறிப்புக்கள் அந்த வீசம் பங்கே ஆகும். மற்றக் குறிப்புக்கள் தேவைப்பட்டால், தேவை

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அந்தக் காரணத்துக்காக, அந்தக் காலத்தில், பிரிட்டிஷ் தேயிலை ஏகாதிபத்யத்தை எதிர்த்துப் புரட்சிப் புயலெழுப்பிய அமெரிக்க வீரர்களின் அஞ்சாத நெஞ்சத்தையும் அசையாத உறுதியையும் எப்படி நாம் பாராட்டாமல் இருக்க முடியும்?

—" போர்வாள் "

யானபோது நூல்களைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்து கொள்கிறார்கள். ஆனால் மறந்து போகும் அந்த முக்காலே மூன்று வீசப் பகுதிக்காக அவர்கள் செலவழித்த காலமும் மேற்கொண்ட முயற்சியும் எவ்வளவு! அந்தக் காலத்தையும் முயற்சியையும் அறிவு வளர்ச்சிக்கே செலவிட்டிருந்தால், இன்னும் திறமையான மருத்துவராகவும் பொறியினராகவும் (எஞ்சினீயராகவும்) விளங்கியிருக்க முடியும்.

அறிவு வளர்ச்சி வேறு, நினைவுத்திறன் வேறு என்ற தெளிவு ஏற்பட்டால்தான், கல்வியில் உள்ள இந்தக் குறை புலப்படும்.

ஒரு சந்தையை நன்றாகச் சுற்றிப் பார்த்து வரலாம்; இன்ன திசையில் இன்ன பகுதியில் இன்ன பொருள் விற்கப்படுகிறது என்ற பொதுவான தெளிவு ஏற்படும். அடுத்த வாரம் அந்தச் சந்தைக்கு வரும்போது, முன்பு பெற்ற தெளிவு மட்டும் இருக்கும். அந்தத் தெளிவு கொண்டு, மாங்காய் விற்கும் இடத்திற்குச் சென்று மாங்காய் வாங்கலாம்; தேங்காய் விற்கும் இடத்திற்குச் சென்று தேங்காய் வாங்கலாம். அந்தத் தெளிவு அவ்வளவிற்குப் பயன்படும். அது போன்றதே அறிவு வளர்ச்சி.

சந்தையில் திரும்பத் திரும்பத் திரிந்து, கண்ட கடைகளையே திரும்பத் திரும்பக் கண்டு, பேசிய கடைக்காரருடனேயே பேசிப் பேசிச் சந்தையிலேயே சுற்றி வரும் அனுபவம் போன்றது நினைவுத் திறனுக்காகச் செய்யும் பெரு முயற்சி. வீட்டுக்குச் சென்ற பிறகு ஒவ்வொரு கடைக்காரருடைய பெயரும் வயதும் ஊரும் முதலியவற்றைத் திரும்பத் திரும்ப எண்ணி, அந்தக் கடைகளில் விற்கப்படும் பொருள்களின் சுவை, நிறம், எண்ணிக்கை, எடை, விலை முதலியவற்றை மறக்காமல் இருப்பது போன்றது நினைவுத் திறன். இப்படிப்பட்ட நினைவுத்திறன் பெரும்பாலோர்க்கு இருப்பதில்லை. குறித்த காலம் வரையில் (தேர்வு எழுதும் வரையில்) நினைவில் வைத்திருப்பதற்காக, அவர்கள் அந்தச் சந்தையில் சுற்றிச் சுற்றி அலையும் அலைவு பொல்லாதது. அதனால் வீணாகும் காலமும் முயற்சியும், படும் துன்பமும் களைப்பும் மிகுதி. சந்தையில் சுற்றி அலையும் களைப்பால், வீட்டுக் கடமைக்குப் பயன்படாதவர்கள் போல், நினைவுத் திறனுக்காகப் பாடுபட்டுத் துன்புற்ற மூளைகள் அறிவின் தெளிவை இழந்து விடுதலும் உண்டு.

அதனால், நினைவுத் திறன் வேண்டாம் என்று கூறவில்லை. சந்தையை மெல்லச் சுற்றிப் பார்த்தவர்களுக்கு, வீட்டிற்குச் சென்று சாய்வு நாற்காலியில் சாய்ந்த பிறகும் சில காட்சிகள் நினைவுக்கு வரும்; முயற்சியே இல்லாமல் தாமே நினைவுக்கு வரும். தேவை இருந்தால் தொடர்ந்து பழகும் பழக்கத்தால் அந்த நினைவு வேரூன்றி நிற்கும்.

தேவை இல்லையானால், சில நாட்களில் அந்தக் காட்சிகள் மறந்து போகும். படிக்கின்ற சில பகுதிகள் அவ்வாறு நீங்காமல் நினைவில் நிற்பதும் உண்டு; சில பகுதிகள் சில நாட்கள் வரையில் இருந்து பிறகு மறந்து போவதும் உண்டு. அந்த அளவிற்கு நினைவுத்திறன் எல்லார்க்கும் உண்டு. அது வாழ்க்கைக்குப் போதுமானது எனலாம்.

தேவையானது நினைவில் நிற்கும், தேவை யில்லாதது நிற்காமல் போகும். இந்த உண்மை உணராமல், தேவையில்லாததைக் கட்டாயப்படுத்தி நினைவில் நிற்கச் செய்யும் முயற்சி தீமையானது. அதுதான் சந்தையில் சுற்றி அலைந்து, வீட்டிற்கு வந்து களைத்துத் துன்புறுவதைப் போன்றது. இன்றைய கல்வி முறையில் இது மிகுதியாக உள்ளது. அதனால் தான் தேர்வுக்குக் கற்கும் மாணவர்களின் மனம் துன்புறுகிறது; உடல் கெடுகிறது. மாணவர் சிலர் வாழ்க்கைக்கே பயனற்றவர்களாகக் கெடுவதும் அதனாலேயே ஆகும். அறிவு வளர்ச்சி மட்டும் கல்வியின் குறிக்கோளாக இருந்தால், மாணவர்களின் மனமும் துன்புறாது; உடலும் கெடாது.

அதனால், நினைவுக்காகப் பயிலும் பயிற்சி தேவை யில்லையா என்று கேட்கலாம். ஓரளவு தேவை என்பது உண்மை. எடுத்துக்காட்டாக, துவக்கப் பள்ளியில் படிக்கும்போது, மாணவர்களுக்கு வாய்பாடு கற்பிக்கப்படுகின்றது. வாய்பாடு கற்பது சுவையானது அல்ல; ஆனாலும், அது கணக்குக் கல்விக்குக் கட்டாயம் வேண்டும். அதனால் சிறிது சுமையாக இருந்தாலும், கட்டாயப்படுத்தி வாய்பாடு கற்பிக்க வேண்டியுள்ளது. சிறு வயதில் மனப்பாடம் ஆகா விட்டால், பிற்காலத்தில் அது மனப்பாடம் ஆகாது. மனப்பாடம் ஆகாவிட்டால், கணக்கு எளிதில் வராது. அந்தப் பயன் கருதி வாய்பாடு பயில வேண்டும். அவ்வாறே பழமொழிகளை மனப்பாடம் செய்ய வேண்டும். சில நல்ல பாட்டுக்களை மனப்பாடம் செய்யலாம். பாட்டுக்கள் முதலியவை இளமையில் மனப்பாடம் ஆகி நினைவில் பதிவதுபோல், பிற்காலத்தில் படித்துப் பதிவது இல்லை. மனப்பாடம் ஆன பாட்டுக்களே மிகப் பயன்படுகின்றன. அதனால், இளமையிலேயே அவற்றை மனப்பாடம் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இந்தியாவை ஆண்ட வைசிராய்களின் பெயர்களும், அவர்கள் ஆட்சி புரிந்த ஆண்டுகளும், அவர்களின் காலத்தில் நாட்டில் நேர்ந்த மாறுதல்களும், அவற்றின் காரணங்களும் முதலான குறிப்புக்களை மனப்பாடம் செய்யவேண்டுமா? தேவையானபோது அவற்றை நூல்களில் தேடி அறிந்தால் போதுமே. அவை மனப்பாடம் ஆகவில்லை என்றால் வாழ்க்கையில் நேரும் குறை என்ன? ஒரு குறையும் இல்லை. ஆனால் வாய்பாடு மனப்பாடம் ஆகாவிட்டால், கணக்குத் துறையில் வளர்ச்சியே

இல்லாமற் போகும். நல்ல பாட்டுக்கள் மனப்பாடம் ஆகா விட்டால், சொந்தமாகக் கொள்ள வேண்டிய விழுமிய உணர்ச்சிகள் நமக்குக் கிட்டாமலே நின்று விடும். மேலே குறித்த வைசிராய்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் அப்படிப்பட்டவை அல்ல. பொதுவாக அவர்களைப் பற்றிய அறிவு இருந்தால் போதும். இந்தியா அடிமை நாடாக இருந்த காலத்தில், ஆங்கில ஆட்சியினர் அவர்களின் நாட்டிலிருந்து வைசிராய்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களின் பெயர்களும் மற்றக் குறிப்புக்களுக்கும் வரலாற்றுப் புத்தகத்தில் பிற்பகுதியில் உள்ளன என்றும் தெளிவு இருந்தால்போதும். இவ்வாறு பகுத்துணராத காரணத்தால், நினைவுக்குத் தேவையானவற்றைக் கட்டாயப்படுத்தாத குறையும் உள்ளது; தேவையில்லாதவற்றைக் கட்டாயப் படுத்தும் குறையும் உள்ளது; இரண்டும் சேர்ந்து மாணவர்கள் துன்புறும் நிலை உள்ளது.

இன்னொரு வகையாகவும் இதைச் சீர்தூக்கிப் பார்க்கலாம். சென்ற ஆண்டில் படித்துத் தேர்வு எழுதி முடித்த மாணவர்கள் இருபது பேரை வருவிக்கலாம். அவர்கள் படித்த நூல்கள், பாடுபட்டு நினைவில் வைத்த குறிப்புக்கள், தேர்வில் நினைவை ஒட்டிக் கேட்கப்பட்ட கேள்விகள் ஆகியவற்றைப் பற்றி ஒரு பட்டியல் எழுத வேண்டும். பிறகு அந்த இருபது பேரையும் ஒவ்வொருவராக அழைத்து அவைகள் நினைவில் உள்ளனவா என்று தேர்ந்தறிய வேண்டும், அவர்கள் எவ்வெவற்றை விட்டார்களோ அவ்வவற்றைக் குறித்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு முடிவுக்கு வரவேண்டும். இப்படி ஆறு மாதத்தில் (அல்லது பத்து மாதத்தில்) மறந்து போகக் கூடிய குறிப்புக்களை, இனிவரும் மாணவர்கள் மனப்பாடம் செய்து வருந்தாதபடி காக்க முற்பட வேண்டும்; அவற்றைப் பற்றிய கேள்விகள் தேர்வில் வாராதவாறு தடுக்க வேண்டும்.

மேற்போக்காகக் காண்போருக்கு இது வீணான முயற்சி போல் தோன்றும். ஆனால் பொன்னையும் வெள்ளியையும் விட விலையுயர்ந்த உண்மைச் செல்வங்கள் இளைஞர்களின் உள்ளமும் உடம்புமே என்பதை உணர்ந்தால், இந்த முயற்சியே சிறந்த முயற்சி என்பது புலப்படும். இளைஞர்களின் உள்ளம் கெட்டால், அவர்கள் வாழும் காலத்தில் சமுதாயத்தில் நேர்மையும் பண்பாடும் மங்கிவிடும். இளைஞர்களின் உடம்பு கெட்டால் அவர்கள் வாழும் காலத்தில் சமுதாயத்தில் உழைப்பும் ஊக்கமும் குன்றிவிடும்; இதை உணர்ந்தால்தான், இந்த முயற்சியின் சிறப்பு விளங்கும்.

மேலே குறித்தவாறு ஆராயும் போது, எந்த இருபது மாணவர்களைக் கொண்டு ஆராய்ச்சி நடத்த வேண்டும்? கண்களின் ஒளியும்

முகத்தின் அழகும் உடல் நலமும் குன்றாதவர்களாய், வயதுக்கு ஏற்ற வளர்ச்சி உடையவர்களாய் இருக்கும் மாணவர்களைக் கொண்டு ஆராய வேண்டும். சிலருடைய வாழ்வு கோணலாய்க் கெட்டிருக்கும். அதன் பயனாக அவர்கள் நினைவுத் திறன் மிகுந்தவர்களாய், தேர்வில் பக்கம் பக்கமாய்க் குறிப்புக்களை விளக்கி எழுத வல்லவர்களாய் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் நூற்றுக்கு ஒருவர் இருவர் இருப்பது உண்டு. சிலருடைய மூளை சரக்கறையின் பழங்கலம் போல் இருக்கும்; அறிந்தவற்றை எல்லாம் விடாமல் அடுக்கிவைத்திருக்கும். அவர்களைக் கொண்டு, மாணவர்களின் பொது நன்மையைக் கணக்கிடக்கூடாது. அது ஆறு விரலோடு பிறந்தவர்களைப் பார்த்து, ஐந்து விரல் உடையவர்களை உறுப்புக் குறைந்தவர்கள் (அங்கவீனர்கள்) என்று கூறுவதைப் போன்றது; மல்வீரர்களின் தசைநார்த் திரட்சியைப் பார்த்து விட்டு மற்றவர்களை மெலிந்தவர்களாகக் கருதுவதைப் போன்றது; நானூறு பவுண்ட் எடையுள்ளவர்களைப் பார்த்து விட்டு நூற்றைம்பது பவுண்ட் எடையுள்ளவர்களைச் சிறியவர்களாகக் கருதுவது போன்றது; ஏழடி நெட்டையர்களைப் பார்த்துவிட்டு, ஐந்தரையடி ஆட்களைக் குள்ளர்கள் என்று கூறுவதைப் போன்றது.

இன்றைய கல்வியில் இந்தக் குறை உள்ளது. யாரோ சில மாணவர்கள், உடம்பையும் உள்ளத்தையும் கெடுத்துக் கொண்டு பல புத்தகக் குறிப்புக்களை மனப்பாடம் செய்து தேர்வுக் காலத்தில் அவற்றையெல்லாம் விடைத்தாள்களில் விடாமல் கொட்டுவதைக் கண்டு, அந்த நினைவுத் திறனை அறிவு வளர்ச்சி என்று தவறாகக் கருதி, மற்றமாணவர்களும் அது போல் ஆகவேண்டும் என்று வற்புறுத்துவதே இந்தக் குறை. உடம்பையும் உள்ளத்தையும் கெடுத்துக் கொள்ளாமல் அறிவை வளர்க்கவல்ல இயற்கைப் போக்கு உள்ள மாணவர்களைக் கொண்டு ஆராய்ந்தால் இந்தக் குறை புலனாகும். ஐந்தரை அடி உயரத்தை இந்நாட்டு மக்களின் இயல்பான உயரம் என்று தெளிந்த பிறகு நெட்டையரும் குட்டையரும் யார் யார் என்பது புலனாகும். அதுபோல் இயற்கை வளர்ச்சியுடைய நல்ல மாணவர் யார் என்பதைத் தெளிந்த பிறகே, தவறான வகையில் கல்வி கற்றவர் யார் யார் என்பது விளங்கும். நினைவுத் திறன் எந்த அளவிற்குத் தேவை-எந்த எந்தத் துறையில் தேவை என்பதும் விளங்கும்.

ஐன்ஸ்டின் என்ற உலகப் பேரறிஞரின் வாழ்க்கையின் இரண்டு குறிப்புக்கள் இங்குப் பயன்படும்.

ஒன்று: தேர்வுகள் என்றாலேயே அவர் அஞ்சுவாராம்; துன்புறுவாராம்; கொடுந் தண்டனைக்கு ஆளானதுபோல் உணர்வாராம். முடிவுத் தேர்வு எழுதிய பிறகு

ஓர் ஆண்டு வரையில் விஞ்ஞானம் பற்றி எதையும் சிந்திக்க இயலாத வராக இருந்திராராம்.

மற்றொன்று: மற்ற முயற்சிகளை எளிதாக்கிக் குறைத்து உழைப்புச் சிக்கனம் செய்வது போல், மூளையின் உழைப்பிலும் சிக்கனம் வேண்டும் என்பது அவர் கருத்து. 1921 ல் அவர் அமெரிக்காவுக்குச் சென்றபோது, "ஒலி செல்லும் வேகம் என்ன?" என்று ஒருவர் கூட்டத்தில் கேட்டார். மிகப் பெரிய விஞ்ஞானியாகிய ஐன்ஸ்டின் அதற்குத் தயங்காமல் அளித்த விடை இது: "எனக்குத் தெரியாது. கலைக் களஞ்சியம் ஒன்றை எடுத்துப் பார்த்தால் எளிதில் அறியக் கூடியது இது. இத்தகைய குறிப்புகளைத் திணித்து நான் என் மூளையைக் குழப்பிக் கொள்வதில்லை."

—"ஆநந்த விகடன்"

பல்வேறு நாட்டுப் பழமொழிகள்

(தே. அருள்தாஸ், ஆசிரியர், பெரிச்சிபாளையம்.)

கடவுள், தான் எங்கும் இருக்க முடியாது, என்பதற்காகவே, தாயைப் படைத்திருக்கிறார். —**யூதப் பழமொழி.**

ஒரு நாடு அமைதியை விரும்புமாயின் அது எப்பொழுதும் போருக்குத் தயாரான ஆயுத பலத்துடன் இருக்கவேண்டும்.

—**இலத்தீன் பழமொழி.**

பழுக்காத பழத்தைப் பறிக்காதே! பழுத்ததும் அது தானே கீழே விழும். —**இரஷ்யப் பழமொழி.**

அழகான பெண்ணுக்குப் பணமும் பழமும்கொடு. புத்திசாலிப் பெண்ணுக்கு மலர் கொடு. —**பிரேசில் பழமொழி.**

கொழுத்த பணப்பைக்கு நகரத்தின் காவலர்கள்கூட அடிபணிகிறார்கள். —**ஜப்பானியப் பழமொழி.**

திருடுவதை விடப் பிச்சை எடுப்பது மேல்! பிச்சை எடுப்பதை விட இறந்துபோவது மேல்! —**பாரசீகப் பழமொழி.**

தன்னையே தான் புகழ்ந்துகொள்பவன் ஒரு முட்டாள். தன்னையே தான் இகழ்ந்து கொள்பவன் ஒரு பைத்தியக்காரன்.

—**டேனிஷ் பழமொழி.**

காற்றும், கடலலையும், யாருக்காகவும் காத்திருப்பதில்லை.

—**ஆங்கிலப் பழமொழி.**

பணம் பேச ஆரம்பிக்கும்பொழுது நியாயம் மௌனம் சாதிக்கிறது. —**இரஷ்யப் பழமொழி.**

எலி வளையானாலும் தனிவளை நன்று. —**தமிழகப் பழமொழி.**

இரத்த அழுத்த நோய்களைக் கண்டறியும் அதிசயக் கருவி

இரத்தக் குழாய் தடிப்பு, இரத்தக் கொதிப்பு அல்லது இரத்த அழுத்த அதிகரிப்பு, போன்ற இருதய, இரத்த ஓட்ட சம்பந்தமான நோய்களை டாக்டர்கள் ஆரம்பத்திலேயே தெரிந்து கொள்வதை, தாம் தயாரித்திருக்கும் ஒரு கருவி சாத்தியமாக்குகிறது என்று ஓஹையோ பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் கருதுகிருர்.

டாக்டர் ரால்ப் டபுள்யூ. ஸ்டேஸி என்ற இந்த உடல் கூற்றுப் பேராசிரியர் இக் கருவி கொண்டு ஓர் ஆண்டு ஆராய்ச்சி நடத்தியுள்ளதாகவும், இரத்தக் குழாய்களின் மூன்று முக்கிய குணங்களை—பொருள் திணிவு, மீள் சக்தி, பாகுநிலைமை ஆகியவற்றை இக் கருவியின் மூலம் அளவிட முடியும் என்றும் தெரிவிக்கிருர்.

இரத்த ஓட்ட இயல் பற்றிப் பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வந்திருக்கிருர் ஸ்டேஸி. இரத்த ஓட்ட சம்பந்தமான நோய்களைக் கண்டு பிடிப்பதில் இந்தக் கருவி தனது திறமையை நிரூபித்துள்ளதென்று அவர் கூறுகிருர்.

இரத்தக்குழாய்களின் மீள் சக்தியைச் சோதிப்பதன் மூலம், இரத்த அழுத்தம், இரத்தக் குழாய் தடிப்பு முதலிய இருதய இரத்த ஓட்ட சம்பந்தமான நோய்கள் வருவதை முன் கூட்டியே டாக்டர்கள் சொல்ல முடியும் என்கிருர் இந்தப் பேராசிரியர்.

ஆனல் ஒரு விஷயத்தை அவர் தெளிவு படுத்தி விட்டார். இந்தக் கருவிக்குத் தானகவே நோய் இன்னதென்று அறிந்துகொள்ள முடியாது; ஒரு டாக்டருக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்துக்கொடுக்கமட்டும்தான் இதனல் முடியும் என்கிருர் ஸ்டேஸி. நுண்மையான மின் அணுக் கருவிகள் பலவற்றை அநேக கம்பிகளைக் கொண்டு இணைக்கப்பட்டதுதான் இந்தக் கருவி.

இந்தக் கருவியின் முக்கிய அம்சங்களில் ஒன்று, அதன் எல்லையற்ற ஞாபக சக்தியாகும் என்கிருர் இந்தப் பேராசிரியர். மறப்பது என்பது இக் கருவியினல் முடியாத காரியம். நோய்கள் பற்றிய வரலாறுகளை முழு விவரங்களுடன் கிரகித்துக் கொண்டு, எதிர்கால உபயோகத்துக்குத் தயாராக வைத்திருக்க முடிகிறது இக்கருவியினல்.

நான்கு ஆண்டுகளாக நடத்திய ஆராய்ச்சிகளின் விளைவாகக் கிடைத்த அறிவு இந்தக் கருவியை அமைப்பதற்குப் பயன் படுத்தப்பட்டது. இந்தக் கருவியைப் பல்கலைக் கழகத்தின்

ஆராய்ச்சிக் கூடத்தில் தாம் உபயோகித்து வந்த ஆண்டில் 50 சிறுமாறுதல்களைத்தான் தாம் செய்ததாக டாக்டர் ஸ்டேஸி தெரிவித்தார்.

மத்திய ஓஹையோ இருதய சங்கம், அமெரிக்க சர்க்கார் சுகாதார இலாகா, பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி ஸ்தாபனம் ஆகியவற்றின் கூட்டுஆதரவில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி மூலம் இந்தக் கருவி அமைக்கப்பட்டது.

சென்ற ஆண்டு மின்னெஸோடாவில் ரோசெஸ்டரில் மேயோ ஆஸ்பத்திரியில், 15 நோயாளிகளின் நாடித் துடிப்புக்களைக் கணக்கிட டாக்டர் ஸ்டேஸி வரைப் படங்களை உபயோகித்து வந்தார். இருதயத்திலும், மணிக்கட்டிலும் துடிப்புக்கள் எடுக்கப்பட்டன. நாடித் துடிப்புக்கள் இருதயத் துடிப்பின் வேகத்திற்கொப்பாக மின்சாரக் குறியீடுகளாக மாற்றப்பட்டு, மேற்படி கருவிக்குள் செலுத்தப்பட்டுக் கருவியின் திரையில் வெளியிடப்பட்டன.

"நுட்பமான சில மாறுதலைச் செய்து இரத்தக் குழாய்களின் அமைப்பை அப்படியே மின்சாரம் மூலம் பிரதிபலிக்கச் செய்யலாம். அத்துடன் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் இந்த அமைப்பு எப்படி இயங்குகிறது என்பதையும் காணலாம்" என்கிறார் டாக்டர் ஸ்டேஸி.

இதற்கு அடுத்தபடியான பயன் என்னவென்றால், இரத்தக்குழாய் நோய் இருப்பதாகத் தீர்மானிக்கப்பட்ட நோயாளிகளின் நாடித் துடிப்புக்களை வரைப் படத்தில் குறிப்பிடுவதும், பிரஸ்தாபக் கருவியைக் கொண்டு, அந்நாடித் துடிப்புக்களில் ஏதாவது தவறு இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதும் ஆகும் என்றார் இந்த ஓஹையோ அரசின் பேராசிரியர்.

"ஓஹையோ பூராவிலுமுள்ள டாக்டர்கள் தகவல்களை அனுப்பக்கூடிய நிலையமாக இது இருக்கும். இந்தத் தகவல்கள் பிரமாண்டமான ஒரு கருவிக்குள் செலுத்தப்படும். விஷயங்களை எல்லாம் இந்தக் கருவி அலசிப் பார்த்து, டாக்டருக்குத் தேவையான முக்கிய தகவலைத் திருப்பிக் கொடுக்கும்" என்கிறார் டாக்டர் ஸ்டேஸி.

"நோய் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாத சந்தர்ப்பத்தில்தான் இந்த மாதிரியான வைத்திய உதவி உபயோகமாக இருக்கும். அப்பொழுதும் கூட, இந்தக் கருவியின் முடிவுகள், டாக்டரின் முயற்சிகளுக்கு ஒத்தாசையாக மட்டும்தான் இருக்க முடியும்" என்கிறார் டாக்டர் ஸ்டேஸி.

கடல்நீரைக் குடி நீராக்கும் இயந்திரம்!

கடல் தண்ணீரைக் குடி தண்ணீராக் மாற்றும் இயந்திரம் நியூயார்க்கில் இயங்கி வருகிறது. உறையவைக்கும் முறை இதில் கையாளப்படுகிறது. உலகிலேயே முதன் முதலாக இயங்கும் கடல் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் இது தான்.

நாள் ஒன்றுக்கு 15,000 காலன் தூய தண்ணீர் உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே இது அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நகரில் இருக்கும் காரியர் கார்ப்பொரேஷன் இந்த இயந்திரத்தை அரசாங்கக் கான்டிராக்டின் பேரில் அமைத்துள்ளது. காரியர் கம்பெனி, உப்பு நீக்கும் ஆராய்ச்சித் திட்ட மொன்றை அண்மையில் துவக்கி வைத்தது.

அமெரிக்க அரசாங்கத்து உள் நாட்டு இலாகாவைச் சேர்ந்த, முறை தேர்ந்தெடுக்கும் விசேஷக் குழு ஒன்று, அண்மையில் நடைபெற்ற இயந்திர இயக்கு விழாவில் கலந்து கொண்டது. சென்ற ஆண்டு காங்கிரஸ் ஒதுக்கியுள்ள ஒரு கோடி டாலர் மானியம் கொண்டு அமெரிக்காவில் அமைக்கப்படவிருக்கும் செய்து காட்டும் ஐந்து மாதிரி யந்திரங்களில், இப்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் உப்பு நீக்கும் முறைகளில் எந்த முறை கையாளப்பட வேண்டுமென்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு இக் குழுவிடம் விடப்பட்டிருக்கிறது. கீழ்க் கரையில் அமைக்கப்படவிருக்கும் செய்து காட்டும் யந்திரத்தில் காரியர் கம்பெனி அபிவிருத்தி செய்துள்ள முறை கையாளப்படலாம்.

அண்மையில் துவக்கப்பட்ட சோதனை இயந்திரம் இயற்கைக் கடல் நீரையும், செயற்கை உப்பு நீரையும் சோதனைக்குப் பயன் படுத்தும். அடுத்த வசந்த காலத்தின் ஆரம்பத்தில் இந்த இயந்திரம் கடற்கரையோரத்தில் ஓரிடத்தில் அமைக்கப்படும். அங்குச் சோதனைகள் தொடர்ந்து செய்யப்படும்.

காற்றில் பறக்கும் கார்!

தரைக்கு மேலும் தண்ணீருக்கு மேலும் திறந்த வெளியிலெல்லாம் நினைத்தபடி செல்லக் கூடிய புதுவகை வண்டி ஒன்று செய்ய நியூயார்க்கில் உள்ள கர்ட்டிஸ்ரைட் கார்ப்பரேஷன் என்னும் கம்பெனி திட்டமிட்டுள்ளது. புதுவண்டி தரையைத் தொடாமலே செல்லும். குறைந்த வேகமுள்ள காற்றினால் அது காற்றில் மிதந்த வண்ணம் பறந்து செல்லும். சக்கரம், அச்சு, “பிரேக்கு”, “கிளச்சு”, சட்டம் முதலிய எதுவும் இல்லாத இப்புதுவகைக் கார் 50 முதல் 200 குதிரைத் திறன் வரை உள்ள “பிஸ்டன்” வகை இயந்திரத்தால் இயங்கும். அது தரையிலிருந்து ஆறு அங்குலம் முதல் ஒரு அடி வரை உயரக் கிளம்பி அந்த நிலையிலேயே பிரயாணம் செய்யும்.

காலத்தை வென்ற குறள்

[வி. கோர்க்கின்]

“ வள்ளுவரின் **திருக்குறள்,** தமிழ் இலக்கியத்தின் எழில்மிகு இரத்தினம்.” சோவியத்-இந்தியக் கலாச்சார உறவுக் கழகத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் எ. தியாகோவின் அமைதியானகுரல் இது. மாஸ்கோவிலுள்ள சர்வ தேச நட்புக் கழகத்தின் கூட்ட மண்டபத்திலே சோவியத் பிர முகர்களும் இந்திய விருந்தினர் களும் கூடியிருந்தனர். **குறளை** உலகுக்கு அளித்த திருவள்ளுவ ரின் நினைவைப் போற்றுவதற்கா கக் கூட்டப்பெற்ற கூட்டம் அது.

சோவியத் நாட்டில் முதன் முத லாக இவ்வாண்டுதான் திருவள்ளு வர் நாள் கொண்டாடப்பட்டது. அயல் மொழிப் பதிப்பகத்தைச் சேர்ந்த திரு சோமசுந்தரம் உணர்ச்சிப் பெருக்குடன் சொற் பொழிவாற்றினர். இரண்டாயி ரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற் றப்பட்ட **திருக்குறள்** பற்றி அவர் விளக்கிப் பேசினர்.

“ பதினெட்டு நூற்றாண்டு களுக்கு முன்பு தோன்றிய நூல் இது. இந்நூல் இயற்றப் பெற்ற காலங் குறித்தும், இதன் ஆசிரிய ரது காலங் குறித்தும் ஆராய்ச்சி யாளர்களால் இன்னும் முடிவாகக் கூற இயலவில்லை” என்றார் அவர். “எனினும் ஒன்றை மட்டும் அறுதியிட்டுக் கூறலாம் **திருக்குறள்** அது தோன்றிய காலம் முதலாகவே மக்களின் இதயத் தைக் கொள்ளை கொண்டு வந் துள்ளது.

“இந்நூல் தோன்றியகாலத்தை நாம் கருத்தில் கொண்டு ஆராய் வோமாகில் இதன் வரலாற்று முக் கியத்துவம் நன்கு புலனாகும். தமிழ் மக்களின் வரலாற்றில் அது மிகவும் நெருக்கடியான காலம். எல்லாம் விதிவசமென்ற வறட்டு நம்பிக்கையும் செயலற்ற நிலையும் ஆக்கம் பெற்றிருந்த காலம் அது. மக்களின் தன்னம்பிக்கையற்ற நிலையை ஒழித்துவிட்டு சுதந்திர மாக வாழ வழி செய்வது அவசிய மாயிருந்தது. உண்மையான வாழ் வுக்கான பாதைகளைத் திறந்திடு வது இன்றியமையாததாகி விட் டது.

“ இத்தகையதோர் காலத்தில் தான் திருவள்ளுவர் அவரது **குறளை** இயற்றினர். இந்த அமர இலக்கியம் மனித வாழ்வின் இன் பத்தைப் பறைசாற்றியது. நன் னம்பிக்கை ஒளியைப் பரப்பியது. மனித வாழ்வின் மேன்மையை வலியுறுத்தியது. மக்களைத் தட்டி யெழுப்பி அறைகூவி அழைத்தது.

“ தமிழ் மக்களுடைய அளவி டற்கரிய கலை இலக்கியப் பாரம் பரியங்களின் அடிப்படையிலே தோன்றிய அமர நூல் இது.

எனவேதான் **திருக்குறள்** உலகோரால் போற்றப்படுகிறது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் புகழ்பெற்று விளங்குகிறது. பல்வேறு ஐரோப்பிய மொழிகளிலும் இந்நூலைப் பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். இப்பொழுது **திருக்குறள்** ரஷ்ய மொழியிலும் வெளிவரப் போகிறது.''

சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கிழக்கு நாட்டுக் கழகத்தின் ஆராய்ச்சி ஊழியர் ஒய். கிலசோவ் **திருக்குறளை** ரஷ்யனில் பெயர்த்துள்ளார். இந்தக் கூட்டத்தில் அவர் சொற்பொழிவாற்றினார். ''மூலத்தின் பொருள் சிறிதும் திரியாதிருக்க வேண்டுமென்பதே எனது முக்கியநோக்கமாகக் கொண்டு நான் **குறளை** ரஷ்யனில் பெயர்த்துள்ளேன்'' என்று ஒய். கிலசோவ் கூறினார். ''மனிதனிடம் அளவுகடந்த அன்பும் கருணையும் கொண்ட மாபெரும் ஆசிரியரும் தத்துவஞானியுமான திருவள்ளுவருடைய சிந்தனையின் ஆழத்தை வாசகர்களுக்கு ஓரளவேனும் புலப்படுத்த வேண்டுமென விரும்புகிறேன்'' என்று கூறி அவர் தனது மொழிபெயர்ப்பிலிருந்து பல பாக்களைப் படித்துக் காட்டினார்.

''அரண் இல்லாதவராயினும் தாயகத்தைக் காத்து நிற்போரை வெல்வது அரிது. நண்பனுக்குப் பணியாற்றுகையில் சாகநேரிடின், அந்தச் சாவு விரும்பத்தக்கதே. மக்களுக்கு ஆற்றும் சேவையால் கேடு வந்திடின், அக்கேடு ஒருவன் தன்னை விற்றாவது வாங்கிக் கொள்ளும் தகுதி உடையதாகும்.''

கவியரசரின் சிந்தனை முத்துக்கள் அவர் மறைந்து எத்தனையோ பல நூற்றாண்டுகளுக்குப் பின் மாஸ்கோவிலே நடப்புக் கழகத்திலே கூடியிருந்தோரின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. **குறளைப்** பற்றித் தெரிந்திருந்த இந்தியர்களும் முதன் முதலாகக் கேள்விப்பட்ட பல ரஷ்யர்களும் குறளாசிரியரின்கருத்துக்கள் இன்றுங் கூட காலத்துக்கு உகந்ததாயிருப்பதைக் கண்டு வியந்து மகிழ்வுற்றனர்.

''எங்களுடைய **திருக்குறளைப்** பற்றி நான் கூறியதை நீங்கள் கருத்துடனும் ஆவலுடனும் கேட்டது குறித்துத் தமிழ் மக்களின் சார்பிலே நன்றி தெரிவிக்கிறேன்'' என்று திரு சோமசுந்தரம் கூறியதும் எல்லோரும் ஆர்வ முழக்கமிட்டனர்.

துப்பாக்கி பிடித்த கை தூரிகையும் பிடிக்கும்!

அப்பொழுது இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்தது. பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில், ஜெனரல் டுவைட். ஐஸன்ஹாவர் இருவருக்கும் கவலைநிறைந்த கடினமான வேலை. சிறிது நேரமாவது கவலையை மறந்திருக்க வழி என்ன என்ற எண்ணம் உண்டாயிற்று. ஓவியம் தீட்டி ஓய்வுபெறலாம் என்று சர்ச்சில் ஒரு வழி சொன்னார். இக் கலையில் அவருக்கு நெடுநாள் ஈடுபாடு உண்டு; கவலைபோக்கும் கைகண்ட மருந்து இது எனக் கண்டவர் அவர். ஐஸன்ஹாவரும் அவர் சொல்வது சரி என ஒப்புக் கொண்டார். எனினும் 1947 வரை அவரால் சர்ச்சில் மருந்தை உட்கொள்ள முடியாமல் போய் விட்டது.

1947-ல் ஜெனரல் ஐஸன்ஹாவர் அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் இராணுவத் தலைமைத் தளபதியாக இருந்தார். அப் பதவியில் இருப்பவர்களின் உருவப் படத்தை வரைந்து வைக்கவேண்டியது முறை. அதற்காக ஓவியர் தாமஸ் ஸ்டீபென்ஸ் வந்திருந்தார். ஐஸன்ஹாவரை உட்கார வைத்து, ஓவியர் தம் வேலையைத் தொடங்கினார். ஐஸன்ஹாவரின் முகத்தைப் பார்ப்பதும், தாளில் வரைவதுமாக இருந்த ஓவியர் அவரை மேலும் மேலும் கூர்மையாகப் பார்க்கத் தொடங்கினார். சர்ச்சில் சொன்னது ஐஸன்ஹாவருக்கு நினைவு வந்திருக்க வேண்டும். திடீரென்று "நானும் இது போல் செய்து பார்க்கவேண்டும்" என்றார் அவர்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இருந்தது ஓவியருக்கு. "எனக்கும் ஓய்வுவேண்டியிருந்தது; ஜெனரல் உருவத்தைப்பார்த்து வரைவது எனக்குப் பெரும் பாடாகப் போய்விட்டது. ஏனென்றால் அவர் முகக்குறி அடிக்கடி மாறிற்று. அவர் திருமதி ஐஸன்ஹாவரைப் பார்த்து வரையும்படி செய்தேன். எப்படி வரைவது என்று நான் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அவர் மிக்க கூர்மையாகப் பல மணிநேரம் அந்தத் திரைச் சீலையில் தீட்டலானார். திருமதி ஐஸன்ஹாவரைப் பார்த்து அவர் வரைந்த அப் படம் சிறப்பான ஒன்று." இவை ஓவியர் தாமஸ் ஸ்டீபென்சின் வார்த்தைகள்.

இன்று ஜனாதிபதி ஐஸன்ஹாவர் போகுமிடமெல்லாம் அவர் ஓவியக்கருவிகளும் அவர்கூடவே போகும். ஜனாதிபதி மாளிகையில் அவர் படுக்கையறைக்கு அடுத்த அறைதான் அவர் படம் வரையும் ஓவியக்கூடம். அவர்

விடுமுறைக்காலஇல்லம் ஜார்ஜியா என்னும் ராஜ்ஜியத்தில் அகஸ்டா என்னும் ஊரில் உள்ளது; அங்கும் இவ்வாறுதான் படுக்கையறையை அடுத்து ஓவியக் கூடம் உள்ளது. படம் வரைவதற்கு வசதியான அறை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் பொருட்படுத்த மாட்டார். மேற்கு இராஜ்யமாகிய கொலராடோவில் மலைகளில் ஒரு மரக் குடிலிலும் அவர் படம் வரைந்துள்ளார். கிழக்கத்திய இராஜ்யமாகிய பென்சில்வேனியாவில் ஒரு விவசாய இல்லத்திலும் வரைந்திருக்கிறார். பிரான்சில் ஒரு வீட்டின் ஜன்னல் வழியே வெளியே எட்டிப் பார்த்தும் வர்ண ஓவியம் தீட்டியுள்ளார். பலப்பல இடங்களில் திறந்த வெளியில் இருந்து சித்திரம் எழுதியுள்ளார். நேரே காட்சிகளைப் பார்த்தவண்ணம் வரைவதுமல்லாமல் வேறு படங்களைப்பார்த்தும் அவர் வரைவார். கைதேர்ந்த கலைஞர் ஆக வேண்டுமென்ற எண்ணம் அவருக்குக் கிடையாது. கவலையை மறந்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இக் கலையைத் தேர்ந்தெடுத்துள்ளார். இது அவருக்கு ஓர் இன்பப் பொழுது போக்கு. எழுதிய படங்களைச் சிறிது காலமாகத்தான் சேர்த்து வைத்துள்ளார்.

இப்பொழுதும் அவர் வரைந்த ஓவியங்களில் பல அவர் கைவசம் இல்லை. அவர் படம் வரைகிறார் என்று நண்பர்கள் கேள்விப்படவே, பலர் அவரதுபடங்களைக் கேட்கலாயினர். ஜனாதிபதி மாளிகையில் சில படங்கள் மட்டும் இருக்கின்றன. இவற்றில் இரண்டு இவரது மூத்த பேரப் பிள்ளைகள் இருவருடைய சிறிய உருவப் படங்கள். வேறு சில படங்கள் இயற்கைக் காட்சிகள்.

ஜனாதிபதி படம் வரையும் முறையே ஒரு தனி. முதலில் குறிப்பெடுத்துக்கொண்டு பிறகு வர்ணம் தீட்டுவது என்பது அவரிடம் கிடையாது. நேரே வர்ணம் தீட்டத் தொடங்கி விடுவார். விரைந்து மளமளவென்று தீட்டுவார். படம் சரியாக வந்தால் முகம் மலரும். இல்லையோ படத்தைக் குத்துவதுபோல் கூர்ந்து பார்த்துக்கொண்டேயிருப்பார். படம் வரைவது பற்றிப் பாடம் கேட்க அவருக்கு விருப்பம் இல்லை. என்றாலும் ஓவியர் ஸ்டீபென்ஸ் அவருக்கு எத்தனையோ நுட்பங்களைச்சொல்லிக் கொடுத்து உதவியுள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியான பிறகு பல மாதகாலமாக அவரது தூரிகை மூலையில் தூங்கிற்று. புதிய பதவியின் பொறுப்பை முன்னிட்டு அவர் வர்ணம் தீட்டுவதை மறந்தார். நாளடைவில் இடைக்கிடை ஓய்வு இன்றியமையாததாயிற்று. முன்பில்லாத உற்சாகத்தோடு இன்று அவர் படங்கள் தீட்டுகிறார். வேறு வேலைகள் இல்லாவிட்டால், வாரத்துக்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாள் அவர் மாலை நேரத்

(53-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஆசியாவுக்கு வந்த முதல் அமெரிக்கத் தலைவர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

"உலக சமாதானத்தை முன்னிட்டு உலகத்தில் எந்த இடத்துக்கு வேண்டுமானாலும் போவேன்" என்று சொன்னவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவர் என்று யாரும் சொல்வார்கள்.

நேச நாட்டுத் தலைவர்களைக் கண்டு பேச அவர் மூன்று முறை வெளி நாடுகளுக்குப் போயிருக்கிறார்.

இப்பொழுது இந்தியா வரை வந்து போக இவர் 20,000 மைல் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் இவ்வளவு பெரிய சுற்றுப் பயணம் செய்தது கிடையாது. பிராங்ளின் ரூஸ்வெல்ட் போர்க் காலத்தில் டெஹ்ரான் நகருக்கு

(52-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் பல மணி நேரம் படம் தீட்டுவது வழக்கம். விடுமுறை நாட்களில் "கோல்ப்" ஆடுவதும், தூண்டில் போட்டு மீன் பிடிப்பதும் போலவே தூரிகை கொண்டு ஓவியம் தீட்டுவதும் அவருக்கு நேரப் போக்காகும்; சர்ச்சில் சொன்ன கைப் பக்குவ மருந்தை இவர் சரிவர உட்கொண்டு வருகிறார் என்பதற்கு ஐயமில்லை.

வந்தார் என்பதைத் தவிர, அமெரிக்க ஜனாதிபதி வேறு ஒருவரும் ஆசியாவுக்கு வந்ததில்லை.

அடுத்த வசந்த காலத்தில் ஐசனோவர் மாஸ்கோவுக்குப் போவார்.

ஐஸன்ஹாவர் "சமாதான புருஷர்" என்று கூறுவதுண்டு. இவ்விருதுக்கு அவர் பொருத்தமானவர் என்பதற்கு ஐயம் இல்லை.

குருஷேவ் அமெரிக்காவுக்கு வருமுன்பாக ஐஸன்ஹாவர் ஐரோப்பா சென்றார். பான், லண்டன், பாரிஸ் நகர மக்கள் ஆரவாரமாக அவரை வரவேற்றனர்.

ஆக்கிரமிப்புக்கு எதிரி

படை பலம் உபயோகிக்க நேர்ந்தாலும் சரி, ஆக்கிரமிப்பை எதிர்க்காமல் விடோம் என்ற உறுதி நேச நாடுகளுக்குள் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்கு பெர்லின் மக்கள் இருபது லட்சம் பேர்களுடைய சுதந்திரம், பிரதேச உரிமை, நல்வாழ்வு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு "நாட்டோ" ஸ்தாபனத்தின் பதினைந்து நாடுகளும் உறுதி பூண்டுள்ளன என்றும் ஜனாதிபதி ஐஸன்ஹாவர் அமெரிக்கா திரும்

பியதும் விளக்கமாகக் குறிப்பிட்டார்.

அமைதி முறை ஆர்வம்

அமெரிக்க மக்கள் சமாதானத்தை விரும்புபவர்கள் என்பதை நேரில் கண்டு கொள்ளும்படி ஐஸன்ஹாவர் சோவியத் பிரதமர் குருஷேவைத் தமது நாட்டுக்கு அழைத்ததும் வெற்றி விளைவித்தது. உலக அமைதிக்கு உலை வைப்பதாக இருந்த பெர்லின் சிக்கல், பேச்சு வார்த்தை மூலம் அமைதியாகத் தீர வேண்டும் என்ற உடன்பாடு ஏற்பட்டது. "தீராதிருக்கும் சர்வதேச விவகாரங்கள் எல்லாம் பலாத்காரத்தில் அன்றிப் பேச்சு வார்த்தைகள் மூலம் அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும்" என்று குருஷேவ் ஒப்புக் கொண்டார்.

அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட குருஷேவ் பீக்கிங் சென்று சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களிடம், "தீராதிருக்கும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குப் போரை ஒரு வழியாகக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும்; அதற்கு நாம் நம்மாலானதையெல்லாம் செய்ய வேண்டும்" எனக் கூறினர்.

அமெரிக்கத்தலைவர் ஐசனேவர்

திறந்த வெளித் திட்டம்

ஐனதிபதி ஐஸன்ஹாவர் 1955ல் நால்வர் மாநாட்டுக்காக ஜெனீவா சென்ற போது, "திறந்த வெளித் திட்டம்" ஒன்றை வெளியிட்டு உலகப் புகழ் பெற்றார். இராணுவ ஏற்பாடுகளைப் பற்றிய விவரங்களையெல்லாம் வெளியிடுவதாகவும், அமெரிக்காவின் ஒரு கரை முதல் மறு கரைவரை விமானத்திலிருந்து படம் பிடித்துக் கொள்ளலாம் என்றும், அதே போல் ரஷ்யாவும் இணங்க வேண்டும் என்றும் அவர் கூறினர். படை பலக் குறைப்புத்தான் உண்மையான நோக்கம் என்று அவரது திட்டம் எடுத்துக் காட்டிற்று. "அமைதிக்காகப் பாடுபடுவதே அரசியல் அறிஞரின் அரும்பெரும் பணி" என்பதை அவர் நால்வர் மாநாட்டில் வலியுறுத்தினர்.

அமைதிக்கு அணுசக்தி

அமைதிக்காக அணுசக்தியைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் ஐஸன்ஹாவரின், பேரார்வமாகும். அதற்காக அவர் 1953 டிசம்பர் 8-ல் ஐ. நா. சபை சென்று, "புதிது புதிதாய்க் கண்டு பிடிக்கும் மனிதனது அற்புத சக்தி அவனது சாவுக்கு வழி வகுப்பதாக இருக்கக்கூடாது; அவன் வாழ்வுக்கு வகை செய்வதாக அமைய வேண்டும்" என உருக்கமாகப் பேசினார். அதன் பயனாக, 1955-ல் ஜெனீவாவில் அமைதிப் பணிக்குரிய அணுசக்தி பற்றிய சர்வதேச மாநாடு முதன் முதலாகக் கூடிற்று.

1952-ல் ஜனாதிபதியாக அமெரிக்க மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட உடனேயே ஐஸன்ஹாவர் தமது சமாதானச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளலானார். அன்று அவர் கொரியா சென்று சுற்றிப்பார்த்தார்.

உலக அமைதியை முன்னிட்டு இவர் வெளி நாடுகளுக்குச் சென்று தலைவர்களைக் கலந்து பேசி வருவதுமன்றி, பல நாட்டுத் தலைவர்களைத் தமது நாட்டுத் தலைநகருக்கு அழைத்து அவர்களோடு ஆலோசனை நடத்துவதும் இவருக்கு வழக்கம்.

இரண்டாவது உலக யுத்தத்தில் இவர் நேச நாடுகளுக்கு வெற்றி தேடிக் கொடுத்தவர். உலகம் இதுவரை காணாத மாபெரும் படை அவரது தலைமையின் கீழ் இருந்தது. போரினால் ஏற்படும் அழிவு அவருக்கு நன்கு தெரியும். போரார்வம் அவருக்கு இல்லாதது தில் வியப்பில்லை; அமைதிப் போரார்வமே அவருக்கு.

உழவர் குடும்பம்

டுவைட் டி. ஐஸன்ஹாவர் 1890 அக்டோபர் 14-ல் அமெரிக்காவில் டெக்ஸாஸ் ராஜ்யத்தில் டெனிசன் என்னும் ஊரில் பிறந்தார். தந்தையார் பெயர் டேவிட் ஜே. ஐஸன்ஹாவர்; தாயார் ஐடா எலிசபெத் ஐஸன்ஹாவர். ஏழு ஆண்பிள்ளைகளில் இவர் மூன்றாமவர். இவர் உடன் பிறந்தவர்களில் நால்வர் இன்னும் இருக்கிறார்கள். ஒருவர் லேவாதேவிக்காரர்; ஒருவர் வழக்கறிஞர்; ஒருவர் இன்ஜீனியர்; மற்றொருவர் மில்டன் ஐஸன்ஹாவர், ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத் தலைவர்.

டுவைட் ஐஸன்ஹாவருக்கு இரண்டு வயதாக இருக்கும் போது, குடும்பம் கான்சாஸ் ராஜ்யத்திலுள்ள அபிலீன் என்ற ஊருக்குக் குடிபெயர்ந்தது. அங்குதான் டுவைட் படித்ததும், தம் வீட்டுப் பண்ணையில் வேலை செய்து பழகியதும்.

இவர் இராணுவ வீரராவார் என்பதற்கான அறிகுறி எதுவும் இளமையில் தெரியவில்லை. உயர் நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்த பின்பு இரண்டு ஆண்டுகளாக இவர் இடைக்கிடை பண்ணை வேலைகள் செய்தார்.

நினைத்த இடமும் கிடைத்த இடமும்

அமெரிக்கக் கடற்படையில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வு எழுதும்படி நண்பர் ஒருவர் கூறவே, டுவைட் ஐஸன்ஹாவர் அத் தேர்வு எழுதினார். தேறினார். ஆனால் வயது அதிகம் என்று இவரைச் சேர்க்க மறுத்து விட்டார்கள்.

1911-ல் ஐஸன்ஹவர் இராணுவக் கல்லூரியில் சேர்ந்தார். 1915-ல் அங்கு இறுதித் தேர்வில் மூன்றாவதாகத் தேறினார். டெக்ஸாஸ் ராஜ்யத்தில் சான் அன்டோனியோ என்னும் இடத்தில் இரண்டாவது லெப்டினன்டாக நியமிக்கப்பட்டார்.

அங்குதான் மேமி ஜெனிவா டௌட் என்ற பெண்மணிக்கும் இவருக்கும் 1916 ஜுலை முதல் தேதி திருமணம் நடந்தது. அதே தேதியில்தான் அவர் முதல் லெப்டினன்டாகப் பதவி உயர்வு பெற்றதும்.

இவர்களுக்கு இரண்டு ஆண் மக்கள் பிறந்தனர். மூத்தபையன் டௌட் டுவைட் மூன்றாவது வயதில் இறந்து போனான். அடுத்த பையன் ஜான் ஷெல்டன் டௌட் ஐஸன்ஹாவர் தந்தையைப் போல இராணுவக் கல்லூரிப் பட்டதாரி; இன்று ஜனாதிபதி மாளிகையில் ஓர் உதவிக் காரியதரிசியாகத் தந்தைக்கு உதவி செய்கிறார்.

முதல் உலகப் போர் முடிந்த பிறகு டுவைட் ஐஸன்ஹாவர் பனமாக் கால்வாய்ப் பகுதியிலும் பின்னர் அமெரிக்காவில் பற்பல இடங்களிலும் பணியாற்றினார்

பிலிப்பைன்ஸில்...

1935ல் ஜெனரல் டக்ளஸ் மெக் ஆர்தருக்கு உதவியாளராக இவரை பிலிப்பைன்ஸுக்கு அனுப்பினார்கள். அங்கு பிலிப்பைன் விமானப் படையை உருவாக்க மெக் ஆர்ஹதருக்கு ஐஸன்ஹாவர் உதவி புரிந்தார். அப்பொழுதுதான் அவர் விமானம் ஓட்டப் பயின்றார்.

ஜப்பானியர் பேர்ள் ஹார்பரைத் தாக்கிய ஒரு வாரத்திற்குள் ஐஸன்ஹாவரை வாஷிங்டனுக்கு அழைத்து ராணுவத் தலைமைக் காரியாலயத்தில் நியமனம் செய்தனர். அப்பொழுது இராணுவத் தலைமைத் தளபதியாக இருந்தவர் காலஞ்சென்ற ஜார்ஜ் வி. மார்ஷல்.

இரண்டாவது உலக யுத்தத்தில்......

1842ல் ஐரோப்பிய அரங்கில் அமெரிக்கத் தளபதியாக ஐஸன்ஹாவர் பணியாற்றலானார். அதே ஆண்டு இறுதிக்குள் அவரை ஆப்பிரிக்காவில் நேச நாடுகளின் படைகளுக்கெல்லாம் தலைமைத் தளபதியாக்கினார்கள். வட ஆப்பிரிக்கா மீது படையெடுத்துச் சென்று அவர் வெற்றி கொண்டார்.

1943ல் அவரது தலைமையில் நேச நாடுகளின் படைகள்

ஐரோப்பாமீது படையெடுத்து அங்கு இறங்கின.

1945ல் போர் முடிந்ததும், ஐஸன்ஹாவர் வாஷிங்டனில் போர்ப்படை அலுவலகத்தில் தலைமைத் தளபதியாக நியமனம் பெற்றார்.

வாழ்க்கை இலட்சியம்

1948ல் படையிலிருந்து விலகி கொலம்பியாப் பல்கலைக் கழகத் தலைவரானார். அப்பொழுது அவர் அங்கு முதன் முதல் ஆற்றிய உரை அவரது வாழ்க்கைப் பணியை விளக்கும். படைக் கோலத்தை விடுத்து, பொதுத் துறைகளில் பணிபுரிய வந்திருப்பினும், அடிப்படையான மனித சுதந்தரத்தைப் பேணி வளர்ப்பதே அன்றும் இன்றும் தமது வாழ்க்கை இலட்சியமாகும் என்று அவர் எடுத்துரைத்தார்.

1950ல் "நாட்டோ" ஸ்தாபனத்தின் தலைமைத் தளபதியாக அவர் ஐரோப்பாவுக்கு அனுப்பப் பட்டார்.

1952ல் அமெரிக்க அரசியல் கட்சித் தலைவர்களின் இடைவிடாத வேண்டுகோள்களுக்கு இணங்கி, ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்தலில் நின்றார். குடியரசுக் கட்சியின் அபேட்சகர் இவர். இவரது வெற்றியின் மூலம் குடியரசுக் கட்சி 20 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் ஆட்சிக்கு வந்தது.

1955ல் இருதய நோய் ஏற்பட்டது. 1956 ஜூன் மாதம் வயிற்றில் ஒரு பெரிய அறுவை மருத்துவம் செய்ய வேண்டியதாயிற்று.

பெருவாரி ஆதரவு

1956ல் மீண்டும் ஜனாதிபதியாக மிகப்பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பெற்ற வாக்குகள் 3 கோடி 55 லட்சம். இவ்வளவு வாக்குகள் அமெரிக்க வரலாற்றிலேயே வேறு எவருக்கும் கிடைத்ததில்லை.

மூன்றாவது முறை ஜனாதிபதியாக நிற்பது கூடாது என்று இன்று அமெரிக்கச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

"கோல்ப்" ஆட்டந்தான் ஐஸன்ஹாவருக்கு விருப்பமான விளையாட்டு. வர்ண ஓவியம் வரைவதும் இவருக்கு ஓர் இன்பப் பொழுது போக்காகும்.

"ஐரோப்பாவில் அறப்போர்" என ஐஸன்ஹாவர் ஒரு நூலும் எழுதியுள்ளார். அது இரண்டாவது உலகப் போர் பற்றிய வரலாற்றை விளக்கும். 1948ல் அது வெளியாயிற்று.

அமெரிக்க வரலாற்றிலும், உலக வரலாற்றிலும், மக்களால் பெரிதும் போற்றப்படும் செல்வாக்குமிக்க ஓர் அரசியல் அறிஞர் ஐஸன்ஹாவர் என்பதை இன்றைய வரலாற்றறிஞர்கள் ஒப்புக்கொள்வர்.

கிளியின் கதை!

[மாண்மகிழன்]

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு...

கிளி பிறந்தாள். அழகைக் கற்பனை செய்தவர்களுடைய கண்களெல்லாம் குளிர்ந்தன! ஆமாம்! அழகு இந்த உலகத்திலேயே பிறந்துவிட்டது.

குறுகுறு நடந்தாகிவிட்டது. கானகத்து மானின் துள்ளல் கண்டாகிவிட்டது. மழலைச் சங்கீதமும் முடிவடைந்துவிட்டது. கிளி மொட்டாகி மலர்ந்து, எழில் மணம் பரப்பினாள். அழகுக்கு அலங்காரம் வந்துவிட்டது. இப்படியொரு வண்ணக் கோலத்தை நம் வாலிப காலத்தில் காணவில்லையே எனப் படுகிழங்களும் ஆயாசப்பட்டன. வாலிபர்களோ அழகு இலாகிரியில் தீய்ந்து கருகினார்கள். நாம் கொடுத்து வைக்காதவர்கள்! இன்னொரு முறையேனும் அரச குடியில் பிறக்கவேண்டும். கிளியின் தோள் தொட்டு, கதுப்புக் கன்னங் கிள்ளி விளையாடவேண்டும் என்று இன்ப தேவனைப் பிரார்த்தனை செய்துகொண்டார்கள்! என்ன செய்வது, எப்படியாவது அலை பாயும் உள்ளத்திற்குச் சமாதானம் சொல்லிக்கொண்டுதானே ஆகவேண்டும்! அவளென்ன சாமான்யமானவளா! எகிப்து நாட்டு இளவரசியல்லவா!

அவளை மணக்கப்போகும் மகராசனைக் காணுவதற்குள் அவளுடைய நாடு பறிபோனது. பகைவர்கள் வென்றுவிட்டார்கள்! அவளுடைய கூந்தல் அணியில் ஒளி பொழிந்துகொண்டிருந்த மணிமுடி சாய்ந்துவிட்டது. அவள் பராரியானாள். கையிலே காசில்லை, நெஞ்சிலே அமைதி இல்லை. சந்திர பிம்பத்திலே இயல்பு இல்லை. அவளுடைய மயில் கழுத்திற்கே பகைவர்களுடைய கட்டாரி காத்துக் கிடந்தது.

பயந்துவிட்ட கிளி மணந்து கொள்ள விரும்பினாள். அவளுடைய அரச சம்பிரதாய முறையில் சகோதரனைக் கலியாணம் செய்துகொண்டாள்.

எதற்கு இத்தனை வியப்பு? அவளுடைய வமிசத்தில் சித்தப் பாவைக் குலவிய குமரிப் பெண்களும் உண்டு! நமக்கு இது எப்படித் தோன்றினாலும், அவர்களுடைய வியாக்கியானப்படி, அரச சுத்தியைக் காப்பதற்குத் தான் ஒரு தாயின் குழந்தைகளே ஒருவரை ஒருவர் மணக்கலாம் என்கிற முறை உண்டாயிற்றாம்!

புதுமணத் திளைப்பில் கிளி சில காலம் இன்புற்றுத்தான் இருந்தாள். திடீரென்று அரும்பெடுத்துவிட்ட குடும்பத் தக

ராறுதான் அவர்களுடைய அன்பு வாழ்க்கைக்கு உலை வைத்துவிட்டது.

மீண்டும் போராட்டம்! மறுபடியும் கண்ணீர்!

கிளி நைந்துருகினாள். அவளுடைய கணவனே அவளைக் கொத்திக் கூறு போட்டுவிட வாளெடுத்துப் போர் முழக்கிக் கிளம்பிவிட்டான்.

உயிரின் ஆசை அவளை எகிப்தினின்று துரத்தியது! மூச்சு விம்ம ஓடினாள்...

*

பொற்கிண்ணத்திலே திராட்சை ரசம் தளதளத்துக் கொண்டிருந்தது. சாற்றில் மூழ்கி இருந்த தமிழகத்து முத்துக்கள் மாவீரன் ஜூலியஸ் சீசரிடம் தாயகத்தின் சிறப்பை ஓதிக் கொண்டிருந்தன. சீசர் பொற்கிண்ணத்தைக் கரத்தில் பிடித்தான். ஆரணங்கு அவனுக்கு முன்னே ஆடிக்கொண்டுதான் இருந்தாள். அவனுடைய எண்ணம் தூங்கியது. அங்கே இன்பக் கனவு......கிளி மெல்ல வந்தாள்......புன்சிரிப்பைக் குழைத்துக்கொண்டே அவனிடம் பழரசக் கோப்பையைத் தந்தாள்... அவனுடைய மனதிலே கொப்பளித்துக்கொண்டிருந்த வெறிக்குத் தாளம் போட்டது. அவன் எட்டி அவள் மென்கரத்தைப் பற்றினான்...இன்பமும் சாந்தியும் அவனைப் பொன்னூசல் ஆடச் செய்தன...

அப்போது யாரோ வந்து அவனுடைய களிப்பைக் கலைக்கிறார்கள். ஆத்திரத்தோடு வந்தவனைப் பார்க்கிறான். அவன் அஞ்சியும் அஞ்சாமலும் மெல்ல வருகிறான். ஏதோ காதுகளிலே மொழிகிறான். உடனே அவன் வதனத்திலே மறுமலர்ச்சி! இதயத்திலே கிளு கிளுப்பு!

கலகலவென்று தன்பாட்டில் புன்னகை பூத்துக்கொண்டே "அடே......உடனே போய்க் கிளியை அழைத்துவா...அவள் என்முன் தோன்றியாகவேண்டும்" என்று கட்டளை இட்டான். சேவகனோ சிட்டாகப் பறந்தான்.

சீசர் நிமிர்ந்து உட்கார்ந்தான். "கிளி...! உன் நிலை இப்படியா ஆகவேண்டும்? அல்லோல கதியில் நீயா? ஒரே ஒரு வார்த்தை சொல்லி இருக்கக் கூடாதா? எப்படித்தான் நலிவுற்றிருக்கின்றாயோ...உனக்கா இப்படியொரு காலம் வரவேண்டும்?"

சீசர் தன்பாட்டில் உளறிக் கொட்டிக்கொண்டிருந்தான்.

அனுப்பப்பட்ட சேவகனின் வருகையிலே அவன் மனம் அலைந்துகொண்டிருந்தது!

கடுங்குளிரால் நடுங்கி முடங்கிக் கிடக்கும் குருவியைப் போல் அந்த வீட்டில் கிளி அடைந்து கிடந்தாள். அவளுடைய இதயத்தின் பீதியைக் கண்கள் காட்டி நின்றன. வீட்டுக்கு வெளியே யாரோ கதவை இடித்துக்கொண்டிருந்தார்கள். அவள்

நிலைகுலைந்தாள். மறைந்திருக்கும் இந்த இடமும் பகைவர்க்கு எட்டி விட்டதா என ஏங்கினாள். மனதை உறுதிப்படுத்திக் கொண்டு கண்ணீரும் கம்பலையுமாய்ச் சென்று கதவைத் திறந்தாள்.

ரோமானிய வீரர்கள் முடுக்கோடு தோற்றமளித்தார்கள்.

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

" நீங்கள்தானே கிளியோபாட்ரா..."

" ஆம்..."

" உங்களை மாவீரர் ஜூலியஸ் சீசர் அழைத்து வரும்படி ஆணையிட்டுள்ளார் "

" சீசரா..."

" ஆமாம்..."

"அலெக்சாண்டிரியாவில் நான் இருப்பதாக நினைத்துக்கொண்டு என் கணவனின் ஒற்றர்கள் கொடுவாள் ஏந்தித் திரிகிறார்கள். நான் இப்பொழுது வருவதற்கில்லை...இரவு வருகிறேன்...ஒரு சிறிய படகில் என்னை எதிர்பார்க்கலாம்...நான் நிறைய 'அவரை'க் கேட்டதாகச் சொல்லுங்கள்..."

கிளி புன்னகை இழையப் பேசிய பாங்கு, ரோமானிய மறவர்களையே திணறச் செய்தது. அவளுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, முடுக்கையும், முறைப்பையும் அடக்கி வைத்துக் கொண்டு திரும்பினார்கள்.

அவளுக்குச் சொல்ல முடியாத குதூகலம்! சீசரின் கட்டளை அவளுக்கு மனோகரமாக இருந்தது.

இரவு வந்துவிட்டது. உலகை இருள் விழுங்கி இருந்தது. வேலைக்காரனை அவசர அவசரமாக அழைத்தாள். அவன் அடக்கமாக அவளுக்கு முன்னர் வந்து நின்றான்.

" இப்பொழுது நான் அலெக்சாண்டிரியாவுக்குப் புறப்பட வேண்டும். படகைத் தயாராக வைத்துக்கொள். மெத்த இரகசியமான பிரயாணம்; தெரிகிறதா...?"

அவன் மௌனமாக இருந்தான்.

அவள் உள்ளே போனாள். ஒரு கம்பளத்தைக் கொண்டுவந்தாள். வேலைக்காரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

" இதோ பார்...இதில் என்னை மறைத்துப் பொட்டலமாகக் கட்டிப் ...படகில் கொண்டுபோக வேண்டும்...திறமையாகப் படகைச் செலுத்தவேண்டும்....என்ன ?"

" சரி அம்மா புறப்படுவோமா..."

அவள் கம்பளத்தில் படுத்தாள். அவன் சுருட்டிப் பொட்டலமாகக் கட்டினான். படகில் பக்குவமாக அந்தப் பொட்டலத்தைக் கிடத்தினான்.

படகு நீரைக் கிழித்தது! அலெக்சாண்டிரியாவை அந்தக்

காரிருளில் அது நெருங்கிக் கொண்டிருந்தது.

படகை எதிர்பார்த்து நின்ற ரோமானிய மறவர்கள் புளகாங்கிதத்தில் மூழ்கினார்கள்.

படகு கரைக்கு வந்து சேர்ந்தது. படகில் இருந்த பொட்டலத்தைக் கண்டு அவர்கள் திடுக்கிட்டார்கள். ஆத்திரத்தோடு கம்பளப் பொட்டலத்தைச் சீசருக்கு முன்னால் கிடத்திப் படகோட்டியைக் கனல் கக்கப் பார்த்தார்கள். படகோட்டி சிரித்தான்.

பொட்டலம் அவிழ்க்கப்பட்டது. அழகு லோக எழில் மங்கை மின்னலெனப் பளிச்சிட்டாள். சீசர் மதுமயக்கத்திலிருந்தபடியே என்ன என்ன என்று கண்கள் வியந்து நிற்க அந்த அழகியைச் சிரிப்போடு பார்த்தான். அவளுடைய முதல் தோற்றத்திலேயே இதயத்தைப் பறிகொடுத்தான். அவனுடைய ஐம்பத்து நான்காவது வயதின் வழுக்கலும், நரையும் சோம்பலை மறந்துவிட்டு, சுறுசுறுப்பைக் காட்டி, அந்த இருபத்தொரு வயதுக் காவியப் பாவையின் குளிர் நிழலில் உலகையே மறந்துவிட்டான். அவனுடைய மாவீரத்தனம் அவளிடம் மண்டியிட்டுவிட்டது.

அவளுடைய கணவன் இதைக் கேள்வியுற்றான். அவன் பதைபதைத்தான். அவனுடைய சடலத்தைத் தணல் கருகச் செய்துகொண்டிருந்தது. உறக்கத்திலும் அவன் காதில் கொலைவாள் துடித்துக்கொண்டிருந்தது.

கிளி இதைத் தெரிந்துகொண்டாள். மறந்துவிட்ட பகை மூண்டுவிட்டது. தன் செம்பவள உதடுகளால், சீசரின் மதுவழியும் இதழ்களுக்கு ஆணையிட்டாள். அக்கணமே பட்டாளம் கிளம்பிவிட்டது.

நைல்நதி தீரத்தில் அவளுடைய கணவனும், உடன் பிறந்த சகோதரனுமாகிய பகைவன் மாண்டு போனான்.

வெற்றிச் சிரிப்பு அவளைச் சிங்காரித்தது! எகிப்தின் இணையற்ற இராணியானாள். அவளுடைய சரிந்த சாம்ராஜ்யம் மீண்டும் எழிற்கோலம் பூண்டது.

எகிப்திய இராணி கிளி...ஆம் கிளியோபாட்ராதான் சீசரைக் கண்டு முறுவலித்தாள். சீசர் உச்சி குளிர்ந்தான். அவளுடைய இன்ப அனுபவத்தின் முத்திரையும் தோன்றிவிட்டது. குழந்தைப் பேறு இல்லாமல் வெதும்பிக்கொண்டிருந்த சீசருக்கு அவள் ஒரு மகனைப் பெற்றுத் தந்தாள்.

காதல் உறுதியாகிவிட்டது. சீசர் அவளை மணந்துகொள்ள விரும்பினான். அவன் நெஞ்சம் குழம்பியது. ஏற்கனவே அவன் மணமானவன். மீண்டும் ஒரு கலியாணம் என்றால், அவனுடைய 'பழைய இராணி' ஒப்புவாளா? அல்லது ரோமானியப் பெருமக்கள்தான் அவனுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்வார்களா? அவன் ஒருமுறை தேம்பினான். தன் மகனின் பிஞ்சு முகத்தைக் கண்டு அழுதான்.

ஆனால் கிளியோ துளியும் அதைக் குறித்துக் கவலைப்படவில்லை. அவள் எண்ணவளம் படைத்தவள். கற்பனைச் செழிப்பு நிரம்பியவள்.

மகனுக்குத் தந்தை யில்லை என்ற குறையிருக்கக் கூடாது; அவனைச் சீசரின் மகனாக அங்கீகரிக்கவேண்டும் என்பது அவளுடைய ஆவல். இதை எப்படிச் சாதிப்பது என்று அவளுக்குப் புரியவில்லை. ஊர் வாயை மூடுவதற்கு வழி காண அவளுக்கே சிரமமாக இருந்தது! எவ்வளவோ சிந்தனை செய்தாகிவிட்டது. ஒன்றுமே துலங்கவில்லை. வழி வகைகளை ஆராய்வதில் இம்மியளவும் பயனில்லை என்பது அவளுக்குத் தெரிந்துவிட்டது.

பேசாமல் மத குருக்களை அழைத்தாள். தூபம் போட்டாள். "ஜூலியஸ் சீசர் மனிதரல்ல. ஆண்டவன் திரு அவதாரம். இந்த உலகத்தை இரட்சிப்பதற்கு ஆண்டவனே சீசர் உருவில் பிறந்திருக்கிறார். எல்லோருக்கும் வரப்பிரசாதம் நல்குவதுபோல் இராணிக்கு ஒரு குழந்தையைப் பேரருள் செய்துள்ளார்..." என்று சொல்லும்படி அக்குருக்களுக்குக் கட்டளையிட்டாள். குருக்கள் அத் திருப்பணியை அபாரமாகச் செய்தார். ஊர் ஊமையாகிவிட்டது. அன்றைய எகிப்தியர்கள் நம்பிவிட்டார்கள். இளவரசன் பிறந்துவிட்டான் என்று மகிழ்ந்தார்கள்.

மனிதனை ஆண்டவனாகக்கூட மாற்ற என்னால் முடியும் என்று கூறுவதைப்போல் கிளி, சீசரைப் பார்த்து இதழ் மலர்ந்தாள். அவனோ அவளுடைய சக்தியின் அபார வித்தையைக் கண்டு அதிசயித்தான்.

*

ரோமானியத்தில் அதுவரை தோன்றாத பெருமறவன் **மார்க் அந்தோனி** தோன்றிவிட்டான். அவனுடைய தோள் வலிமை பயங்கரப் பகைகளை எல்லாம் தவிடு பொடியாக்கிக்கொண்டிருந்தது. அவன் வெற்றியிலே புரண்டு கொண்டிருந்தான். வாகை அவனோடு இழைந்துவிட்டிருந்தது.

அந்த வீரன் தன் படையுடன் கிழக்கில் வெற்றிக்கொடி நாட்டக் கிளம்பினான். கிழக்கில் செழிப்பானதும், சம்பத்து நிறைந்ததும் எகிப்து என்பதை அவன் அறிந்தான். அவனுக்கு எகிப்தின்மேல் ஒரு கண் விழுந்துவிட்டது. அவனுடைய மறவர்களில் சிலர் அலெக்சாண்டிரியாவைப் பற்றியும், இராணி கிளியோபாட்ராவைப்பற்றியும் கனல் கக்கப் பேசினார்கள். "கிளியோபாட்ராவைக் கொன்று விருந்து அருந்த வேண்டும்" என்று வீராவேசமாகப் பேசி வெறியூட்டினார்கள்.

அவனுக்குச் சினம் பெருகிவிட்டது. "கிளியோபாட்ராவா...யார் அவள்?" என்று சிறுத்தையைப் போல் சீறினான்.

*

கிளி நடுங்கினாள். கிடுகிடுத்தாள். பாய்ந்துவரும் அப்புலியின் வாயினின்று தப்புவது எப்படி? அவளுடைய காதலன் சீசரும் இல்லை. அவனும் இறந்துவிட்டான். சிறகொடிந்து நின்றாள். ஆனால் தைரியத்தைத் தளரவிடவில்லை. மார்க் அந்தோனி தன் நாட்டில் கால் வைக்காமல் இருக்க வழி என்னவென்று ஆராய்ந்தாள். வாள் முனையிலா? அது முடியாதது! தந்திரத்தாலா? அது பிய்த்தெறியப்படும். பிறகு? விழி முனையிலா...? அதனால் தான் முடியும் என்றுகூட அவள் எண்ணவில்லை. ஏதோ பார்ப்போம் என்ற தோரணையில்தான் இருந்தாள்.

அலங்காரக் கப்பல் ஒன்றில் வீரன் மார்க் அந்தோனியைப் பார்க்கப் புறப்பட்டாள். வண்ணங்களும், வாசனைத் தைலங்களும், பீலி இறகுகளும் அந்தக் கலத்தில் பரிமளித்தன. இத்தனைக்கும் மேல் அழகிகளின் நாட்டியக் கச்சேரி முக்கியத்துவம் பெற்றிருந்தது. கப்பலில் இருந்து அவள் இறங்கினாள். பட்டு வேய்ந்த சிங்காரக் குதிரை வண்டியில் மார்க் அந்தோனியைப் பார்க்கச் சென்றுகொண்டிருந்தாள்.

அச் சுந்தர தேவதையை மார்க் பார்த்தான். மாவீரம் மடிந்துவிட்டது. அவனும் தாசனாகிவிட்டான்.

மார்க் அந்தோனி மிகவும் முரடன். நினைவெடுத்த அவன் தோள்கள் எப்படியெல்லாமோ புரண்டன! அந்த ஆபத்தான ஆசாமியிடம் பழகி வெற்றியோடு இருக்க அவள் ஒரு தனி வழியை வகுத்துக்கொண்டாள்.

அவன் என்னென்ன விரும்பினானோ அவையெல்லாம் செய்தாள். அவனோடு மீன் பிடித்தாள்; வேட்டையாடினாள்; கவிதைகள் புனைந்தாள். பூமி இரவை அணைத்த நேரங்களிலெல்லாம் அவள் அவனை அணைத்தவாறு நடந்து, அவனுக்கு இன்பங் கூட்டினாள். அவனுக்குப் பிடித்த சுவையான பண்டங்களை எல்லாம் இரவுபகலென்று பாராமல் சமைத்துப் போட்டாள். அந்தோனி அவள் காட்டிய அன்பில் மதியை இழந்தான். மயங்கி நின்றான். அவளுக்கு **பொனிஷியா** கடற்கரை பூராவையும் அன்பளிப்பாகத் தந்தான். மேலும் **ஜெரிகோ** பிரதேசம், **சைப்ரஸ், கிரீட்** ஆகிய தீவுகளையும் பரிசளித்தான். முடிவில் ஆசியாவையே அவளுடைய பாத கமலங்களில் சமர்ப்பித்தான்.

இந்தச் சுவையான சேதி ரோமானியருக்குத் தெரிந்தது. அவர்களுடைய இரத்தம் கொதித்தது. "போர்முனைகளில் ரோமானிய வீரர்களின் இரத்தங் கொட்டியவை யெல்லாம் ஒரு எகிப்துக்காரிக்குப் பரிசளிக்கவா?" என்கிற வினா ஆகாயத்தைத் தொட்டது. புரட்சிப் பயங்கரக் கரங்கள் ஆவேசத்தைக் காட்டி வந்தன!

கிளியோபாட்ராவின் காலம் மலையேறிவிட்டது. அழகு லாகிரியிலிருந்து உலகம் விழித்துக் கொண்டது. கிளியோபாட்ரா—அந்தோனி ஆகியவர்களுடைய கப்பல்கள் நொறுக்கப்பட்டன! படை குலைக்கப்பட்டது!

மார்க் அந்தோனி தலை கவிழ்ந்தான். நெருங்கிவரும் பகைவர்கள் தன்னைக் கைது செய்து கொள்வதற்கு முன்னால் தன்னைத் தானே காயப்படுத்திக்கொண்டு தற்கொலை செய்துகொண்டான்! கிளியோபாட்ராவின் மென்கரங்களிலேயே ஆவி விட்டான்!

அப்பொழுதுதான் அவளும் உறுதி எடுத்துக்கொண்டாள். கரங்களில் விலங்கிடப்பட்டு ரோமானிய வீதிகளில் ஊர்வலம் வருவதை விட இறந்துவிடுவது என்பதுதான் அது. அதன்படி அவள் தற்கொலை செய்துகொண்டாள். அவள் எப்படித் தற்கொலை செய்துகொண்டாள் என்பது யாருக்குமே புரியவில்லை. அவள், இறந்து, இருபது நிமிடங்கள் கழித்துப் பார்த்தவர்களால் கூட இதனை முடிவு கட்ட முடியவில்லை. சிலர் அவள் கடித்துக்கொண்டு, பிறகு அந்த இடத்தில் நச்சுப் பாம்பின் விஷத்தைத் தடவிக்கொண்டு இறந்திருக்கிறாள் என்றார்கள். சிலர் அல்ல அல்ல, ஏதோ ஒரு விஷப் பூச்சியைபூக்கூடை மூலமாகக்கடத்தி வந்து, முடியில் தன் [illegible] தில் அதை விட்டுக் கடிக்கச் செய்து மாண்டிருக்கிறாள் என்றார்கள். ஆனாலும் இப்படித்தான் அவள் இறந்திருக்கிறாள் என்று கூற முடியாமல் போயிற்று.

இன்றுகூட அவள் மார்க் அந்தோனிக்குப் பக்கத்தில் எகிப்தில் எங்கோ அமைதி உறக்கம் செய்கிறாள். ஆனால் எங்கு? எந்த இடத்தில்? என்பது இன்னும் தெரியவில்லை! இது ஒரு பரிதாபம்தான்.

அகில பிரசித்தி பெற விரும்பும் நண்பர்களே வாருங்கள், யாருக்கும் சொல்லிவிடாதீர்கள். உங்கள் புகழ் உலகமெல்லாம் அடிபடவேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறதா? அப்படியானால் அலெக்சாண்டிரியாவுக்குச் சொல்லுங்கள். கிளியோபாட்ராவின் கல்லறையைக் கண்டுபிடித்துச் சொல்லுங்கள்... பிறகு நீங்கள் உலகப் புகழ் பெற்றுவிடுவீர்கள்! புறப்படுவீர்களா?

கிளியோபாட்ரா இணையற்ற அழகி! இரண்டு உலகப் புகழ் பெற்றுவிட்ட மறவர்களை மயக்கிவிட்டவள்! இரண்டாயிரம் ஆண்டுகளாகிவிட்டன! இன்னும் அவள் பெயரை எல்லோரும் அறிவார்கள். அப்படி என்ன அவள் சாதனை?

ஒன்றுமே இல்லை. அவள் ஒரு பேரழகி—அவ்வளவுதான்!

—"திராவிட நாடு"

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.